# சேரர் வரலாறும் பழனிமலை வாழ் பழங்குடி மக்களும்

ஆதி. பாலசுந்தரன்



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# சேரர் வரலாறும் பழனிமலைத் தொடர் வாழ் பழங்குடி மக்களும்

ஆதி. பாலசுந்தரன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-430-4

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 387

| | | |
|---|---|---|
| நூல் | : | சேரர் வரலாறும் பழனி மலைத்தொடர் வாழ் பழங்குடி மக்களும் |
| ஆசிரியர் | : | ஆதி. பாலசுந்தரன் |
| பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2043, புரட்டாசி<br>முதற்பதிப்பு - செப்டம்பர் 2012 |
| பக்கம் | : | 166 + 8 |
| அளவு | : | டெம்மி 1/8 |
| தாள் | : | டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ |
| படிகள் | : | 1200 |
| விலை | : | **உரூ. 120.00** |
| ஒளியச்சு | : | முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ்,<br>தெற்கு வீதி, தஞ்சாவூர். |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக<br>மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர். |

**முனைவர் ம. திருமலை**
துணைவேந்தர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010
17.09.2012

# அணிந்துரை

உலகின் தொன்மை வாய்ந்த மொழிகளுள் ஒன்றான நம் தமிழ்மொழி தனிச்சிறப்புமிக்க மொழியுமாகும். முந்தையர் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததையும் அவர் சிந்தையில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் தோன்றிச் சிறந்ததையும் நம் தமிழ்மொழி இலக்கியங்கள் நன்கு எடுத்தியம்புகின்றன. மூவாயிரம் ஆண்டுகள் பழைமையுடைய இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலேயே 'என்மனார் புலவர்' என்றும், 'சொல்லிய முறையான் சொல்லவும் படுமே' என்றும், 'முன்னோர் மொழி' என்றும், 'நுவன்றிசினோரே' என்றுமெல்லாம் வரும் சொற்றொடர்கள் தொல்காப்பியர் காலத்திற்கும் பன்னெடுங்காலம் முன்பிருந்தே தமிழ் மக்கள் நாகரிக முதிர்ச்சியும் வளர்ச்சியும் பெற்றுத் திகழ்ந்தனர் என்பதைப் பறைசாற்றுகின்றன. இத்தகைய தொன்மைச் சிறப்பு மிக்க தமிழ் நிலத்தை மூவேந்தர்கள் ஆட்சி புரிந்து வந்துள்ளனர். மூவேந்தர்களைக் குறிப்பிடும்போது சேர சோழ பாண்டியர்கள் எனும் முறைமையே தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. முந்து நூலாகிய தொல்காப்பியம் கூட,

**போந்தை வேம்பே ஆர்என வரூஉம்**
**மாபெருந் தானையர் மலைந்த பூவும்**

என்றே குறிப்பிடுகிறது. இதில் போந்தை என்பது பனம் பூ மாலையைக் குறிக்கும். பனம்பூ மாலையை அடையாளச் சின்னமாக அணிந்து கொள்பவர்கள் சேரமன்னர்கள், வீரர்கள்தாம். இதிலிருந்து தொல்காப்பியரேகூடச் சேரர்களையே வரிசை முறையில் முதற்கண் வைத்துக் கூறியுள்ளமையை அறியலாம். இதனையடுத்துச் சங்க இலக்கியங்களில் சேரமன்னர்களைப் பற்றிய செய்திகள் நிரம்பவே இடம் பெற்றுள்ளன. எட்டுத்தொகையுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்து சேரமன்னர்களின் ஆட்சிச்சிறப்பு, கொடை, வீரம், புகழ் பற்றியெல்லாம் தனிச்சிறப்பாக எடுத்துரைக்கிறது. பாரதப்போர் நடந்தபோது படை வீரர்களுக்குப் பெரும் அளவில் உணவு அளித்து உதவியதாலோ, இறந்துபட்ட வீரர்களுக்குப் பிண்டம் வைக்கச் சோறு அளித்ததாலோ ஒரு சேரமன்னன் பெருஞ் சோற்று உதியஞ் சேரலாதன் என்றே அழைக்கப்படுகிறான். இத்தகைய சான்றுகள் சேர மரபு மிகமிகத் தொன்மை வாய்ந்த மரபு என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

தொன்மை வாய்ந்த - சிறப்பு மிக்க இச்சேரர்களின் வரலாறு பற்றியும் சேரர்களுக்கும் பழனிமலைத் தொடர்வாழ் பழங்குடி மக்களுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் இந்நூல் நுணுக்கமாக ஆய்ந்துரைக்கிறது. சேரர் எனும் பெயர்க்காரணம் நன்கு விளக்கப்படுகிறது. குமரிக்கண்டத்திலிருந்த சேரர்கள் கடல்கோளுக்குப் பின் தற்போதைய குமரிப் பகுதிக்கு வந்து தங்கி, மேற்கு மலைப்பகுதிகளுக்குப் பரவினர் என்பதையும், மேற்கு மலைத் தொடர்ச்சிப் பகுதியாகிய பழனிமலைத் தொடரில் வாழும் பழங்குடி இனத்தவரிடையே சேர மரபின் தாக்கம் மிகுதியாகக் காணக் கிடப்பதையும் நூலாசிரியர் தக்க சான்றுகளுடன் நிறுவுகிறார். மலைப்பெயர்கள், ஊர்ப்பெயர்கள், மனிதர்களின் பெயர்கள், பழக்கவழக்கங்கள், ஆடல் பாடல்கள், வழிபாட்டு முறைகள், திருவிழாக்கள் போன்ற பலவற்றிலும் சேரநாட்டுத் தாக்கம் இருப்பதை நன்கு விளக்குகிறார்.

பூம்பாறை, கொடைக்கானல் ஆகிய ஊர்ப்பெயர்கள் திரிந்து வழங்குபவை என்பதையும், இவற்றின் உண்மையான பெயர்கள் பூம்பொறை, கோதைக்கானல் என்பதையும், சேர மன்னர்களின் தொடர்பால் ஏற்பட்ட பெயர்கள் இவை என்பதையும் ஆசிரியர் விளக்கும் திறம் அழகாய் உள்ளது. சேரர் வரலாற்றிற்கும் பழனிமலைத் தொடர்வாழ் பழங்குடி மக்களுக்கும் உள்ள பல்வேறு தொடர்புகளை - இதுவரை அறிந்திராத பல தகவல்களை

அளிப்பதில் ஆசிரியரின் பரந்துபட்ட தமிழறிவு, கல்வெட்டு - வரலாற்றுப் பயிற்சி, ஆய்வு வேட்கை, நுண்மாண் நுழைபுலம் ஆகியன அவருக்குக் கைகொடுத்திருக்கின்றன. இதில் ஆராய்ந்து சொல்லப்பட்டுள்ள முடிவுகள் பலருக்கு உடன்பாடாக இருக்கலாம்; இல்லாமலும் போகலாம். இதில் தவறில்லை. ஆயினும், வரலாற்றாய்வாளர்களின் கவனத்தை இந்நூல் ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

பள்ளி ஆசிரியராக இருந்தபோது மலைப்பகுதிகளில் கள ஆய்வு மேற்கொண்டு அதனடிப்படையில் இச்சிறந்த நூலை ஆக்கித் தந்துள்ள புலவர் ஆதி. பாலசுந்தரன் அவர்களின் இப்பெரு முயற்சியைப் பாராட்டி மகிழ்கிறேன். தமிழுலகிற்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

# முன்னுரை

1959இல், கோடைக்கானல் கீழ்ப்பழனி மலைத்தொடர், சிற்றூர்ப் பள்ளி ஒன்றில் தமிழாசிரியராகப் பணியாற்றினேன். மலைவாழ் பழங்குடி இனப் பிள்ளைகளும் அதில் பயின்றனர்.

விடுமுறை நாள்களில், அப்பிள்ளைகளோடு மலைவாழ் பழங்குடி இன மக்கள் வசிக்கும் குடியிருப்புப்பகுதிகளுக்குச் சென்று அவர்களின் பேச்சு, வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள் முதலியவற்றை ஓராண்டு வரையில் கவனித்து வந்தேன். இவர்களிடையே இனக்குழுக்கள் உண்டு. இவர்களின் வாழ்க்கை முறையில் சேர நாட்டின் தாக்கம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்தேன்.

இவர்களுடைய பேச்சில் தூய பழந்தமிழ்ச் சொற்கள், 'மலையாள வாடை' கலந்த சொற்கள் இருந்தன.

இம்மலைப் பகுதியில் அமைந்துள்ள சில இடப்பெயர்களும், தமிழிலக்கியங்களில் வரும் சில இடப் பெயர்களும் இயைந்துள்ளன. அன்றைய சேரநாட்டு ஊர்ப் பெயர்களும் கீழ், மேல் பழனி மலைத்தொடர்களில் அமைந்துள்ளன.

பண்டைச் சேரநாட்டுக்கும், பழனிமலைத் தொடருக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக எனக்குப் புலப்பட்டதில் மகிழ்ச்சி; வியப்பு!

மேலும் இதுபற்றிச் சிந்தித்தேன். புல்லாற்றூர், பூம்பாறை - பூம்பொறை, கோதைக்கானல் - கோடைக்கானல், வீழிகுழல், கண்ணார்குழல் (இசைக்கருவிகள்), மன்றில், குன்றாட்டம் - கூடியாட்டம் - உண்டாட்டு, மதிய நிலா ஆட்டம், கார்த்திகைப் பேரொளிச் சுடர், வழிபடு தெய்வங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைச் சான்றுகளுடன் விவரித்துள்ளேன். வாழ்க்கை முறையையும் விளக்கியுள்ளேன்.

முடிமன்னர் மூவர் பெயரைத் தொல்காப்பியனார் ''மூவர்'' என்னும் தொகைச்சொல்லால் மட்டும் சுட்டுகின்றார். மூவரின் வரிசை முறைமையினை, போந்தை வேம்பு ஆர் எனக் குறிப்பால் உணர்த்துகின்றனர்.

அசோகர் கல்வெட்டு, மெகஸ்தனிஸ் குறிப்பு, முத்தொள்ளாயிரம் ஆகியவற்றிலும் பரிமேலழகர் முதலான அறிஞர் பெருமக்களின் கூற்றுகளிலும், 'சேர சோழ பாண்டியர்' என்னும் முறைமையே உள்ளது. இன்றளவும் அவ்வாறே.

ஆனால், திருஞானசம்பந்தர் (திருப்பூவணப் பதிகம்) மணிவாசகர் (திருவாசகம் - குயிற்பாட்டு) இருவரும், 'பாண்டியர், சேரர், சோழர்' என்று குறிப்பிடுகின்றனர்.

பேரா. முனைவர் கி. நாச்சிமுத்து அவர்கள் எழுதிய, ''சிலப்பதிகாரத்தில் மலைநாட்டு வழக்குகள்'' என்னும் ஆய்வுக் கட்டுரை இந்நூலை யான் எழுதுவதற்கு உந்துதலாக அமைந்தது.

நான்காண்டுகளாக வேண்டிய தரவுகளைத் திரட்டி எழுதி முடித்தேன்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் சார்பில் வெளியிட இசைவளித்த முன்னைத் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும், தற்போது இந்நூல் விரைந்து வெளியிடப்பட ஆவன செய்த மாண்பமை துணைவேந்தர் முனைவர் ம. திருமலை அவர்களுக்கும் என் தூய உளமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் மகிழ்வுடன் தெரிவிக்கிறேன்.

இந்நூல் பல்கலைக்கழக வெளியீடாக வருவதில் எனக்குப் பெருமகிழ்ச்சி.

நல்ல கட்டமைப்புடன் சிறப்பாக இந்நூல் வெளிவர ஏற்பாடு செய்த என் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய, பல்கலைக் கழகப் பதிப்புத்துறை இயக்குநர் திரு. வை. கண்ணபுரக்கண்ணன் அவர்களுக்கு எனது அகம் நிறைந்த நன்றியும் வணக்கமும்.

தென்கடலுள் பழந்தமிழக வரலாறு புதையுண்டு கிடப்பது போன்று, மேலைமலைத் தொடரகத்தும் மறைந்து கிடக்கிறது. வெளிவரின் மேலும் விளக்கம் பெறலாம். இந்நூலைத் தமிழறிஞர் உலகம் ஏற்கும் என்னும் நம்பிக்கை உடையேன்.

சென்னை
*13.09.2012*

அன்பன்
**- ஆதி. பாலசுந்தரன்**

# பகுதி ஒன்று

## முன்னுரை

அண்மைக் காலங்களில் தொடர்ச்சியாகப் பல கல்வெட்டுச் சான்றுகள், செப்புப் பட்டயங்கள், அகழாய்வுச் சான்றுகளான முதுமக்கள் தாழிகள், நாணயங்கள், ஓட்டுச் சில்லுகளின் எழுத்துப் பொறிப்புகள், பழங்காலச் சமுதாய மக்கள் பயன்படுத்திய பொருள்கள் முதலியன கிடைத்து வருகின்றன.

இவை தென் இந்திய வரலாற்றைச் சுட்டித் தெளிவுபடுத்துவதில் தவிர்க்க முடியாத இடம் பெற்று வருகின்றன.

இதனால் தென் இந்தியாவின் உண்மை வரலாறு தற்போது வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கிறது.

சமூகத்தில் நிலவுகின்ற கலாச்சார, பண்பாட்டு ஒற்றுமை வேற்றுமைகள், வழக்கில் இல்லாத மொழிகள், பல இனக் குழுக்கள் பேசுகின்ற மொழிகள், மலைவாழ் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்ற வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை ஆராய்தல் வேண்டும். அவ்வாறு ஆராயும்போது மானிட வரலாற்றை அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கிறது.

''தமிழகத்தில் சங்ககால வரலாற்றைக் கோவையாக எழுதுவதற்கு வேண்டிய தடயங்கள் கிடைக்காதபடியால் அவ் வரலாறு தம் நூலில் இடம் பெறவில்லை என்று R.C. Majumdar, History and Culture of the Indian people, Vol. II, Preface" கூறும் செய்தியை வி.பி.புருசோத்தம், ''சங்க கால மன்னர் கால நிலை வரலாறு - தொகுதி - I'' என்ற தமது நூலின் முன்னுரையில் எடுத்துக் காட்டுகின்றார்.

''சங்க இலக்கியங்களின் காணப்படுகின்ற வரலாற்றுக் குறிப்புகளை ஆய்ந்து வெளிக் கொணர்தல் வேண்டும்.''[1]

சங்க இலக்கியங்களைக் கூர்மையாக ஆராய்தல் வேண்டும். அவ்வாறு ஆராயுங்கள் கி.மு. இரண்டாயிரத்துக்கும் முன்பே, தமிழ்கூறும் நல்லுலகின் இயற்கை வளச் செறிவு, வாழ்ந்த மக்களின் சமூகம், சமூகச் சிந்தனைகள், சமூக நடத்தை கள், அந்நடத்தைகளை நெறிப்படுத்தும் அறநெறிகள், அரசியல் அமைப்பு முறைமைகள், பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை நேரிடையாகவும், குறிப்பாகவும் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கிறது.

மேலும் சங்க கால மக்களின் சமூக வாழ்க்கை, அவ் வாழ்க்கையில் கிடைக்கும் மகிழ்ச்சி, அறநெறி திறம்பா வாழ்க்கை முறை ஆகியவற்றையும் அறிந்து கொள்ளலாம்.

## சேரர் வரலாறு பற்றிய கருத்து

''நம் நாட்டில் சங்க இலக்கியங்களுக்குப் பின் தோன்றி யவை யாவும் விண்ணவர், தேவர், அசுரர் வாழ்வையும் பெருமை யையும் விரித்துக்கூறி மண்ணவர் வரலாற்றை அறவே புறக் கணித்து விட்டன.''[2]

''தமிழ் நாட்டின் வரலாறு காண முயன்றோருள் பெரும் பாலோர் பல்லவ சோழ பாண்டிய நாட்டு வரலாறுகளையே மேன்மேலும் ஆராய்ந்தனரேயன்றி, அதன் மேலைப்பகுதியாகிய சேரநாட்டு அரசர்கள் வரலாற்றைக் காண முயலவில்லை. இதற்குக் காரணம் இத்துறையில் முயன்றோர் பலரும் சேர நாடு இன்று கேரள நாடாக மாறிவிட்டது கண்டு மயங்கினமையேயாகும்.''[3]

''சேரநாடு செந்தமிழ் வழங்கும்திருநாடாக விளங்கிய காலத்து வேந்தர்களே நாம் காணலுறும் சேர மன்னர்கள். 'கேரளோற்பத்தி', 'கேரள மான்மியம்' என்னும் இரண்டு நூல்களும் பிற்பட்ட காலத்தவரான விசய நகரவேந்தர்களைப் பற்றியும் கூறுவதனால், இவை காலத்தால் மிகவும் பிற்பட்டவை என்பது சொல்லாமலே விளங்கும். இவற்றைக் கொண்டு பண்டைச் சேர நாட்டைக் காண்பதற்கு வழியில்லை.''[4]

ஆனால், இன்றைய கேரளத்து மன்னர்களாகப் பெயர் கொண்டு விளங்குபவர்கள் தாங்கள் சேர மன்னர் பரம்பரையினரே; வரலாற்றில் தெரியவரும் முதல் சேர மன்னன் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் மரபில் வந்தவர்களே எனப் பெருமையுடன் கூறுகின்றனர். இது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## சேரநாடு கேரளம் ஆனது

அசோக மன்னனுடைய கல்வெட்டுக்கள், ''கேரள பளய சத்திய புத்திர கேரள புத்திர தம்பபானி'' என்று குறிப்பிடுகின்றன.

இதில், சேர மன்னர்களை மட்டும் தனித்துக் கூறியுள்ளமை அறியலாம். எனவே, சேரமன்னர்களின் காலப் பழைமையும், அதனால் ஏற்பட்ட முதன்மையும் கருதற்பாலது.

இதனால் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலேயே சேரநாடு கேரளநாடு என வடவரால் வழங்கப் பெற்றது.

இக்கல்வெட்டுச் செய்தியை அடியொற்றி தகடூர் அதியமான் கல்வெட்டு ஒன்று ''சத்திய புத்திர'' எனச் சேர மன்னரைக் குறிப்பிடுகிறது.

''சேர நாட்டில் முதன்முதல் கலத்தின் வழி வந்து கால் பதித்த போர்த்துக்கீசியர், சேர மக்களோடு கலந்து ஒரு கலாச்சாரச் சீரழிவை ஏற்படுத்திவிட்டனர். இந்தோ- போர்த்துக்கீசிய இனம் என்றொரு இனக்குழுவினர் தோன்ற வழி வகுத்துவிட்டனர்.''[5]

புது இனமாகிய இந்தோ-போர்த்துக்கீசிய இனம் ஒன்று மேலைக் கடற்கரையில் தோன்றியதை இச்சான்றால் அறியலாம்.

இந்த இனம் தோன்றிய செய்தி இந்து நாள் இதழ்ச் செய்தியாகவும் அண்மையில் வெளிவந்துள்ளது.

இந்த இனம் தோன்றிய செய்தியைப் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரும், "The Portuguse Influence Reveated by Tamil Words" என்னும் கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

காலம் மாறும்போது கலாச்சாரமும் மாறுபடுகின்றது.

## சேரர்

''சேர சோழ பாண்டியர் முத்தமிழ் அரசர்கள். அவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழகத்தை ஆண்டு வந்துள்ள னர். இதை நாம் வரலாற்றால் தெளிவாக அறிகிறோம். ஆனால் மக்கள் மரபும், இலக்கிய மரபும் அவர்கள் உலகத் தொடக்கம் முதலே மூன்று அரச மரபுகளாக இருந்தனர் என்று கூறுகின்றன. இவை மூன்றும் முதலில் ஒரே அரச மரபாயிருந்தது என்று மலையாள நாட்டு மக்கள் மரபும், இலக்கிய மரபும் குறிக்கின்றன.''[6]

இங்கே சொல்லப்படும் ஒரே அரச மரபு எது? என்பது இந்தச் சான்றில் குறிப்பிடப்படவில்லை.

கடல்கோளால் அழிந்து போன குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதிகளாக இப்போதைய குமரி முனைப் பகுதியும் மேலை மலைப் பகுதியும் விளங்குகின்றன.

மேலை மலைத் தொடரின் காலப் பழைமை, அரிய உயிர் இனம், பல்லுயிர்ப் பெருக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ''உலகப் பாரம்பரிய மரபுரிமைச் சின்னமாக'' அறிவிக்க வேண்டும் என்று நடுவணரசு யுனெஸ்கோவுக்கு வேண்டுகோள் அண்மையில் விடுத்துள்ளது என்பது, மேலை மலைத் தொடரின் காலப் பழைமைக்கு மேலரண் தரும் சான்றாகும்.

குமரிக் கண்ட நாகரிகத் தொட்டிலின் எஞ்சிய அரச மரபினராக சேர அரச மரபினர் இருந்திருத்தல் வேண்டும்.

சேர அரச மரபிலிருந்து சோழ பாண்டிய மரபினர் தோன்றி யிருத்தல் வேண்டும். இது ஓர் அனுமானமே.

இறையனார் களவியலுரை சுட்டும் 'சங்கம்' பற்றிய செய்தி கள் பிற்காலப் புனைவு எனக் கருதினால், வான்மீகி கூறும் கபாட புரம், பாண்டிய மன்னர் பற்றிய செய்திகள் புனைந்துரையா என எண்ண வேண்டியது வரும்.

## மூவேந்தர் வரிசை முறைமை

சேர சோழ பாண்டியர் எனக் கூறும் வரிசை முறைமை எதனால் ஏற்பட்டது? எப்போது வந்தது? ''போந்தை வேம்பே ஆர் என வரூஉம்'' என வரும் முறைமையினைத் தொல்காப்பியனார் ஏன் கூறினார்? என்பனவற்றைச் சிந்திக்கலாம்.

சேரருடன் நெருங்கிய தொடர்புடைய மலை, மலை சார்ந்த இடமாகிய குறிஞ்சியை முதலில் சொல்லும் மரபுக்குக் காரணம் என்ன? இதனைப் பற்றியும் சிந்திக்கலாம்.

1. ''கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடி''யினர் குமரிக் கண்டத் தமிழர்கள். இவர்கள் மலையிலே தங்கி வாழ்ந்தவர்கள்.

2. குமரிக்கண்ட அழிவுக்குப் பிறகு, எஞ்சியவர்கள் குமரி மண்ணுக்கும் மேலை மலைத் தொடர்ப் பகுதிக்கும் குடி பெயர்ந் தனர் எனவும் குமரிக்கண்ட ஆய்வாளர் கூறுகின்றனர்.

பண்டைய உரோமப் பேரரசு ஏழு குன்றுகளின் மீது அமைக்கப்பட்டிருந்தது. அவற்றுள் பண்டைய உரோமானியர் களின் தெய்வமான ஜூபிடரின் கோயில் அமைந்திருந்த குன்று, கேபிடோலின் (Mons Capitolinus) என்பது. இம்மலை மீதுதான் அவர்களின் தலைநகரம் அமைக்கப்பட்டிருந்தது. எனவே, பழங் காலத்திலேயே மலைமீது கோயிலும், தலைநகரும் மன்னன் அமைக்கும் மரபு இருந்துள்ளது. இதனைச் சேரர்களின் செயலோடு ஒப்பிடலாம்.

வடவேங்கடம், ஏழுமலைக் கோயில் இரண்டும் இவ் விடத்து ஒப்பு நோக்கத்தக்கது.

இலங்கைத் தீவின் தென்கோடியில்''அம் பலங்கொடா'' என்னும் மலைசார்ந்த இடம் உள்ளது.'அம்பலங்கோடு' என்னும் தூய தமிழ்ப் பெயரே, சிங்கள ஒலிப்பில் 'அம்பலங்கொடா' என வழங்கப்படுகிறது.

அம்பலங்கோடு ⟶ கோட்டு அம்பலம். இங்கும் சேர நாட்டுக் கோட்டம்பலம்.

3. சேரநாடு, மலைநாடு, மலைப்பார்: சேரர் வானவர் என உயர்த்திச் சொல்வதும்,

4. சேர நாட்டு சிவத்தலங்களை 'மலை நாட்டுத் தலங்கள்' எனத் திருமுறைகள் குறிப்பிடுவதும் ஆகியவெல்லாம் மேற்கூறிய வற்றோடு இயைகின்றன.

5. ''கடல் கொண்ட குமரிக் கண்டத்தில், 'தில்முன்' என் னும் ஒரு நாட்டுப்பகுதி இருந்தது. அந்நாட்டில் 'இய' என்னும் தெய்வப் பெயரும், 'இயவுள்' என்னும் கடவுள் பெயரும் வழக்கில் இருந்தன. இவை தமிழ்ச் சொற்களே....

.....நக்கீரர் குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகப்பெரு மானைப் 'பெரியோரேத்தும் பெரும்பெயர் இயவுள்' எனத் திரு முருகாற்றுப்படையில் வணங்குகின்றார். 'இயவு' என்னும் சொல் பரிபாடலிலும் ஆளப்பட்டுள்ளது.''[7]

6. இக்கூற்றுக்கு அரண் செய்வதுபோல், கேரளத் திரிசிவப் பேரூர் (திரிசூர்) இராமவர்மா சாக்தன் ''நாலு கெட்டு அரண் மனையில், குமரிக் கண்டத்தில் வழங்கிய'' இயவுள்' பெயரைக் கொண்டு, தாய்க் கடவுள், குலதெய்வக் கடவுளாக வழிபடப்படு கிறது.

7. ஆங்கிலத்தில் Eyyal, Eeyyal என இருவகையில் குறிக்கப்படுகிறது.

'இயவுள்' என்னும் தமிழ்ச் சொல்லின் வடிவமும், பொருளும் அறியாத நிலையில் இவ்வாறு குறித்துள்ளனர்.

8. குமரிக் கண்டத்தில், 'இயவுள்' கடவுள் என மட்டுமே குறிக்கப்படுகிறது.

9. நக்கீரர் 'இயவுள்' எனக் குறிஞ்சிக் கடவுள் செவ் வேளைப் போற்றுகின்றார்.

10. ஆனால் நாலு கெட்டு அரண்மனையின் குலதெய்வம் தாய்க்கடவுளாக 'இயவுள்' வணங்கப்படுகிறது.

இவள் 'காட்டகாம்பாள்' எனவும் இவ்வரண்மனையில் பெயர்சுட்டப்படுகின்றாள்.

இவ்வழிபாட்டுமுறை, குமரிக்கண்டம் மறைந்தாலும், ஆங்கு வழக்கிலிருந்த தாய்த் தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சி யாகக் கருதலாம்.

'பத்திரகாளி' (பத்திரம்⟶பத்ரம்⟶இலை) இதன் தொடர்ச்சியே.

11. மேலும், சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும்'சாக்தன்' என்னும் பெயர் இம்மன்னனின் பெயரோடு இணைந்திருப்பது, 'சாக்தன்' பிற்கால வழக்காயினும், தொல் தாய்த் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புபடுத்துகிறது.

இதனாலும், சேரரின் தொன்மை தெரிய வருகிறது.

12. சங்கம் மருவிய நூலான'முத்தொள்ளாயிரத்திலும்' சேர சோழ பாண்டியர் எனக் கூறும் வரிசை முறைமையே அமைந் துள்ளது.

13. ''சேர சோழ பாண்டிய நாடுகளிலும், இலங்கையிலும் பௌத்த சமயப் பிரசாரகரை அனுப்பியுள்ளேன்'' என அசோகன் கல்வெட்டு கூறுகிறது.

இதிலும் இதே வரிசைதான்.

14. ''தொன்று தொட்டு வருதல் சேரசோழ பாண்டியர் என்றார் போல'' என்கிறார் பரிமேலழகர்.

அதாவது ''தொன்று தொட்டுவருதல்'' என்னும் தொட ருக்கு, ''சேர சோழ பாண்டிய மரபினர் தொன்று தொட்டு வருதல் போல'' என உவமையாகக் கூறுகின்றார். இதிலும் முற்கூறிய வரிசை முறைதான்.

15. ''படைப்புக் காலம் தொட்டு மேம்பட்டு வரும் குடி யினர்'' என மூவேந்தரைக் குறிப்பிடுவதும் இங்குக் கவனிக்கத் தக்கது.

16. ''மேலோர் மூவர்க்கும் புணர்ந்த காரணம்'' (தொல். நூ. 1090) என்னும் நூற்பாவில் 'மேலோர் மூவர்' என்பதற்குச் சேர சோழ பாண்டியர் என்ற வரிசை முறை பற்றியே அறிஞர் சிலர் பொருள் சொல்லுகின்றனர். 'மேலோர்' என்பது மூவேந்தரைக் குறிப்பதாகக் கொள்ளுகின்றனர்.

17. சேர சோழ பாண்டியர் என்னும் வரிசை முறையே பெரும்பாலும் சொல்லப்படுகிறது.

இது, மூவேந்தர்களின் கால வரிசைமுறையாக இருக்கக் கூடுமா என்னும் ஐயமும் எழுகிறது. இது, மேலாய்வுக்குரியது.

18. தொல்காப்பியம் மூவேந்தர் பெயரைத் தனித்தனியே சொல்லவில்லை.

'மூவர்' என்ற தொகைச் சொல்லால் பொதுவாகக் குறிப்பிடுகிறார்.

ஒருகால், அவரும் சேர சோழ பாண்டியயர் என்னும் வரிசை முறையை உளத்தில் கொண்டு சொல்லியிருக்கலாம்.

இவ்வரிசை முறை பழங்காலம் முதலே வழக்கில் இருந்து, யாவரும் அறிந்த ஒன்றாகலின், தனித்தனியே சொல்ல வேண்டியதில்லை என அவர் கருதியிருக்கலாம்.

அவ்வாறு சொல்லாமல் போனாலும், ''போந்தை வேம்பே ஆர் என வரூஉம்'' என அடையாள மாலையைச் சொல் லுங்கால் சேரர், பாண்டியர், சோழர் என்னும் வரிசை முறை யினைச் சொல்லுகின்றார்.

எனினும், சேரரையே முதலில் சுட்டுவது கருதத்தக்கது.

மூவேந்தரைக் கூறும் வரிசை முறையில், எல்லா இடங் களிலும் சேரர் குடியே முதலில் சொல்லப்படுகிறது.

இதற்குக் காரணம் என்ன?

குமரிக் கண்டம் 700 காவதம். அதன் அழிவுக்குப் பிறகு, எஞ்சிய பகுதியில், சேரநாடு மட்டும் 50 காதம். சோழ பாண்டிய நாடுகள் சேர்ந்து 50 காதம் எனக் குமரிக்கண்ட ஆய்வாளர் கூறுவர்.

பரப்பளவில் பெரிய நாட்டுப் பகுதியாக விளங்கிய காரணத்தால் சேரர் முதன்மை பெற்றிருப்பர். மலையாள நாட்டு மக்கள் மரபும், இலக்கிய மரபும் கூறுவதால்தான், சேரரை முதலில் கூறும் முறை ஏற்பட்டிருக்கலாமோ என எண்ணினால், அவ்வாறு கூறியது எப்போது என்பது தெளிதல் வேண்டும்.

மாங்குளம் (மீனாட்சிபுரம்) கல்வெட்டில் பாண்டியன் நெடுஞ்செழியன் காலம் கி.மு.175-150 என அறிய முடிகிறது.

இவனுக்கு முந்தியவன் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டி யன், இதைக் கொண்டு, பாண்டிய மரபினரே மூவருள் முதலாமவர் எனக்கருதினால்,

1. சேர சோழ பாண்டியர் எனத் தொன்று தொட்டுச் சொல்லி வருவது.

2. ''போந்தை வேம்பே ஆர்'' எனத் தொல்காப்பியம், பனம்பூ அடையாள மாலையை முதலில் கூறுவதன் மூலம் சேர மரபினை முதலில் குறிப்பிடுவது,

3. ''படைப்புக் காலம் தொட்டு'' ''தொன்று தொட்டு வருதல் சேர சோழ பாண்டியர்'' என வரிசை முறை சொல்லப்படுவது ஆகியவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இதனால் சேரரை மூவருள் முதல் மரபினராகக் கருத வாய்ப்புள்ளது.

## முறை வைப்பு மாறியுள்ளது

மூவேந்தர் முறை வைப்பு மாறியுள்ளமையும் காணலாம். ''போந்தை வேம்பே ஆர்'' எனத் தொல்காப்பியர் சேரர், பாண்டியர், சோழர் என மாற்றிக் கூறியுள்ளதைப் போன்றே,

1. மதுரைக்கு அருகில் திருப்பூவணம் சிவத்தலத்துக்கு எழுந்தருளிய ஞான சம்பந்தப் பெருமான், சிவபெருமானைப் பாடிப் பரவுங்கால், ''முறையால் முடிசேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும்''எனவும்,

***''ஆரா அன்பில் தென்னன் சேரர் சோழர்கள்***
***போற்றிசைப்ப''***

எனவும் தென்னன் எனப் பாண்டிய மன்னரை முதலில் கூறி, பின்னர் அவ்விருவரையும் சுட்டுகின்றார்.

இங்கே மூவர் முறை வைப்பு மாறியுள்ளது. தலம் பாண்டிய நாட்டுத் தலம்.

2. ''புறப்பாட்டும் சேரன் பாட்டு, பாண்டியன் பாட்டு, சோழன் பாட்டு என்னும் முறையில் தொகுக்கப்பெற்றுள்ளது.''[8]

3. ''புறநானூற்றிலும் பாடல்கள், ஒருமுறை பற்றியே தொகுக்கப்பெற்றுள்ளன. சேர பாண்டிய சோழர் என்ற நிரலில் தொன்று தொட்டுத் தமிழ்நாட்டை ஆண்டு வந்த முப்பெரும்

வேந்தர் தம் பரம்பரை வரிசையை உணர்த்துகின்ற முறையில் அதன் பாட்டுக்கள் நிரலாக அமைந்துள்ளன.''[9]

இத்தொகுப்பு நிரலில் எங்ஙனம் அமைந்தாலும் முதலில் சொல்லப்படுபவர்கள் சேர மன்னர்களே. அவர்கள் இடம் மாற வில்லை என்பது மனத்தில் கொள்ளத்தக்கது. இப்பெருமக்கள் எல்லாரும் சேரரை முன்வைத்து ஏன் சொல்லுகிறார்கள் என்பது வரலாற்று நோக்கில் சிந்திக்க வேண்டியது இன்றியமையாதது. சேரரைப் பற்றிய மாபெரும் வரலாற்றுண்மை எங்கோ மறைந் துள்ளது போதும்.

சேரநாட்டில் கோயில்களை 'அம்பலம்'என்றே மிகுதியும் சொல்லுகின்றனர். அம்பலம் மெழுகி, பிணாப் பெண்கள் தூய்மை செய்ததைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

கீழைக் கடற்கரையில் சிற்றம்பலம், வடக்கே மா அம்ப லம் (மாம்பலம்). மேற்கே அம்புலப்புழை, அம்பலக்காடு, மலை மேல் கோட்டம்பலம், பொன்னம்பல மேடு, தெற்கே சுசீந்தரம் தலத்தில் பேரம்பலம் என அம்பலங்கள் பற்றி அறியலாம்.

## சேரர் - பெயர்க் காரணம்

சேர மன்னர்க்குச் 'சேரர்' என்னும் பெயர் ஏற்படக் காரணம் என்ன என்பது பற்றிச் சிந்திக்கலாம்.

''மொழிப் பொருள் காரணம் விளிப்பத் தோன்றா'' எனச் சொன்னாலும்,

சேர மன்னர்களுக்கு அப்பெயர் எவ்வண்ணம் வந்திருக்கச் கூடும் என்னும் சிந்தனை எழாமல் இல்லை.

சேரரைப் பற்றி மட்டுமே இங்குச் சிந்தனை.

''சிந்து வெளி நகரங்களில் பெரிய களஞ்சியங்களைக் காத்து வந்தவர்களே சேர அரச மரபினர் என்பார்கள். ஏனென்றால், அக்களஞ்சியங்களைத் திராவிட மொழியில் 'சேர்' என்பார்கள்.''[10]

இச்சான்றில், ''சேர அரச மரபினர் என்பார்கள்'' எனச் சொல்லுவதில், 'என்பார்கள்' எனக் குறிப்பிடுவது யாரை எனச் சொல்லவில்லை. அதாவது, யார் சொல்லுவார்கள் என்பதைக் குறிப்பிடவில்லை.

''சேர்' என்பதைப் பகுதியாக்கி, 'அர்' பலர்பால் விகுதி சேர்த்து, 'சேரர்' என வழங்கலாயிற்று எனக் கருத இடம் தருகிறது.

பெயர்ச் சொல்லை ஒரு சொல்லாகக் கொள்ளும் மரபு உள்ளது.

இவர்கள் சேரர்களாக இருப்பார்களோ என நினைப்ப தற்கு ஒரு வாய்ப்பு உள்ளது.

''உதியன்'' என்பது இயற்பெயர். ''ஆதன்'' என்பது மரபு வழிப்பெயர்.

பாரதப் போர் முடிந்தவுடன் இறந்துபடாமல் எஞ்சியிருந்த வர்களை வைத்துக் கொண்டு, போரில் வீர மரணம் எய்தியவர் களுக்குப்'பிண்டம்' போடப் பெருஞ்சோறு படைத்தான் உதியன்.

இவ்வாறு, பெருஞ்சோறு படைப்பதற்கு மிகுதியான உணவு தானியங்களை நிரப்பி வைக்க 'சேர்' என்னும் களஞ்சியங் களைக் கட்டி வைத்திருக்கக் கூடும்.

அதன் காரணமாகச் 'சேரர்' என்னும் பெயர் அமைந் திருக்கலாம்.

பாரதப் போரில் சேர மன்னர் கலந்து கொண்டனர். இது வியாச பாரதம் கூறும் செய்தி. அப்போரில் துறக்கம் எய்திய வீரர் களுக்கு, எஞ்சிய வீரர்களைக் கொண்டு ''பிண்டம் போடுதல்'' என் னும் பெருஞ்சோற்று விழா நடத்தியவன் சேரமன்னன்.

''பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலை'' எனத் தொல்காப் பியம் கூறும் புறத்திணைக்குப் பொருந்த வருகிறது. இது ஒரு கருத்து.

கொங்கு நாட்டில் நிகழ்த்திய பெரும்போரில் பெருஞ் சோற்றுதியன் வெற்றி பெற்றான். அம் மகிழ்ச்சியைக் கொண்டாட அனைவர்க்கும் சோறு வழங்கினான். இக்கருத்து ஒன்று.

இக்கருத்துக்களைப் பேராசிரியர் ஔவை. துரைசாமிப் பிள்ளை, தம் சேரமன்னர் வரலாற்றில் குறிப்பிடுகின்றார்.

எனினும், பாரதப் போரில் சேரமன்னன் உதியனுக்கு எவ்வகையில் தொடர்பு என்னும் ஐயமும் எழுகிறது.

''பழங்காலத்தில் சேரநாடு, குஜராத் வரை பரவியிருந் தது''[11] எனச் சொல்லப்படும் செய்தியும்,

''நூற்றுவர் கன்னர் எனப்படும் சதகர்ணிகர் தமிழகத்து வடபகுதியை ஆண்ட சேர மன்னர்களின் '' எனச் சொல்லப்படும் செய்தியும் நோக்கும்போது,

பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் பாரதப் போர் நடை பெற்றபோது 'அவ்வளவு வடக்கே இருந்திருக்க முடியும்; பெருஞ் சோறு வழங்கியிருக்க முடியும் என ஊகிக்க முடிகிறது.

முரஞ்சியூர் முடிநாகனார் தமது புறப்பாடலில் சுட்டிக் காட்டும் 'நவ்வி' மான், இமயமலை அடிவாரக் காடுகளில் மட் டுமே வசிக்கக் கூடிய இனம் என்று விலங்கியல் அகரமுதலியில் (Zoological Dictionary) குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இப்புலவர் அங்குச் சென்று கண்டிருக்கக் கூடும்.

'வம்ப மோரியர்'(மௌரியர்) தமிழகம் வந்ததாகச் சங்க இலக்கியம் கூறுகிறது.

எனவே, உதியஞ்சேரலாதன் வடக்கே சென்றிருக்கக் கூடும்.

மேலும், ''குமரியொடு வட இமயத்தொரு மொழி வைத்து உலகாண்டசேரலாதன்''-(சிலப்பதிகாரம் - வாழ்த்துக் காதை-உரைப்பாட்டு மடை) என வரலாற்று உண்மை கூறப்படுகிறது.

இவற்றுக்கான சான்றுகளும் தற்போது ஒவ்வொன்றாகக் கிடைத்து வருகின்றன.

வட இந்தியாவில் பேசப்படும் பெரும்பான்மையான திராவிட மொழிகள், சேரநாட்டுப் பேச்சுத் தமிழோடு ஒத்துப் போகின்றன என மொழி நூல் வல்லார் சிலர் கூறுவதும்,

சேர நாடு வட இந்தியாவரை விரிவடைந்திருந்ததைக் குறிப்பால் உணர்த்துகிறது.

''வானவர் என்ற சொல் சீனமொழியில் வழங்கப்படுவதால், தொல் பழங்காலத்தில் சீன நாட்டிலிருந்து வந்தவர்கள் சேரர்கள்''[13] என்று இவ்வாய்வாளர் கருதுகின்றார்.

''ஓரினம் உடலமைப்பு நிறம் ஆகியவற்றால் முற்றிலும் வேறொரு இனமாக முந்நூறு தலைமுறைகளுள் மாறிவிடமுடியும் என்று அறிஞர் சார்லஸ் டார்வின் கூறுகிறார்.''[13]

ஒரு தலைமுறை இடைவெளி என்பது முப்பது ஆண்டுகள் எனவும், முப்பத்தைந்து ஆண்டுகள் எனவும் இருதிறமாகக் கூறுவர் சமூகவியலார்.

சீன நாட்டிலிருந்து வந்தவர்கள் சேரர்கள் என அறிஞர் ஒருவர் குறிப்பிடும் கருத்தின்படி, சீனத்திலிருந்து வந்தவர்கள், சேரர்களாக உருமாற்றம் பெற இந்தக் கால இடைவெளி காரணமாக இருக்குமோ?

குமரிக் கண்டத்தவர்கள் சேரர்கள் என்பது ஒரு கருத்து. சீன நாட்டிலிருந்து வந்தவர்கள் எனக் குறிப்பிடுவதும் ஒரு கருத்து.

எனினும், குமரிக்கண்டத்தவர்களே சேரர்கள் என்னும் கருத்தே வலுவுடையது. நடந்த ஆய்வுக்கும், தொடர் ஆய்வுக்கும் பொருத்தமாகியுள்ளது.

## குறிஞ்சியும் சேரரும்

'''திணை' என்னும் உயரிய கருத்துரு, சங்க இலக்கியங் களில் மட்டுமே சொல்லப்படுகின்ற மிகச் சிறந்த ஒன்று. ஐவகை நிலங்களுக்கும் சொல்லப்படுகின்ற வரையறுத்த திணைப் பாகு பாடு, அவற்றின் விளக்கம் முதலியவை சுற்றுச் சூழல் அறிவியல் பற்றி, நாம் தொடர்ந்து சிந்தித்து ஆராய வேண்டிய இன்றி யமையாக் கூறுகள் ஆகும்.''[11]

("There are other texts in which the relationship is depicted as distinct but harmonious or symbiotic as in the 'Tinai' ecologies of the Tamil Sangam texts, a concept that is just beginning to acquire importance in environmental history and needs to be discussed further.")

பிறமொழி இலக்கணங்களில் சொல்லப்படாத திணைப் பாகுபாட்டைத் தொல்காப்பியனார் சொல்லியிருப்பது தனிப் பெருஞ்சிறப்பு என்பதை அறிஞர் பலரும் கூறியுள்ளனர்.

சேரருடைய குறிஞ்சி நிலத்தில் தூய காற்று, தூய நீர், மண் வளம், இயற்கைச் செல்வங்கள் நிறைந்து காணப்பட்ட தன்மை முதலியவை சேரநாட்டு மக்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வையும், அவர்களின் சமூக மேம்பாட்டையும் தெளிவாகக் காட்டுகின்றன.

முருகன் - சேயோன் - செம்மை நிறத்தவன்; திருமால் - மாயோன் - நீலவண்ணன்; கொற்றவை - கரிய வண்ணத்தவள்.

வண்ணங்களுக்கு ஏற்ப எண்ணங்கள் மாறுபடுகின்றன.

நம் முன்னோர் இயற்கை வண்ணங்களைப் பற்றியும், நிறக் கோட்பாடு பற்றியும் தெளிவாக அறிந்திருந்தனர். இதுவும் திணை ஆய்வோடு தொடர்புடையதே.

நீலம், பச்சை, சிவப்பு ஆகிய மூன்று வண்ணங்களும் அடிப்படை வண்ணங்கள் (Primary colours). இவை அடிப்படை வண்ணங்கள் என அறிந்த பண்டைய நம் முன்னோர், இவற்றைத் தங்களின் வழிபாட்டுத் தெய்வங்களின் நிறமாக அமைத்துக் கொண்டமை அறிவியல் அடிப்படையில் அமைந்த ஒன்று.

ஐந்திணைப் பகுப்பு சுற்றுச் சூழலோடு நெருங்கிய தொடர் புடையதன் சிறப்பை இப்போது அறிவியல் அணுகுமுறையில் ஆராய்ந்து வருகின்றனர்.

புவி இயல், புவி அமைப்பியல், மண்ணியல், தட்ப வெப் பச் சூழல் இவற்றையொட்டிய சமூக வாழ்வியல், சமூக அமைப் பியல் ஆகியவற்றையும் சங்க இலக்கியப் பாடல்களின் துணை யோடு நுணுகி ஆராயின், அப்பாடல்களின் மேன்மையை மேலும் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறலாம்.

இதன் அடிப்படையில் குறிஞ்சித் திணைச் சிறப்புக்கும், ''நின் காடே கடவுள் மேன'' எனச் சேர மன்னரைக் குறிப்பிடுவதற் கும் பேராசிரியர் ரோமிலா தாப்பர் கூறுவது தூண்டுகோலாகிறது.

God's own country எனக் கேரளத்தை இப்போது சொல்லு வதும் அதன் தொடர்ச்சியே.

கேரளத்தில் ஏற்றுமானூர்ச் சிவத்தலத்தில் எழுந்தருளி யுள்ள எம்பெருமானுக்குக் ''காட்டாளன்'' என்பது பெயர்.

''காடுகிழாள்'', ''கானமர் செல்வி'', ''மலைகிழவோனே'' எனச் சங்க இலக்கியங்கள் கூறுவதும்,

''காடமர் செவ்வி'' (மணிமேகலை), ''மோடேந்தரிவை'' (பெருங்கதை) எனக் கூறுவதும் கருதத்தக்கவை.

கேரளத்து மன்னார்சாலை நாகராஜா கோயிலில், 'யட்சி' ஒருத்தி, தன் ஒரு கையால் பாம்புத் தலையையும், மற்றொரு கையால் வாலையும் பற்றி நிற்கும் சிலை ஒன்று உள்ளது.

இது, கேரளத்தில் பாம்பு பிடிக்கும் 'புல்லுவன்' இனத்தாரைக் குறிக்கும். கேரளம் அடர்ந்த காடாக இருந்ததையும், காடு திருத்தி நாடாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதையும் இச்சிலை சான்றாய்நின்று விளக்குகிறது.

ஒடிசி (ஒரிசா) மாநிலம் காடுகளில் Ban - Bivi - வன அரசி எனக் காடுவிழாள் அழைக்கப்படுகிறாள்.

1. தமிழகத்துக்கே உரிய கருத்துரு ஐந்திணைப் பாகுபாடு. இதில் குறிஞ்சி நிலத்தை முதலில் கூறுவது மரபு.

2. குறிஞ்சி நிலத்திலேயே மிகுதியும் ஆட்சி செய்தவர்கள் சேர மன்னர்களும், அவர்தம் கிளைஞர்களுமே ஆவர்.

3. ''சொல்லிய முறையாற் சொல்லவும்படுமே'' என்னும் நூற்பாப் பகுதியின் 'உம்' மையால், சொல்லப்பட்ட முறைமையினை மாற்றியும் சொல்லலாம் என உரையாசிரியர் தமது உரையில் உணர்த்துகின்றார்.

இதிலிருந்து வேறு திணையையும் முதலில் கூறலாம் என்னும் குறிப்பும் தெரிகிறது.

இவ்வாறு கூறும் மரபு எவ்வண்ணம் ஏற்பட்டது? என்பது சிந்தனைக்குரியது.

தொல்காப்பியனார்க்கு இச்சிந்தனை ஏற்பட்டிருக்கக் கூடும்.

அவரே, ''என்றிசினோரே'', ''என்மனார் புலவர்'' எனச் சில இடங்களில் கூறுகின்றார். முன்னோர் இயம்பிய மரபைப் பின்பற்றியே சொல்லுகின்றார் எனக் கருத இடம் தருகிறது.

இவ்வரிசை முறைமையை அவர் பின்பற்றிக் கூறுவதற்கு, அவர்தம் புவி அமைப்பியல், சுற்றுச் சூழியல் பற்றிய அரிய சிந்தனை மற்றொரு காரணமாக இருக்கலாம் எனவும் கருதலாம்.

''போந்தை வேம்பே ஆர்என வரூஉம் மாபெருந்தானையர் மலைந்த பூவும்'' எனக் கூறும் நூற்பாவில், சேர அரசை முதலில் கூறும் மரபையே பற்றியுள்ளார். மிகச் சிறந்த பேரறிவாளர், நுண் மாண் நுழைபுலம் உடையவர் தொல்காப்பியர். அவர் சேரரை முதலில் கூறுவதில் ஏதோ ஓர் உண்மை இருக்கிறது. நிச்சயமாக இருத்தல் வேண்டும்.

Topography எனப்படும் ஓரிடப் புவிச் சூழியலையும் நன்கு அறிந்தவர் பேரறிவாளர் தொல்காப்பியனார்.

''பாலை நிலம் என்பது வெறும் மணற் பரப்பு மட்டு மன்று. நீர் மிகுதியும் வேண்டாத முட்புதர், பொற்றை, பரற்கற்கள், மணல் துகள் நிறைந்த வெப்பம் மிகுந்த நிலமே பாலை'' என விளக்கம் தருகின்றனர் புவி அமைப்பில் வல்லுநர்கள்.

இக்கருத்தை முன்னரே நம் முன்னோர் கூறியுள்ளனர். எவ்வளவு அருமையாக 'முறைமையில் திரிந்து' எனச் சிலம்பு கூறுகிறது. படிப்படியாகத் திரிதலையே இளங்கோவடிகள் சொல்லுகின்றார்.

> **''முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
> **நல் இயல்பு அழிந்து நடுங்குதுயர் எய்திப்**
> **பாலை என்பதோர் படிமம் கொள்ளும்''** (சிலம்பு)

எனப் புவி அமைப்பியல் அடிப்படையிலும்,

> **''அகில்படு கள்ளியங் காடிறந் தோரே''** (குறுந்தொகை)

> **''பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானல்''**
> (தஞ்சை வாணன் கோவை)

எனப் பாலை நில அமைவையும், வெப்பத்தையும் விளக்கிக் காட்டினார்.

பொற்றை விளை (சொத்தை விளை), சரல்கல் விளை, பரல்கல்விளை (பறக்கை), சரல் விளை, மணல் விளை எனச்

சிதைவு வரிசை முறைமையில் படிப்படியான நிலத்திரிவு புலனாகிறது.

அண்மையில் ஏற்பட்ட சுனாமியால் குமரி முனையில், கடல் உள் வாங்கிச் சென்ற சமயம் கடலுக்குள், குமரிக் கோட்டின் சிதைவுகளான பல பொற்றைகளைப் பார்த்தோம்.

இச்சிதைவு வரிசை முறை, 'விளை'கள் அனைத்தும் குமரிக் கடற்கரை ஓர ஊர்ப் பெயர்கள்.

அடுத்து அறிவு, அறிவைப் பரப்புதல், வடிவப் பயன் பாட்டுக்கு ஆவன செய்தல், பனை ஓலைச் சுவடி ஆயத்தப்படுத்தல் என இத்திரட்சிப் பயன்பாட்டின் இன்றியமையாமை கருதியும் 'போந்தை'யை முதலில் கூறினார் எனக் கருதலாம்.

4. சேர மன்னர்களின் ஆட்சி மிகுதியும் மலை சார்ந்த பகுதி களிலேயே அமைந்திருந்தது. மலைகளிலும், மலைச்சரிவுகளிலும் அன்னவர் ஆட்சி மேற்கொண்டிருந்தனர்.

அது பற்றியே 'வானவர்' வழக்காறும் தோன்றியது. வான வரம்பன், வானவரையன், வானவன், வான்யாறு வழக்காறுகள் ஈண்டு நினைக்கத்தக்கவை.

சேர மன்னரை 'வானவர்' என்று சொல்லுவதை இலக்கிய ஆசிரியர்கள் மட்டுமின்றி, வரலாற்று ஆசிரியர்களும் ஏற்றுக் கொண்டு கூறுவர்.

5. சேர நாட்டுத் தலங்களைப் பன்னிரு திருமுறைகள் ''மலை நாட்டுத் தலங்கள்'' என்றே குறிப்பிடுகின்றன.

6. ''மலைநாடுடைய மன்னே போற்றி''என மலை நாட் டில் (சேரநாடு) எழுந்தருளியுள்ள சிவபெருமானை மாணிக்க வாசகர் போற்றித் திரு அகவலில் போற்றுகின்றார்.

*7. ''மாவீற்றிருந்த பெருஞ்சிறப்பின் மன்னும் தொன்மை மலைநாடு'' எனத் திருத்தொண்டர் புராணம் (கழறிற்றறிவார் நாயனார், பா.1) மலைநாடு எனவே சேர நாட்டைச் சுட்டுகிறது.*

*8. முதல் இராசராசனுடைய கல்வெட்டு 'குடமலை நாடு' என்றே சேர நாட்டைக் குறிக்கும்.*

*9. 'குடமலையாட்டி' என இளங்கோவடிகள் கூறுவதும் நினைக்கத்தக்கது.*

*10. ''கோட்டம் பலத்துத் துஞ்சிய அதியமான்'' (அகம். 168) எனக் குறிப்பதும் நோக்கத்தக்கது.*

*மலை நாட்டுத் தலம் என்பதற்காக மட்டுமே கோட்டம் பலம் இங்குக் காட்டப்படுகிறது.*

*இச்சான்றுகள் எல்லாம் குறிஞ்சி நிலத்துக்கும் சேரநாட்டுக் கும் உள்ள தொடர்பையும், சேர நாடு மலைநாடே என்பதையும் தெளிவுபடுத்துகின்றன.*

*பெரும்பாலும் மலைகளிலேயே வாழ்ந்த குமரிக்கண்ட மக்கள், குமரிக்கண்ட அழிவுக்குப் பிறகு, மேலை மலைத் தொடர் களிலேயே குடியேறி அரசமைத்து வாழ்ந்தனர் என்ற கருத்தையும்,*

*நம் இலக்கியங்கள் சேர நாட்டை மலை நாடு எனக் கூறு வதையும் இணைத்துப் பார்க்கும் போது, நம் இலக்கியங்கள் தொன்மை வரலாற்றை அறிந்தே கூறுகின்றன என்பது வியப்பைத் தருகிறது.*

*புலவோர், தாங்கள் தொன்றுதொட்டு அறிந்த உண்மை களையே கூறுகின்றனர். சேரரின் காலப் பழைமையை மேலும் உறுதிப்படுத்த இன்னும் ஆராய்தல் வேண்டும் என்னும் ஊக்கம் மேலிடுகிறது.*

## சேர மன்னரை முதலில் கூறக் காரணம்

மூவேந்தருள் சேரமன்னரை முதலில் கூறக் காரணம் என்ன என்பதைப் பற்றி சிந்திக்கலாம்.

1. ''இலங்கை 4000 ஆண்டுகளுக்கு முன்புவரை இந்தியாவுடன் இணைந்திருந்தது. பின்னர், கடல்கோளினால் இந்தியாவிலிருந்து பிரிந்தது''என்று இலங்கை வரலாற்று நூல்களான மகாவம்சம், த்வீப வம்சம், ராஜாவழி என்பவை கூறுகின்றன.

கி.மு.504 இல் இரண்டாம் கடல்கோளால் தென் இலங்கையும், பல கடற்கரை நகரங்களும் கடலுள் மூழ்கின எனவும் அந்நூல்கள் கூறுகின்றன.

கி.மு. 306 இல் மற்றொரு கடல் கோளால் இழப்பு ஏற்பட்டது எனவும் அவை கூறுகின்றன.

இலங்கையை ஆட்சி செய்தவன் இராவணன். அவனுடைய பெருமை இந்தியாவின் மையப்பகுதியான தண்டகாரண்யம் வரை பரவியிருந்தது.

அண்மையில் ஆதிச்சநல்லூரில் இரும்பு உலோக காலத்திய முதுமக்கள் தாழி ஒன்று அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தாழியின் உட்புறம் தமிழ்ப் பிராமி ஆறெழுத்துத் தொடரும், மனித எலும்புக் கூடும், சிறிய வண்ணக்கலயங்களும் காணப்படுகின்றன. தாழியின் உட்புறம் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது...

தொல்லியல் ஆய்வாளர் டாக்டர் சம்பத் இத்தொடரை இப்போதைக்குக் ''கரிய ராவ(ண) ட'' என்னும் ஏழு எழுத்துத் தொடராக முடிவு செய்துள்ளார். இதன் காலம் கி.மு.5 ஆம் நூற்றாண்டு. தமிழ்ப் பிராமி எழுத்து இலங்கையிலும் கண்டறியப்பட்டுள்ளது''[15] என அவர் மேலும் கூறுகிறார்.

("A piece of writing has been discovered inside an urn at the Iron age burial site at Adichanallur. The script has six letters. The urn has a human skeleton in it along with miniature pots. What is unusual is that

the script was inscribed inside the urn after it was backed. Normally, scripts are inscribed on the outer surface of urns..•

....Dr. Sampath says, he was tentatively read the script as "Ka ri a ra va (na) ta". He says the scripts has seven letters....

.... Dr. Sathyamoorthy, however proposes that the script found inside the urn may belong to circa 5th century B.C.....

.... He pointed out that the Tamil Brahmi script had been found in Sri Lanka too...")

''தற்போது கிடைத்துள்ள ஆதாரம் பல வகைகளில் குறிப் பிடத்தக்கது. கறுப்பு சிவப்பு நிறம் என்பது கி.மு.5 ஆம் நூற்றாண் டிற்கு முற்பட்ட காலத்தைக் காட்டுகிறது. கறுப்பு சிவப்பு நிறப் பானை சமதரையில் கிடைக்காமல் முதுமக்கள் தாழியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. முதுமக்கள் தாழியின் காலம் பெருங்கற் காலம். பெருங்கற்காலம் கி.மு. ஆயிரத்திலிருந்து மூவாயிரம் வரையிலான காலத்தைச் சேர்ந்தது.''[16]

கி.மு.2000 இல் வாழ்ந்த வான்மீகி இராவணனைக் கூறுகின்றார்.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த விஜயன் இலங் கையை ஆண்டான். அவன் மரபினரே தொடர்ந்து இலங்கையை ஆண்டதாக இலங்கை வரலாறு கூறுகிறது.

ஈழத்துப் பூதஞ்சேந்தனார் பாடல் ஒன்று குறுந்தொகையில் உள்ளது.

மற்றொரு ஈழத்துப் பூதஞ்சேந்தனார் அகநானூறு, குறுந் தொகை போன்ற நூல்களிலும் நான்கு பாடல்களைப் பாடியுள் ளார்.

கடல் கோளுக்குப் பின்னர் மதுரைக்கு வந்து தங்கியமை யால், மதுரை ஈழத்துப் பூதஞ்சேந்தனார் எனப்பட்டார் இவர்.

2. 'சேரன் தீவு' எனச் சேரரை முதன்மைப்படுத்திக் கூறும் கடல் கடந்த நிலப்பகுதியாக இலங்கைத் தீவு சொல்லப்படுகின் றமை இங்குக் கவனிக்கத்தக்கது.

சோழரையோ பாண்டியரையோ முதன்மைப்படுத்திக் கூறும் கடல் கடந்த நிலப்பகுதியாக வேறு எப்பகுதியும் சொல்லப் படவில்லை.

இச்சான்றுகள் இங்குக் காட்டப்படுவதன் நோக்கம், கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதிகள் சேரநாட்டை ஒட்டியே அமைந்துவிட்டன என்பதைச் சுட்டுவதற்காகத்தான்.

3. கேரள மாநிலம், வயநாடு மாவட்டம் எடக்கல் (இடைக் கல் - இடைமலை ) என்னும் மலையில் அமைந்துள்ள குகையில் சிந்துவெளி நாகரிகத்திற்கு மிகவும் தொடர்புடைய எழுத்தும் உருவமும் செதுக்கப்பட்ட அரிய பொறிப்புகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு முன் சங்க காலச் சேர மன்னர் களைக் குறிப்பிடும் தமிழ்-பிராமி எழுத்துக்கள் எடக்கல்லில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இப்போது கண்டுபிடிக்கப்பட்டவை சங்க காலத்துக்கும் மிகவும் முற்பட்டவை.

இதற்கு முன், சிந்துவெளி நாகரிகத்தைப் புலப்படுத்தும் கற்கோடரியும், சிந்துவெளி எழுத்தும் செம்பியன் கண்டியூரில், தமிழ்நாட்டில் முதன்முதல் கண்டுபிடிக்கப்பட்ட சிந்துவெளி நாக ரிகச் சின்னங்கள்.

இப்போது இடைக்கல் குகைப் பொறிப்புகள் கேரளாவில் இரண்டாவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச்செய்தியைச் சிந்துவெளி நாகரிக எழுத்துக்கலை நிபுணர் ஐராவதம் மகாதேவன் உறுதிப்படுத்துகிறார் (The Hindu - Sunday, Sep. 27, 2009).

எனவே, சேரர்களின் காலப்பழைமையைச் சுட்டுவதற்கு இவ் எடக்கல் மலைக்குகைப் பொறிப்புகள் சான்றாக உதவக் கூடும்.

4. எனவேதான், காலப் பழைமை வாய்ந்த சேரர்க்குரிய அடையாளப் பூவைத் (போந்தை) தொல்காப்பியம் முதலில் கூறியதா எனக் கருத வேண்டியுள்ளது.

ஏனெனில், நம்மைக் காட்டிலும் தொல்காப்பியர் சேரர் காலத்திற்குச் சற்று அண்மையில் வாழ்ந்தவர்.

மூவேந்தர்க்கும் காலவரையறை நிறுவும் சிக்கலைத் தவிர்த்திட, ''தொன்று தொட்டு'', ''படைப்புக் காலம் தொட்டு...'' எனக் கூறியமை அறிவோம்.

'உலக மக்கள் அனைவருமே குமரிக் கண்ட மக்களின் கிளையினர்' என்னும் கோட்பாடு உறுதியாகும் போது,

தமிழனம் என்னும் பொதுவான பெயரிலிருந்தே சேரர், சோழர், பாண்டியர் எனக் கூறப்பட்டிருத்தல் வேண்டும் என்பதும் உறுதியாகும்.

''பண்டைச் சேரநாட்டு மக்களுடைய தொன்மை வரலாறு எண்ண முடியாத சிறப்பானது. நம் நாட்டில் பழைமையான நூல்கள் எல்லாவற்றிலும் மிகப் பழைமை வாய்ந்தவை எனப்படும் நூல்களில் சேரமன்னர் குறிக்கப் பெறுவதால் இவர்களது தோற்றம், வரலாற்று எல்லைக்கு அப்பாற்பட்டது.''[17]

''தமிழர் தமிழகத்தின் தொல்குடியினர் மட்டுமல்லர்; உலகின் ஆதிமக்களும் அவர்களே.''[18]

''தமிழரின் சமுதாய அமைப்பு, நாகரிகச் சிறப்பு, வரையறுத்த வாழ்க்கை ஆகியவை மிகவும் தொன்மையானவை. ஆரியரின் நாகரிகத்தை விடவும் மிகப் பழைமையானவை.''[19]

''பதிற்றுப்பத்தும் புறநானூறும் சேரர்களையும், சேர நாட்டையும் சில பல பாட்டுகளில் சிறந்தெடுத்துக் கூறுகின்றன. சங்கத்தொகை நூல்களை நோக்கின் அவற்றுள் பல, சேரமன்னரின் ஆதரவில் தொகுக்கப்பெற்றமை தெரிகிறது.''[20]

''சங்கப் பாடல்களைத் தொகுத்தவர்களுள் சேரமன்னன் யானைக்கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை முதன்மையான வனாகச் சொல்லப்படுகிறான். இவனுடைய காலம் கி.பி.1274.''[21]

எனவே, மேற்கூறிய சான்றுகளைக் கவனிக்குமிடத்து, சேர மன்னரை முதன்மைப்படுத்திக் கூறுகிற காரணத்தை ஓரளவு ஊகிக்கலாம்.

பரசுராமர் கோடரி எறிந்து கடல் உள்வாங்கியதும் தெரிந்த நீண்ட மணற்பரப்பு உப்பு மண்ணாக இருந்தது என்பது புராண மரபோடு கூடிய கதை.

இது கடல் நீர் உள்வாங்கிய புவியியல் உண்மையை உறுதிப்படுத்துகிறது.

கீழைக் கடல் சகரரால் தோண்டப்பட்டது என ஆன்மீக நோக்கில் ('தொடுகடல்') கூறுவது அக்கடலின் ஆழக் குறைவைக் காட்டு கிறது.

மேலைக் கடல் ஆழம் மிகுந்தது - பழைமையானது (''தொன்று முதிர் பௌவம்'')- எனக் கூறப்படுகிறது.

சேரநாட்டின் தோற்றம் பற்றி, கடல்கோளுடன் இணைத் துப் பார்த்தால், சேரரின் காலப் பழைமைக்கு இவையும் சான்று களாகும்.

## சேரமன்னரின் அடையாள மாலை போந்தை

சேர-மன்னரின் அடையாள மாலையாகப் 'பனம் பூ' மாலை சொல்லப்படுவதற்கு என்ன காரணம் என்பது பற்றிச் சிந்திக்கலாம்.

1. கடற்கரைப் பகுதியிலும், மலையடிவாரப் பகுதியிலும் மிகுதியும் வளர்வது பனைமரம்.

2. பனந்தோட்டு மாலையாகிய பனம் பூ மாலையைச் சேரமன்னர் அடையாள மாலையாகக் கொண்டிருந்தனர்.

*3. ''போந்தை வேம்பே ஆர் என வரூஉம் மாபெருந் தானை யர் மலைந்த பூவும்'' என்பது தொல்பாப்பியம்.*

*4. ''கரும்பனை வெண்டோடு மலைத்தோன் அல்லன்'' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலடியில் சேரமன்னர்க்குப் பனந்தோட்டு மாலை உரிமை உறுதிப்படுத்தப்படுகிறது.*

*தோடு சுட்டும் பொருள்களுள் ஒன்று (பனை) ஓலை என்பது கருத்திற் கொள்ளத்தக்கது.*

*''உனக்குப் பகைவனாக உன் எதிரே நிற்பவன் பனம் பூமாலை அணிந்த சேர மன்னனா? அல்லனே!'' எனக் குறிப்பிடுவ தன் மூலம் மூன்று செய்திகள் தெரிய வருகின்றன.*

*1. இப்பாடலைப் பாடிய புலவரும் சேர மன்னரின் பனம் பூ மாலையை முதலில் சொல்லுவதன் மூலம் சேர மன்னரையே முதலில் குறிப்பிடுகிறார்.*

*2. சேர மன்னரை முதலில் குறிப்பிடும் மரபு, சங்கப் பாடல் களைப் பாடிய இப்புலவர் பாடும் காலத்திலிருந்தே வழக்கி லிருந்து வந்துள்ளது.*

*3. தொன்று தொட்டே- குமரிக் கண்ட காலத்திலேயே - சேர மன்னரை முதலில் கூறும் மரபு இருந்திருத்தல் வேண்டும்.*

*இதனை எவ்வாறு உறுதிப்படுத்துவது?*

*புறநானூற்றுப் பாடல்கள் எக்காலத்தில் பாடப்பெற்றவை என்பது இதுவரை தெளிவு படுத்தப்படவில்லை. இது அறிஞரும் ஒப்ப முடிந்த முடிவு.*

*சங்க காலத்தில் தொகுக்கப் பெற்றவை அவ்வளவே. அக் காலத்துக்கு முன்னரே பாடியிருத்தல் வேண்டும். இப்போது சிந் தனையாளர் சிலர் காலவரையறை செய்ய முயன்று வருகின்றனர்.*

தொடர்பு கருதிச் சில செய்திகள் இங்கே இணைத்துப் பார்க்கலாம். மற்றொன்று விரித்தலாகக் கருத வேண்டா.

1. குமரி மாவட்டத்தில், சங்கப் பாடல்களைத் தொகுப்ப தற்கும் முற்பட்ட ஊர்ப்பெயரான ''குறும்பனை'' என்னும் கடற்கரையூர் உள்ளது.

2. சேர நாட்டில் இதே பொருளைக் குறிக்கும்''கட்டைப் பனை'' (கட்டப்பன) ஊரும் உள்ளது.

3. குமரி மாவட்டத்தில் ''வெண்தாலக் கோடு'' ஊர் உள்ளது. (மலையாள ஒலிப்பில் வெண்டலிக் கோடு). வெண்மை - தாலம் - கோடு. தாலம் - பனைமரம். தாலப் பனை என இணைத்துச் சொல்லுவதும் உண்டு.

4. கேரளத்துக் கண்ணூர் அருகில் ''தாலப் பறம்பு'' (தலிப் பரம்பு) ஊர் அமைந்துள்ளது.

குமரிக் கண்ட காலத்திலேயே வழங்கப்பெற்ற குறும் பனை என்னும் பெயரும், வெண்தாலக்கோடு என்னும் பழம் பெயரும் இன்றும் வழங்கப்படுகின்றன.

மூதாலக் குறிச்சி (முதுமை + ஆலம் + குறிச்சி-இப்போது முத்தலக்குறிச்சி ஆகிவிட்டது. ஆங்கிலத்தில் Muthalakurichi -என எழுதி, தமிழ்ப்படுத்தியதன் விளைவு) 'தொன் மூதால'த்தை விளக்கி நிற்பதும், சங்கப் பாடல்களில் காணப்பெறும் கள்ளியங் காடு, இப்பெயரோடு தொடர்புடைய கள்ளியக்காவிளை (களி யக்காவிளை )போன்ற சில ஊர்ப் பெயர்களும், தமிழ்ச் செம் மொழிக் காலப் பழைமைக்குச் சான்றாக இன்றும் பொன்றா திருந்து பொலிகின்றன.

இவ்விடத்து ஒரு செய்தி குறிப்பிடல் வேண்டும்.

குமரிக்கண்டத்தில் ஏழ்குறும்பனை நாடு, ஏழ்தெங்கு நாடு முதலிய நாடுகள் இருந்தன எனக் குமரிக் கண்ட ஆய்வாளர் கூறுகின்றனர்.

அளவையிட்ட வரைபடங்களும் கொடுத்துள்ளனர். இவை புவி அமைப்பியல், சுற்றுச் சூழல், மண்ணியல், தாவர இயல், தட்பவெப்பச் சூழல் ஆகியவற்றோடு தொடர்புடைய திணைச்சிறப்பை விளக்கும் பெயர்களாக அமைந்துள்ளன.

''திணை'' பற்றி மேலும் தொடர்ந்து விவாதிக்கப்பட வேண்டும் என வரலாற்றறிஞர் ரோமிலா தாப்பர் கூறுவது, அறிவியல் அணுகுமுறைப்படி, இத்துறையில் சிந்தித்தல் வேண் டும் என்னும் ஆர்வத்தையும் அவசியத்தையும் தூண்டுகிறது (குறிப்பெண்: 13).

''மாயோன் மேய காடுறை உலகமும்'' என்னும் நூற்பாப் பகுதியில், மாயோனைக் கண்ணன் எனக்கூறி, திணைக்குப் பொருந்த, முல்லை ஆநிரைக் கண்ணனைச் சுட்டுவது ஏற்புடைய தாகிறது. ''மாயனை மன்னும் வட மதுரை மைந்தனை'' என்பதும் இங்கு நினைக்கத்தகும்.

ஏழ் குறும்பனை முதலிய பெயர்கொண்ட நாடுகள் கடல் கோளால் அழிந்து படவும், எஞ்சிய மக்கள் வடதிசையில் குமரிக் கரையில் ஒதுங்கிக் குடியமர்ந்தனர்.

அவ்வாறு குடியமர்ந்தவர்கள், தாங்கள் அதுகாறும் வாழ்ந்து வளம் பெற்ற ஊர்ப்பெயர்களை நெஞ்சில் நிறைத்துப் போற்றினர்.

அவ்வூர்ப் பெயர்களைப் போற்றும் வண்ணம் நினைவில் கொண்டு இப்போது வாழ்ந்து வரும் இடங்களுக்கு இட்டு வழங் கினர், மகிழ்ந்தனர்.

ஒரே பெயரை உடைய ஊர்கள் வெவ்வேறு இடங்களில் இருக்கலாமோ? ஒரே மரத்தை அடிப்படையாகக் கொண்ட ஊர்கள் பல இடங்களில் இருக்கலாமோ? என்னும் ஐயம் எழலாம்.

குமரிக்கண்ட அழிவையொட்டி இடம்பெயர்ந்து குமரிக் கரையில் ஒதுங்குங்கால், அப்பகுதி முழுவதும், சேரநாட்டிலும் காடுகளே மிகுதியாக இருந்தன. குடியேறி வந்தவர்கள் தாங்கள்

திருத்தியமைத்த இடங்களுக்குத் தாங்கள் அதுவரை வாழ்ந்த இடங்களின் பெயர்களை இட்டுக் கொண்டனர் என்பது பொருந்தும்.

பாஞ்சால நாட்டிலிருந்து குடிபெயர்ந்து தமிழ்நாட்டுக்கு வந்த ஓர் இனத்தார், தங்களின் பாஞ்சாலநாட்டுப் பெயரோடு தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவரும் குறிஞ்சி என்னும் பெயரைச் சேர்த்து, பாஞ்சாலங்குறிச்சி என இட்டுக் கொண்டனர். இதை இங்கு நினைவு கூரலாம்.

ஏழ்குறும்பனை நினைவாகக் குறும்பனை, சேரநாட்டில் கட்டைப்பனை, ஏழ்தெங்கு நினைவாக ஆயிரம் தெங்கு, அஞ்சு தெங்கு, ஒற்றைத் தெங்கு, ஈசன் தெங்கு, தெங்கம்புதூர் இவ்வாறு பல நினைந்து எழுதலாம்.

ஏழ் குன்ற நாட்டின் நினைவாக ஏழுமலை (வடவேங்கடம்) அமைந்துள்ளது. ஆங்கே ஏழுமலையான் குறிஞ்சிக் கடவுள் முருகனே. கால மாற்றத்தால் ஏழுமலையானும் மாறிவிட்டான். வேங்கட சுப்பிரமணியனே சான்றாவான்.

கால வரையறை செய்ய முடியாத மூன்று கோயில்களுள் வடவேங்கடவன் கோயிலும் ஒன்று என்கிறார் பேராசிரியர் ஔவை. துரைசாமிப்பிள்ளை.

எனவே, ஏழு மலைக்குக் காரணமான ஏழ்குன்றத்தின் காலப் பழைமையும் புலனாகிறது.

தென்னைக்கு முந்திய தெங்கு என்னும் பழஞ்சொல்லே குமரி வட்டாரத்தில் வழங்கப்படுகிறது. இது போன்று கேரளத்தில் மலையாள ஒலிப்பில் 'தெங்ஙு' எனக் கூறுகின்றனர்.

''தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய்கெடும் காய்வரின்'' தெங் கோடு காய் சேர்ந்து தேங்காய் ஆனது இதனை உறுதிப்படுத்தும்.

குமரிக் கண்டத்தில் ஏழ்தெங்கு என ஏழ் அடை மட்டும் கூறப்பட்டுள்ளதேயன்றி, தெங்குக்கு வேறு அடைமொழி எதுவும் சொல்லவில்லை.

ஆனால், ஏழ்குறும்பனை எனப் பனைக்குக்''குறுமை'' அடைமொழி ஏழ் அடைமொழியோடு சேர்த்துச் சொல்லப்படு கிறது.

நீண்ட நாள் நின்று நிலை பெற்றுப் பயன்தருவதால்-பனை ஓலைச் சுவடியைக் கருத்திற் கொண்டே'குறுமை' அடைமொழி கூறப்பட்டது.

வற்றல் மரம், முள் மரம், நச்சு மரம், பயன் மரம், மருந் தாங்கித் தப்பா மரம் எனச் சொல்லுங்கால் காய்ந்த, முள்ளை யுடைய, நஞ்சு உடைய, பயனுடைய, மருந்தாகித்தப்பாத என எல்லா மரங்களையும் பொதுவாகவே வள்ளுவர் கூறுகின்றார்.

இவற்றுள், எந்த மரத்தையும் அதன் பெயர் சுட்டிச் சொல்ல வில்லை.

புல் இனமானாலும், அது தரும் பயன்கருதிப் பனையை மட்டும் தனியாகப் பெயர் சுட்டி வள்ளுவர் சொல்லி இருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. வேயும் புல்லினமே.

வள்ளுவர் குறிப்பிடும்-பெயர் சுட்டிச் சொல்லும் - ஒரே மரம் பனை மரம் மட்டுமே.

பனைமுன் அட்டு, பனைமுன்கொடி எனப் பனைக்குத் தனிப் புணர்ச்சி விதி அமைத்துச் சொல்லுகிறார் தொல்காப்பியர் என்பதும் கருதத்தக்கது.

பனப்பாக்கம், கட்டப்பனை, பனச்சமூடு, பனங்குடி (பணகுடி), பனஞ்சாடி, பனைவடலி, திருப்பனந்தாள், பனை மரத்துப்பட்டி, திருவண்ணாமலை அருகில்'போந்தை'என்னும் ஊர் முதலிய பனையோடு தொடர்புடைய ஊர்கள் உள்ளன.

பூக்கும் பருவத்தை அடையாத பனைமரத்தை 'வடலி' என வும், 'குறும்பனை' எனவும் பனைமர ஆய்வாளர்கள் கூறுகின்ற னர்.

பனையோடு தொடர்புடைய ஊர்கள் என்பதற்காகவே இவை இங்குச் சுட்டப்பட்டன.

கடல் கொண்ட குறும்பனைப் பெயர் இப்போதும் குமரியிலும், கேரளத்திலும் வழங்கப்படுவதால் சேரநாட்டுடன் தொடர்புடையதாகிறது.

எனவே, பனம்பூமாலை சேரர்க்கு அடையாள மாலையாகச் சொல்லப்பட்டதன் இயைபு தெரிகிறது.

## சேரர்க்குப் பனம்பூ அடையாள மாலையாகச் சொல்லப்பட்டது ஏன்?

சேர மன்னர்க்கு அடையாள மாலை 'போந்தை' என்பதன் பொருத்தத்தைப் பார்த்தோம்.

இனி, அவர்களுக்குப் பனம் பூ அடையாள மாலையாகச் சொல்லுவதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்திக்கலாம்.

குறிஞ்சி நிலத்தில் பல வண்ண, நறுமண மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

அவற்றை விடுத்து, வெப்ப மண்டலக் காடுகளில் வளரும் பனையின் பூவே, சேர மன்னர்க்கு அடையாள மாலையாகச் சொல்லப்பட்டது ஏன்? என்பது ஆய்வுக்கு உரியது.

1. குமரிக் கண்ட ஏழ்குறும்பனை நாடு அழிந்துபட்டதை மனக்குறையாகக் கொண்டு இப்போதும் குறும்பனைப் பெயர் ஊர் குமரி மாவட்டத்தில் விளங்குவதைப் பார்த்தோம்.

2. பனை மரங்கள் அழிந்தது படாமல் பேணுவதற்கும், பனம் பூ மாலையை அடையாள மாலையாகக் கொண்டிருப்பார்களோ என்னும் சிந்தனையும் எழுகிறது.

''யாழ்ப்பாணத்துக்கு வரும் விருந்தினர்க்குச் சிறப்புச் சிற்றுண்டியாக அவித்த பனங்கிழங்குத் துண்டுகளைப் பரிமாறுகின்றனர்.''[22]

கடல் கொண்ட குமரிக் கண்டத்தின் எஞ்சிய பகுதியே இலங்கைத் தீவு என்பது தெளிவு. ஒரு காலத்தில் இந்தியாவுடன் இணைந்திருந்தது.

ஏழ்குறும்பனை நாட்டில் இப்பனங்கிழங்கு விருந்தோம்பல் வழக்கில் இருந்து, யாழ்ப் பாணத்துக்கும் விரிந்து நிலைத்திருத்தல் வேண்டும். யாழ்ப்பாணத்திலும் பனைமரங்கள் மிகுதி. 'ஏழ் பனை' என்பதே யாழ்ப்பாணம் எனத் திரிந்தது என்பார் யாழ்ப் பாணம் பண்டித கணபதிப் பிள்ளை.

இப்பனங்கிழங்கு விருந்தோம்பலை இங்கே காட்டுவது ஒரு காரணம் பற்றியே. இலங்கைக்குச் 'சேரன் தீவு' என்னும் பெயரும் உண்டு என்பதற்காகத்தான்.

எனவே பனைமரம், பனங்கிழங்கு இரண்டும் ஏழ்குறும் பனை நாடு, யாழ்ப்பாணம் இவற்றுடன் தொடர்பு கொண்டிருப் பதைப் போல, சேரன் தீவு பெயர் அடிப்படைக்குக் காரணமாக சேர நாட்டுடனும் தொடர்புடையன ஆகின்றன.

குமரிக் கண்டத்தின் காலத்திலேயே சொல்லப்பட்ட பனையின் பூ, அடையாள மாலையாகச் சேரமன்னர்க்குத் தொடர்ந்து வந்துள்ளது.

3. பனை மரங்களின் அழிவைத் தடுப்பதற்குப் பனை மரத்தை, பனம்பூ மாலையைச் சேர மன்னர் தங்களோடு தொடர்பு படுத்திக் கூறியிருக்கலாம்.

அங்ஙனமாயின், ஏன் பனைமரத்தோடு தொடர்புபடுத்திக் கூற வேண்டும்?

பனைமர அழிவைத் தடுப்பதற்கும், சேர மன்னருக்கும் என்ன தொடர்பு என்னும் வினாக்கள் எழுகின்றன.

அவற்றுக்கான விடைகள்.

1. கடற்கரைத் தாவரங்கள் கடல் அரிப்பை அரணாக நின்று தடுக்கின்றன.

சுர புன்னை, கண்டல், கைதை, தில்லை, தராய், காரைச் செடிகள் முதலிய கடற்கரைத் தாவரங்கள் அடர்ந்துள்ள 'கானல் கள்', 'அலையாற்றிக் காடுகள்' எனத் தாவர இயல் வல்லுநர்களா லும்' சுற்றுச்சூழியல் வல்லுநர்களாலும் கூறப்படுகின்றன.

தமிழகக் கீழைக் கடற்கரைத் தென்கோடி புன்னைக் காயல், காயல்பட்டினம் இடையில் பிச்சாவரம் அலையாற்றிக் காடுகள், வடகோடியில் 'மட்டிட்ட புன்னயங்கானல் மடமயிலை' வரை பொருந்த அமைகின்றன.

மேலைக்கடற்கரை பின் தென்கோடியில், தேங்காய்ப் பட்டணம் கடற்கரையில் கண்டல் செடிகள் உள்ளன. கண்டங் காய்ச் செடி என்கின்றனர். 'கண்டல் விளை' என்னும் ஊரும் உள்ளது.

சங்க காலத்துக்கு முனபிருந்தே இவ்வகைத் தாவரங்கள் இயற்கையாக வளர்ந்து ஆழிப்பேரலைகளைத் தடுக்கும் அரணாக நின்றமையைச் சங்க இலக்கியங்களால் அறியலாம்.

கடலரிப்பைத் தடுத்து நிறுத்தும் இயற்கைத் கானல்களை அழித்து விடாமலும், தாமாகவே அழிந்து விடாமலும், பாதுகாப்ப தன் பொருட்டு,

மக்களின் மனநிலை அறிந்து நம் முன்னோர் கடற்கரைக் கோயில்களைச் சுற்றிலும் காடுகளை வளர்த்தனர்.

கடற்கரையில் கோயில்களை அமைத்து அக்கோயில் களோடு காடுகளைத் தொடர்புபடுத்தி அவற்றுக்கு ஒரு புனிதத் தன்மை ஏற்றினர். இதனால் கடற்கரைக் கானல்களும் இதுவரை பிழைத்திருந்தன.

2. கடல் கொண்ட குமரிக் கண்டம் கல்விப் பல்கலைக் கழகமாகவும் விளங்கியமை தெளிவு.

3. கிளத்தல் - சொல்லுதல், விவரித்தல், 'குலமுறை கிளத் தல்' - கருதற்பாலது. கிளவி-சொல்.

எம்மொழியும் தொடக்கத்தில் வாய்மொழியாக அமைந்தே - பேச்சு வழக்கிலிருந்தே- எழுதும் நிலைக்கு மேம்பட் டிருத்தல் வேண்டும்.

தமிழின் தொடக்க காலத்தில் பாலி மொழியில் மட்டுமே எழுத்து வடிவம்'' இருந்தது.

4. தமிழ் நூல்கள் எழுத்து வடிவம் பெற எப்போது எழுதப் பட்டனவோ அப்போதிருந்தே ஓலைச் சுவடிகள் தோன்றலாயின.

5. தமிழ், எழுத்து வடிவில் எழுதப்பட்ட காலத்தில் ஓலைச் சுவடிதான் முதலில் இருந்துள்ளது.

தமிழில் கல்வெட்டு, செப்புப்பட்டயங்கள், ஓட்டுச் சில்லுகள் பிற்காலத்தவை.

பனை மரங்களே ஓலைச் சுவடிகளைத் தந்துதவின.

6. கடல் கொண்ட ஏழ்குறும்பனை நாட்டு ஓலைச் சுவடி களுள் கடல் கொண்டவை போக, எஞ்சியவை இப்போதைய குமரி மண்ணிலும், சேர நாட்டிலும் தங்கி, பின்னர்த் தமிழகம் எங்கும் பரவின எனக் கருதலாம். இது ஓர் அனுமானமே.

7. அவ் ஓலைச் சுவடிகளைப் படி எடுப்பதற்கும், புதிய நூல்கள் எழுதுவதற்கும் ஏழ் குறும்பனை நாட்டு எச்சமாக விளங் கும் குமரி மண்ணிலும், சேர மண்ணிலும் வளர்ந்த பனை மரங்கள் ஓலைச் சுவடிகள் தருவதற்குப் பயன்பட்டன.

8. அறிவைப் பரப்புவதற்கும், மேம்படுத்துவதற்கும், பின்னர்த் தொடர்ந்து வருகின்ற சமுதாயத்துக்கு அறிவுக் கொடை

வழங்குவதற்கும் ஓலைச்சுவடி தந்துதவப் பனைமரங்கள் மிகவும் வேண்டியிருந்தன.

ஏனெனில், எழுத்து வடிவில் வடித்து எடுப்பதற்கு வேறு ஏற்ற பொருள்கள் அப்போது இல்லை.

9. ஓலைச் சுவடிகளில் எழுதுவது கலையாக மதிக்கப் பட்டது.

10. அனைத்து அறிவுக் கருவூலங்களும் சுவடியில் வடிவம் பெற்றன.

11. 'ஏடு' என்பது எழுதப்படாததற்கும், எழுதப்பட்ட தற்கும் பொதுப் பெயரானது.

12. 'பனம் பாரனார்'- சுவடியோடு தொடர்புடைய பெயர்.

13. 'என் மனார் புலவர்', 'என்றிசினோரோ' எனச் சொல்லி ஓலைச்சுவடி எழுந்த காலப் பழைமையைச் சுட்டியவர் தொல்காப்பியர்.

அடுத்தது,

14. கடல் அரிப்பு முதலிய இயற்கைச் சீற்றத்திலிருந்து நாட்டைக் காப்பதற்குக் கடற்கரையில் வளர்ந்த பனைமரக் கூட்டம் பெரிதும் உதவியாக இருந்தது.

15. நீல மலையிலிருந்து தென்குமரிவரை காடுகளே அடர்ந் திருந்தன. ''நின் காடே கடவுள்மேன'' எனச் சேர மன்னருக்குச் சொன்னது போல, சோழ பாண்டியர்க்குச் சொல்லவில்லை.

சேர நாட்டுக் கோயில்களில், பெரும்பாலும் மரக்கோயில் களே - மரத்தால் ஆனவையே - கோயில்களின் தொடக்க காலம் முதல் இருந்து வருகின்றன. எனவே, காலப் பழைமை வாய்ந் தவை.

தாந்திரிக வழிபாட்டு முறைகள் அக்கோயில்களில் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால், நடைமுறையில் இருந்த வழிபாட்டு முறைகள் பனை ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

அடுத்து, பனைமரங்கள் ஓலைச்சுவடிகளைத் தந்து உதவுவதற்கும், பனம்பூ மாலை சேர மன்னர்களுக்கு அடையாள மாலையாக ஆவதற்கும் என்ன தொடர்பு என்னும் வினா எழுகிறது.

அரசன் எவ்வழியோ குடிமக்கள் அவ்வழி. அரசன் ஒரு பொருளுக்குப் பெருமையும் மதிப்பும் கொடுத்தால் குடிமக்கள் அவ்வாறே பின்பற்றுவர்; போற்றி மதிப்பர்.

சேரமன்னன் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் பனைமரப் பொழிலில் பந்தர் அமைத்து மகிழ்வுடன் தங்கியிருந்தான் எனப் பதிற்றுப்பத்து கூறுவதிலிருந்து, சேரமன்னர் பனைமரத்தைப் பேணியமை அறிய முடிகிறது. .

**"கடல் சேர் கானல் குடபுலம் முன்னி...**
**தூ இரும் போந்தைப் பொழில் அணிப்பொலி தந்து....**
**பந்தர் அந்தரம் வேய்ந்து...."**

கடற்கரையில் கடல் கானலில், 'போந்தைப் பொழிலில்' பனஞ்சோலையில் பந்தர் அமைத்து சேரமன்னன் தங்கியமை தெரிகிறது.

எனவே, போந்தைப் பொழிலை விரும்பிய சேர மன்னர் பனைமரங்களைப் போற்றி வளர்த்தலில் ஆர்வம் கொண்டிருந்திருப்பர். மேலும் மொழியையும், அறிவையும் பெருக்கி மேம்படுத்தும் ஓலைச் சுவடிகள் தரும் பனை மரங்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் சேர அரசனுக்கு இருந்தது.

உள் அழிக்கலாகா அரணாக மிளிரும் ஓலைச் சுவடிகள் தரும் பனை மரங்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் சேர அரசனுக்கு இருந்தது.

உள் அழிக்கலாகா அரணாக மிளிரும் ஓலைச்சுவடிகள் பெற பனைமரங்களைப் பேணினான்.

அத்துடன் கடல் அரிப்பைத் தடுத்து அரணாக இருந்து நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பும் கடமையும் அம்மன்னனுக்கு இருந்தன.

அப்படிப் பாதுகாப்பதற்குப் பனம்பூ மாலையைச் சேர மன்னன் அடையாள மாலையாகக் கொண்டான்.

அரசன் ஒருவன் எப்போதுமே மாலையணிந்து கொண்டிருப்பதில்லை.

முற்காலத்தில் வாணிகம் செய்வார், வாணிகம் செய்யும் போதும் மட்டும் தலைப்பூவும், கழுத்து மாலையும் அடையாளமாக அணிந்து கொள்வர்.

இக்காலத்தில் வழக்கு நடத்தும்போது மட்டுமே நீதி மன்ற நடுவர் அதற்கேற்ற உடை அணிவர்.

இவை போன்று, அரசன் மங்கல விழாக்களிலும், திருவோலக்க மண்டபத்தில் வீற்றிருக்கும் சமயத்திலும்தான் அணிய வேண்டியிருக்கும், அணிந்திருப்பான்.

மன்னன் அணிந்திருக்கும் காரணத்தால் அரச மாலையின் மதிப்பும் பெருமையும் குடிமக்கள் அறிவர்.

அரசனுக்கு உரிமைப்படுத்திய மும்முரசுகள், உடைவாள் அரியணை ஆகியவற்றுக்கும் மதிப்புக் கொடுப்பார்கள்.

அதுபோன்று,

அரச மாலையாகிய பனம்பூ மாலைமீது குடிமக்கள் மிகுந்த உயர்வு சிறப்பு வைத்திருந்தனர்.

அம்மாலைக்கு ஆதாரமான பனைமரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பில் அவர்கள் மிகவும் கவனமாக இருந்தார்கள், பனை மரத்தைப்பாதுகாத்தனர்.

எனவே,

1. ஓலைச் சுவடிகளைப் பெறுவதற்கும்
2. கடல் அரிப்பைத் தடுக்கும் பனைப் பெருக்கத்துக்கும்

குடிமக்களை ஆயத்தப்படுத்த வேண்டி அரசனே பனம்பூ மாலையை அடையாள மாலையாகக் கொண்டான்.

இச்செயல், குமரிக்கண்டத்தின் காலத்திலேயே நடைமுறையில் இருந்திருத்தல் வேண்டும் எனச் சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

பனைமரத்தை அரசன் பாதுகாத்தான், குடிமக்களையும் பாதுகாக்குமாறு தூண்டினான்.

எனவேதான், 'போந்தை'யை - பனம்பூ மாலையை - அடையாள மாலையாகக் கொண்டான். தானே கொண்டான்; பிறர் கொடுத்துக் கொள்ளவில்லை.

'அடையாளம்' என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும். பனம் பூ மாலை அடையாள மாலை அவ்வளவே.

இனி, மற்றுமோர் சிந்தனை,

1. தொல்காப்பியனார் காலத்துக்கு முன்பே குமரிக் கண்டத்தில் ஏழ்குறும்பனை நாடு எனப் பனைமரப் பெயர் கொண்ட நாடொன்று சொல்லப்படுகிறது.

2. தொல்காப்பியர் அரியவகை மரப் பெயர்களோடு பனை, வேம்பு, ஆர் இவற்றையும் இணைத்துச் சொல்கின்றார்.

அங்ஙனமாயின் பனை அரிய வகை மரமாகிறது.

3. அவர் கூறும் அரிய மரப் பெயர்கள் பல பரவலாக இப்போது வழக்கில் இல்லை, பனை மரப் பெயர் இப்போதும் வழக்கில் உள்ளது.

4. பனைமரப் பெயர்க்குத் தொல்காப்பியர் தனிப்புணர்ச்சி விதி கூறுகிறார்.

5. தனித்த அடையாளம் தெரிவதற்காகச் சேர வீரரைக் குறிப்பதற்குப் பனம் பூவைச் சூடிய சேர வீரர் எனச் சுட்டு கிறார். ''போந்தை வேம்பே ஆர்என வரூஉம்'' என இங்கே, பனையைப் போந்தை என்னும் சொல்லால் குறிக்கின்றார்.

6. ''போந்தைப் பொழில்'' எனப் பதிற்றுப்பத்துக் கூறும்.

7. 'போந்தை' என்னும் பெயரில் சிற்றூர் ஒன்று திரு வண்ணாமலை அருகில் உள்ளது.

8. குமரிக்கண்டத்தின் பனைமரப் பெயரைப் புணர்ச்சி விதியில் தனியாகக் கூறிய தொல்காப்பியனார்,

சேரப் போர் வீரர்களின் முக்கியமான அடையாள மாலையினை, அதே பனைமரம் பெயரால் சுட்டாமல், 'போந்தை' என குறிப்பிட்டுச் சொல்வது சிந்தனைக்கு உரியது. பனைக்கு பதிலாகப் போந்தை என்றது ஏன்?

9. அங்ஙனமாயின் 'பனை' முந்திய சொல்லா? 'போந்தை' முந்திய சொல்லா?

அடுத்து, குடிமக்களும் மிகவும் பொறுப்புடனும் விருப் பத்துடனும் பனைமரத்தைப் பாதுகாப்பதில் மிகவும் அக்கறை கொண்டவர் எனப் பார்த்தோம் அல்லவா!

அதன் தொடர்ச்சிக்குப் பொருத்தமான சான்று உண்டு.

ஞானத்தின் திரு உருவமாகவும், நான்மறையின் தனித் துணையாகவும், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் திருஞான சம்பந்தப் பெருமான், 'திருவோத்தூர்' என்னும் சிவத்தலத்துக்கு எழுந்தருளினார்.

அவ்வூர் அன்பர்கள் அவரைப் பணிந்து வரவேற்றனர். அத் தலத்தின்கண் சிவனடியார் ஒருவர் பனை மரங்களை வளர்த்து வந் தார். அம்மரங்களுள் ஒன்றுகூட குரும்பை ஈனவில்லை. எல்லாமே ஆண் பனைகள். பெண் பனைகளே இல்லை.

அச்சமயம் ஆங்கு எழுந்தருளிய திருஞானசம்பந்தப் பெரு மானிடம், 'இத்தலத்தில் நான் பனை மரங்கள் வளர்த்தேன். எல் லாமே ஆண் பனைகள். பெண்பனைகளே இல்லை' என்பது அவை வளர்ந்த பிறகு குரும்பை ஈனாமையினால்தான் தெரிய வந்தது. எனவே, அருள் கூர்ந்து தாங்கள் அவற்றுள் சிலவற்றைப் பெண் பனைகளாக மாற்றியருளல் வேண்டும்' எனப் பணிந்து நின்றார்.

அவ்வடியார் வேண்டுகோளை ஏற்று, சம்பந்தப் பெரு மானும் சொல்லாமல் சொன்னவனை நினையாமல் நினைந்து, எம்பிரான் தன் திருக்கருணை இருந்தவாற்றை எண்ணி உருகி, ஆங்கு ஆண் பனைகளின் ஊடே, பெண் பனைகளும் உண்டாகு மாறு பதிகம் பாடியருளினார், பரவினார், பணிந்தார்.

அக்காலை, சில ஆண் பனைகள் பெண் பனை மரங் களாகத் தென்முகக் கடவுளருளாள் மாறின.

இவ்வேண்டுகோளுக்குப் பதிலாக சம்பந்தப் பெருமா னிடம் வேறு வேண்டுகோள் ஏதாவது அவ்வூர் அடியார்கள் முறை யிட்டிருக்கலாம்.

அவ்வாறு முறையிடுவதை விடுத்து, ஆண் பனைக்குள் சிலவற்றைப் பெண் பனைகளாக மாற்றும் வண்ணம் வேண்டு வதற்கு ஏதோ ஒரு காரணம் இருத்தல் வேண்டுமல்லவா.

'நான் வளர்த்த' என்று சொல்லுவது கவனத்தில் கொள்ளத் தக்கது.

சிவனடியார் ஒருவர் பனைமரத்தை வளர்த்து வந்துள்ளார். குலம், இனம் பற்றிய முறையில் பெரிய புராண அடியார்களின் செயற்கரிய செயல்கள் பேசப்பட்டாலும், அவ்வடியார் குறிப் பிட்ட ஒரு தொழிலுக்காகப் பனைமரத்தை வளர்த்தார் எனச் சொல்லுவது பொருந்தாது, நினைக்கவும் தகாது.

மேலும், உடனடியாகப் பலன் தராமல், நெடுநாள்களுக் குப் பின் பலன் தரும். நீண்ட காலத்துக்குப் பலன்தரும் மரம் பனை.

எனவே, அவ்வடியார் அக்காலத்துக்கும் சரி, எதிர்காலத் துக்கும் சரி பலன் தரக்கூடிய பனை மரத்தை ஓலைச்சுவடி பெறுவ தற்கும், பெருக்கத்துக்குமே வளர்த்தார் என்பது தெளிவு.

முன்னர்க்கூறி வந்த பனைப் பெருக்கக் காரணத்துக்கும் இச்சான்று பொருந்தி வருகிறது.

சம்பந்தப் பெருமான் வரலாற்றில், பல அருளிச் செயல் களோடு, இவ் அருளிச் செயலையும் தெரிவு செய்து சேக்கிழார் பெருமான் கூறியிருப்பதும் நம் அறிவுப் பெருக்கத்துக்கு விருந் தாகிறது.

மேலும்,

1. அனைவருக்கும் அறிவு வளர்ச்சி மேம்படல் வேண்டும்.

2. ஓலைச்சுவடிகள் பெருகுதல் வேண்டும்.

3. அதற்கு, அவ்வூரின்கண் பனைப்பெருக்கம் ஏற்படல் வேண்டும்.

ஏனெனில், எழுத்தில் அறிவுக் கருவூலங்களை வடித்து வைப்பதற்கு ஓலைச் சுவடி ஒன்றுதான் வழி. எங்குச் சென்றாலும்

கையோடு எடுத்துச் செல்வதற்குக் கையேடு ஒன்றுதான் பொருத்த மான அறிவுக் கருவி என்பதை அவ்வூர் மக்களும் நன்கு உணர்ந் திருந்தனர்.

பனைமரப் பெருக்கத்துக்குப் பனை இனப்பெருக்கம் வேண்டும். ஓரின மரம் மட்டுமே நின்றால் இனப் பெருக்கம் ஏற்பட வாய்ப்பில்லை.

ஆண்மரம், பெண்மரம் இருவகை மரங்களும் வேண்டும் என்பது தாவரவியல் உண்மை.

திருவோத்தூர் அடியார்கள் பனைப் பெருக்கத்துக்குக் காலம் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அவ்வேளை ஆளுடைப் பிள்ளையும் அத்தலத்துக்கு எழுந் தருளினார். அறிவுப் பெருக்கத்துக்கு ஆதாரமான ஓலைச்சுவடிப் பெருக்கத்துக்கு உற்ற துணையாகத் துலங்கினார்.

வயிற்றுப் பசி போன்று அறிவுப்பசி அடங்காதாயினும் அப்பசி ஏற்படும் போதெல்லாம் ஞான உண(ர்)வு பெறுவதற்கு இவ்வியத்தகு வேண்டுதலை ஞானசம்பந்தரிடம் சமர்ப்பித்தனர்.

இந்நிகழ்வு சேர நாட்டுக்கு வெளியே தொண்டை நாட்டுப் பகுதியில் என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும்.

எப்பகுதி மக்களாயினும் அறிவுப்பசி தீர்ப்பதில் பெரு வேட்கை கொண்டிருந்தனர்.

திருவோத்தூர்-திரு-ஓத்து-ஊர்.

'இவ்வோத்து' எந்நுதலிற்றோவெனின்'' என்னும் போது இலக்கணமும்'

''மறப்பினும் ஒத்துக் கொளலாகும்'' என்னும் போது இலக்கியமும் அப்பெயரால் விளக்கம் பெறுகின்றன.

இலக்கிய இலக்கணச் சுவடிகள் பெருகப் பனை ஓலைச் சுவடிகள் மிகவும் உதவின.

இக்காரணத்தை முன்னிட்டே 'பனைமாற்ற' வேண்டு தலை வைத்தனர் என உறுதியாக நம்பலாம்.

எனவே, பனைப்பெருக்கத்தைப் பாதுகாக்கவே அறிவைப் பரப்பவும் மேம்படுத்தவுமே - சேர மன்னர் பனம் பூ மாலையை அடையாள மாலையாகக் கொண்டனர்.

பனைமரம் தெய்வ மரங்களுள் ஒன்றாக மதிக்கப் படுவதைச் சங்க இலக்கியம் கூறுகிறது ('பனைமரத்துத் தெய்வம்', (நற்றிணை, பா. 303).

பனைமரமும், அதன் இளம்பாளைகளும் பழங்காலத் தமிழரின் நாகரிகக் கூறுகளாக விளங்கின.

காலப்போக்கில், பனைப் பெருக்கம் குறையலாயிற்று பனை மரமேறுவோர் அருகினர். அதேசமயம் தென்னை ம வளர்ப்பு வாணிக நோக்கிலும் பெருகலாயிற்று. பனை மரத்தை நோக்க, தென்னை மரமேறுதல் எளிமையாயிற்று. பனைமர பாளை பிடித்த இடத்தைத் தென்னம்பாளை பிடித்துக் கொண்டது

கேரளத்தில், குறிப்பாக நாயர் இன மக்கள் திருமண சடங்குகளில் தென்னம்பாளை முக்கிய இடம் பெறுவது, குமரி கண்ட பனம்பாளை பயன்பாட்டு நாகரிகத் தொடர்ச்சியே. வே காரணம் அவர்கள் சொன்னாலும், இது பழைமையி தொடர்ச்சியே.

இனி, சங்கத் தொகை நூல்களைத் தொகுத்தவர்களுள் சே மன்னர்க்குப் பெரும்பங்கு உண்டு.

சங்கப் பாடல்களைத் தொகுத்தவர்களுள் சேரமா யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை முதன்மைய வனாகச் சொல்லப்படுகின்றான்.

இலக்கியத்தோடு, அவன் கொண்டிருந்த ஈடுபாடு இதனால் தெரிய வருகிறது. முன்னர்க் கூறிய அறிஞர்தம் கருத்து இவ்விடத்து இயைந்து வருகிறது. ஓலைச் சுவடிகள் தந்த இலக் கியச் சுவையால் அவற்றைத் தொகுத்தான். ஓலைச் சுவடிகளைப் போற்றினான்.

மற்றொரு செய்தி: தமிழகத்தில் பல திருக்கோயில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றில், 'நல் இருப்புச் (பிரதிஷ்டை) செய் திருக்கலாம் அல்லது பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுமாறு குறுநில மன்னர்களிடம் வேண்டியிருக்கலாம். சோழ பாண்டிய மன்னர்களிடம் ஒப்படைக்க முடியாத சூழ்நிலை.

இவற்றை விடுத்து, சேர நாட்டைத் தேடிவந்து சேரமான் குலசேகரப் பெருமாளிடம் கம்பர் தாம் வழிபட்டு வந்த கல்வித் தெய்வம் கலைமகள் திருஉருவச் சிலையை ஒப்படைத்தார் எனக் கூறும் வாய்மொழிச் செய்தி உள்ளது: இன்றும் சொல்லப்படுகிறது.

இவ்வாறு கூறும் மரபு, சேர மன்னர் கல்வியோடு கொண்டிருந்த தொடர்பின் மேன்மையைப் புலப்படுத்துகிறது, சிந்திக்கத் தூண்டுகிறது.

''மறைந்த திருவாங்கூர் மன்னர் சித்திரைத் திருநாள் அவர் களை ஒருமுறை நேரில் திருமுகம் கண்டபோது கம்பரைக் கடைசிக் காலத்தில் போற்றியவர்கள் நாங்கள்தாம் அதற்கு நன்றிக் கடனாகவே அவர் வழிபட்ட சரஸ்வதி சிலையை எங்கள் முன் னோர்களிடம் ஒப்படைத்தார். இதைப் பற்றி ஆராய்ச்சி மேற் கொள்ளுங்கள்.'' [23]

இச்செய்தி மேற்கூறிய வாய்மொழிச் செய்திக்கு அரணா கிறது.

The inter-relation of Tamil and other languages and other cultures raises very significant and surprising problems. Malayalam in its northern parts, conducts shadow - plays where the wire - pullers behind the screen recite Kambaramayanam verses. Provision had been made in ancient times, for recitation of Kambaramayanam in Malabar." [24]

பழங்காலம் முதலே, கேரள மலபாரின் வட பகுதிகளில், கம்ப ராமாயணப்பாடல்களை மனப்பாடமாகச் சொல்லிக் கொண்டே, கம்பராமாயணத் தோற்பாவைக் கூத்து நடத்துகின்றனர்.

''கேரளத்தில் பாலக்காடு மாவட்டத்தில் கம்ப ராமாயணம் தோற்பாவைக் கூத்தாகச் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வருகிறது... இக்கூத்து பத்ரகாளி கோயிலில் நடத்தப்படுகிறது. இராமயணத்தை 21 பகுதிகளாகப் பிரித்து நிகழ்த்துகிறார்கள். இதற்குரிய பனுவல் 'ஆடல் பற்று' என அழைக்கப்படுகிறது.''[25]

"In every part of India to which I have travelled I have heard ways of telling the "Ramayana" that stress the local customs and regional culture."[26]

''நான் இந்தியாவின் ஒவ்வொரு பகுதிகளிலும் பயணம் செய்யும்போது அங்கு வாழும் மக்களின் பழக்க வழக்கங்களையும், வட்டாரக் கலாச்சாரச் சிறப்புக்களையும், இராமாயணக் கதை மூலம் அவர்கள் விளக்கிச் சொல்வதைக் கேட்டிருக்கிறேன்.''

இச்சான்றுகளும் மேற்காண் கருத்துக்கு ஓரளவு அரணாகின்றன.

1. சிந்து வெளித் தானியக் களஞ்சியம் 'சேர்' பெயரின் அடியாகச் சேரர் என்னும் பெயர் வந்திருக்கலாம் என ஊகித்தால், அதற்கு முன்னால், அவர்களுக்கு என்ன பெயர் என்னும் வினாவுக்கு விடை வேண்டும். பெயர் இல்லாமல் 'முடி மன்னர் இரார் அன்றோ!

வேறு சான்றுகள் கிடைக்கும் வரை, பெயர் தோன்றிய காலம் முதலே சேரர் ஊன்னும் பெயர் அமைந்திருந்ததாகக் கொள்ளலாம்.

இவ்வாறு சொல்லுவதில், கால வரையறை செய்யும் சிக்கல் இருக்கிறது.

தொல்காப்பியர் ''வண்புகழ் மூவர்'' எனத் தொகைப் பெயராகச் சுட்டிச் சொல்லுகின்றாரேயன்றித் தனித்தனிப் பெயரைச் சுட்டவில்லை என்பது கருதத்தக்கது.

'மூவர்' எனத் தொகைப் பெயராகச் சொல்லுவதால், அம் மூவர் யாவர் என்பது நாட்டு மக்கள் நன்கு அறிந்த ஒன்றாக இருக்கலாம். அது பற்றிச் சொல்லாது போயிருக்கலாம்.

எனினும் தனிப்பெயர் உண்டென்பதை உளத்தில் கொண்டே, மூவர் என்னும் தொகைப் பெயரால் சுட்டுகின்றார்.

தனித்தனிச் சிறப்புப் பெயர் அரசர்க்கு இன்றேல் தொல் காப்பியத்தில் கூறப்படும் வேந்தர்க்குரிய பெருமை, சிறப்பு, நடை முறைகள், வேந்தரோடு தொடர்புபடுத்திச் சொல்லப்படும் பிற செய்திகள் முதலியவை பொருளின்றிப் போய்விடும்.

2. சிந்துவெளிக் களஞ்சியப் பெயரின் அடியாகச் சேரர் பெயர் வந்தது என்பதை ஊகத்தின் அடிப்படையில் ஏற்றுக் கொண்டால்,

சிந்துவெளிக் காலப் பழைமையையொட்டியே சேரரின் காலப் பழைமை என வரும். இக்காலத்துக்கும் முன்னரே மூவேந்தர் வாழ்ந்தவர் அல்லவா.

3. பாரதப் போரில் பெருஞ்சோற்றுக்காகக் களஞ்சியங் களைக் கட்டினர் சேரர் என்றால், பாரதப் போர் பற்றி இப்போது ஆய்வாளர் வரையறை செய்யும் காலப் பழைமையை ஏற்பது பற்றி உறுதி செய்தல் வேண்டும்.

4.''சேர சோழ பாண்டியர்'' என உரையாசிரியர் பரிமேல முகர், சங்கப் பாடல்களை உளம் கொண்டே கூறுகிறார்.

கால வரையறை செய்வதில், சேரர் பெயர்க் காரணம் அறிந்து கூறுவதில் உள்ள சிக்கலைத் தக்க சான்றுகள் மேலும் கிடைக்கும் போது ஓரளவு தீர்த்து விட முடியும்.

சேர மன்னரின் வரிசை முறைமை, அடையாள மாலையை உறுதிப் படுத்தியமைக்கு மேலரணாக இப்போது இங்குக் காட்டிய சான்றுகள், எழுதிய சிந்தனை ஆகியவை, வேறு பொருந்திய சான்றுகள் கிடைக்கும் போதும், ஏற்புடைப் புதிய சிந்தனைகள் தோன்றும்போதும் மாறுவது இயல்பே, இது ஓர் ஆய்வு நெறிமுறையின் இயல்பும் கூட.

இம்மட்டில், சேரர் பற்றிய ஆய்வினை நிறுத்தி, பழனி மலைவாழ் பழங்குடி மக்கள் வாழ்வில் சேரநாட்டின் தாக்கம் பற்றி ஆராயலாம்.

# பகுதி இரண்டு

## பழனி மலைத் தொடர்

*பழனி மலைத் தொடர் மேற்கு மலைத் தொடரின் பகுதி.*

*1. மேற்குத் தொடர்ச்சி மலையும், அதனோடு இணைந்து வரும் மேற்கு மலைத் தொடரும் இமயமலை தோன்றுவதற்கு முன்னரே தோன்றிய தொன்மையான மலை என்பது புவி அமைப்பியில் வல்லார் கூறுகின்றனர்.*

*2. இந்தியத் துணைக் கண்டத்தின் தென்பகுதி தாழ்ந்து, வட பகுதி உயருங்கால் கடலில் இருந்து தோன்றியது இமயமலை எனவும், கடலில் இருந்து இமயமலை மேல் எழுந்தமைக்கு உறுதி யான சான்றாக, கடல் வாழ் உயிர் இனங்களின் புதை படிவங்கள் (Fossils) இமயமலை அடுக்குகளின் ஊடே காணப்படுகின்றன எனவும் கடல்சார் உயிர் இன வல்லாருடன் இணைந்து புவி அமைப்பியல் வல்லார் கூறுகின்றனர்.*

*3. இப்படி எதுவும் மேற்கு மலைத் தொடர்ச்சி பற்றியோ, அதனுடன் தொடரும் பழனிமலைத் தொடர் பற்றியோ இதுவரை முற்கூறிய வல்லார் யாரும் கூறவில்லை.*

4. இதற்கு மாறாக, இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் மலை மண்ணுள் புதையுண்டும், பின்னர்ப் புவி மேற்பரப்புக்கு வந்தும் விளங்குகின்ற வயிரக் கற்களும், மாணிக்கப்பரல்களும் மேற்கு மலைத் தொடரின் அடர்ந்த மலையுச்சியான களக்காடு வனப்பகுதியில் இப்போதும் காணப்படுகின்றன.

ஆப்பிரிக்கக் கண்டமும், மேற்கு மலைத் தொடரும் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் ஒன்றாகவே இணைந்திருந்தன. பிறகு பிரிந்தன. ஆப்பிரிக்கக் காடுகளின் அடர்த்தியும் வைரக் கற்களும் பல்லுயிர்ப் பெருக்கமும் மேலை மலைத் தொடரில் காணப்படுவது இவ்விணைப்பையும், பிரிப்பையும் உறுதி செய்கின்றன.

இரலையும், மரையும், வரையாரும் ஓடுங்கால் கால் குளம்பு பட்டு வைரக் கற்கள், மாணிக்கப் பரல்கள் மலையில் தெறிக்கும், ஒளி வீசும் எனச் சங்கப் புலவர்கள் பாடியவை எவ்வளவு அரிய உற்று நோக்கு உண்மை!

இயற்கையோடு இயைந்த அழகை அவ்வண்ணமே எடுத்து இயம்புவன சங்கப் பாடல்கள்.

5. பரசுராமர் மேலைக்கடலில் கோடரி எறிந்ததும், கடல் நீர் குறிப்பிட்ட தொலைவு வரை உள்வாங்கிச் சென்று, பெருங் கரைத் தொடர் தோன்றியது எனக் கேரளோற்பத்தியும், கேரள மான்மியமும் கூறும் நிகழ்வும்,

கடல் கோளோடு சேர்ந்த ஆழிப் பேரலை உண்டாக்கிய இயற்கைப் பேரிடர்ச் சீற்றமே ஆகும்.

அவ்வாறு தோன்றி வெளிப்பட்ட மணற்பரப்பு உவர் மண் பரப்பாக இருந்தது. நாகப் பாம்பின் நச்சுத் தந்மை அந்த உவர்த் தன்மையை நீக்கியது எனவும் அந்நூல்கள் கூறுகின்றன.

இந்நிகழ்வு மேலைக்கடலில் தென்பகுதியில், இதே மேற்குக் கடலின், வட பகுதியில், குஜராத் அருகில் ஒரு கடல்கோள் முன்பு நடந்துள்ளது.

6. யாதவர் இனத் தலைவன் கண்ணபிரான். கண்ணனுக்கும் ஜராசந்தனுக்கும் போர் நடந்தது. கண்ணனால் ஜராசந்தனை வெல்ல இயலவில்லை.

போரில் எஞ்சியிருந்த யாதவர்களைப் பாதுகாக்க, அவர்களை அழைத்துக் கொண்டு கண்ணன் மேற்கே குஜராத் கடற்கரைக்குச் சென்றான்.

மேலைக் கடல் அரசனிடம் பன்னிரண்டு யோசனை தூரம் நிலம் கேட்டான். கேட்ட அளவு கடல் உள்வாங்கிச் சென்றது, நிலப்பரப்பு தோன்றியது.

இந்நிலப் பரப்பில் துவாரகை நகரம் உருவானது.

வரலாற்றுச் செய்தியாகக் கூறப்படும் இது, குஜராத் பகுதியில் முற்காலத்தில் ஏற்பட்ட கடல் உள்வாங்கிச் சென்ற பெருங் கடல் கோள் அழிவு நிகழ்வே ஆகும்.

7. கண்ணபிரான் வந்த வேலையை முடித்து மறைந்தான். பாரதப் போர் முடிந்து முப்பத்தாறு ஆண்டுகள் கழிந்தன.

கடல் ஆழிப்பேரலை பொங்கி எழுந்து கரையை நோக்கி வந்தது. துவாரகை நகரம் முழுவதையும் அழித்துவிட்டது.

இப்பேரழிவை அப்போது, துவாரகையில் தங்கியிருந்த அருச்சுனன் நேரில் கண்டான்என்று வியாச பாரதம் கூறுகிறது.

8. கி.மு.113 ஆம் ஆண்டு வாக்கில் கிரேக்க நாட்டிலிருந்து ஸீலியோபிஸ் என்னும் பயணி, தற்போது ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பஞ்சாப் பகுதிகள் இணைந்த விகஸிலா என்னும் பகுதியிலிருந்து பெஸ்நாகர் என்ற இப்போதைய சௌராஷ்டிரத்துக்கு வந்தார்.

கண்ணபிரானைப் பற்றி நன்கு அறிந்தார். கண்ணனின் அடியவர் ஆனார். கண்ணனின் நினைவைப் போற்ற எழுப்பினார்.

கண்ணனுக்கு நினைவுத் தூண் எழுப்பினார். அந்நினைவுத்தூண் இப்போதும் உள்ளது.[27]

9. 1963 இல் எச்.டி.சங்காலியாவும், 1979 இல் எஸ்.ஆர். ராவும், அதன் பின்னர் அலோக் திரிபாதியும் குஜராத் துவாரகைக் கடல் பகுதியில் அகழ்வாய்வு செய்ததில் கண்ணனின் தலைநகர் துவாரகை, அரண்மனைக் கட்டடச் சிதைவுகள், சில செப்புக் காசுகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்ததாகக் கூறுகின்றனர். கடற்கரையை யொட்டி துவாரகாதீசுவரர் கோயிலையும் கண்டுபிடித்துள்ளனர்.

எனவே, கண்ணன் துவாரகையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தமை வரலாற்றுச் சான்றாகக் கிடைத்துள்ளது.

"Alok Tripathi, Superintending Archaeologist, underwater Archaeology Wing (UAW) said the ancient underwater structures found in the Arabian Sea were yet to be identified.

We have to find out what they are. There are fragments. I would not like to call them a wall or a temple. They are part of some structure said Dr. Tripathi, himself a trained diver.

Thirty copper coins were also found in the excavation area. The structures found on land belonged to the medieval period. We have also found 30 copper coins. We are cleaning them. After we finish cleaning them, we can give their date, he said.

Dwaraka is coastal town in Jamnagar district of Gujarath. Traditionally, modern Dwaraka is identified with Dvaraka on Dvaravathi, mentioned in the Mahabharatha as Krishna's city. Dwaraka was a port, and some scholars have identified it with the island of Berka mentioned in the periplus of Erythrean Sea. Ancient Dwaraka sunk in the sea and hence is an important archaeological site.

The first archaeological excavations a Dwaraka were done by the Deccan College, Pune, and the Department of Archaeology,

Government of Gujarat, in 1963 under the direction of H.D. Sankalia. It revealed ante facts many century old.

The ASI conducted a second round of excavation in 1979 under S.R. Rao's direction. He found a distinct pottery known as lustrous red rare, which could be more than 3000 years old. Based on the results of these excavations, the search for sunken city in the Arabian sea began in 1981. Scientists and archaeologists have continually worked on the site for 20 years.

The UAW began excavations at Dwaraka again from January 2007. Dr. Tripathy said : To study the antiquity of the site in a holistic manner, excavations are being conducted simultaneously both on land (close to the Dwarakadish temple) and undersea so that findings from both the places can be co-related and analysed scientifically.

The objective of the excavation is to know the antiquity of the site, based on material evidence. In the offshore excavation, the ASI's trained underwater archaeologists and the divers of the Navy searched the sunken structural remains. The finds were studied and documented.

On land, the excavation is being done in the forecourt of Dwarakdish temple.

*10. பூம்புகார்ப் பெருநகரின் ஒரு பகுதியான மருவூர்ப் பாக்கம் நாகரூர் என்றாகி, அதுவே நாகூர் என்றாகி இருத்தல் வேண்டும். எனவே, பட்டினப்பாக்கமும் இணைந்து ஒரு பெரு நகராகவே பூம்புகார் புகழ்பெற்று விளங்கியது என்பதும் வரலாற்று உண்மை.*

*11. துவாரகைத் துறைமுகம் அருகில் துவாரகாதீச்சுரர் கோயில், கொற்கைத் துறைமுகம் அருகில் திருச்சீரலைவாய்க் கோயில், தாகாத் (டாக்கா) துறைமுகம் அருகில் இடாகினி தேவி கோயில், திரி கோணமலைத் துறைமுகம் அருகில் கோணச்சுரப் பெருமான் கோயில், பூம்புகார்த்துறைமுகம் அருகில் திருச்சாய்க் காட்டுப் பெருமான் கோயில், தனுக்கோடித் துறைமுகம் அருகில் இராமேச்சுரம் கோயில் ஆகியவற்றைக் கவனிக்கும்போது,*

மேலைக் கடற்றுறை முகங்களிலும் பழம்பெரும் கோயில்கள் இருந்திருத்தல் வேண்டும் என ஊகிக்க முடிகிறது.

12. சேரர் வரலாற்றைச் சிந்திக்கும்போது, இந்தச் செய்திகளைச் சொல்லுவது ஏன் என்னும் வினா எழுகிறது.

1. வியாசர் கூறுகின்ற இதிகாசச் செய்தி
2. துவாரக் கடலடி அகழாய்வு

இந்த இரண்டையும் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாக எடுத்துக் கொண்டால்,

1. கண்ணன், 'நப்பின்னை, பாரதம் பற்றிய செய்திகளும்,

2. 'வண்துவரை' (துவரபதி- துவாரகை) பற்றியும்,

3. நாற்பத்தொன்பது தலைமுறை வேளிர் பற்றிய செய்திகளும் கூறும் சங்க இலக்கியப் பாடல்களையும் வரலாற்று ஆதாரமாகத்தானே கொள்ள வேண்டும்.

இவை, வரலாற்றுச் செய்திகள் என அறிஞர்கள் ஏற்றுக் கொள்ளும்போது, பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனும், பெருஞ்சோறும் வரலாற்றுச் சான்றாகிறார்கள்.

கி.மு.1500-க்கு முற்பட்ட துவாரகையும், பாரதப் போரும் வரலாற்றுச் செய்தியாகி உண்மையாகும் போது, அவை பற்றிக் கூறும் சங்க காலப் பாடல்களின் காலத் தொன்மையையும் ஏற்றுத் தான் ஆக வேண்டும்.

இவ்விடத்தில் ஓர் ஐய வினா எழும்.

ஒரு நிகழ்ச்சி கி.மு.வில் நடந்துள்ளது. அதில் தமிழ் நாட்டு வேந்தன் பங்கு கொண்டான்.

இச்செய்தியை 200 ஆண்டுகளுக்கு முந்திய பாடல்களில் கூடச் சொல்லலாம் அல்லவா என்பதே அந்த ஐயம்.

சங்கப் பாடல்கள் என்பன சங்க காலத்தில் பாடப் பட்டவையல்ல. அதற்கும் முன்பே பாடப்பட்டவை. சங்ககாலத் தில் தொகுக்கப் பெற்றவை.

அவை அதற்கு முன் வெவ்வேறு காலங்களில் பாடப்பட் டவை என்னும் உண்மை அந்த ஐயத்தை நீக்குகிறது.

துவாரகைச் செய்தியை ஏற்றுக் கொள்ளும்போது, தமிழ் செம்மொழி என்பதன் காலப் பழைமைக்கு மேலும் சான்று கிடைக்கிறது.

முற்கூறிய கடல்கோளுடன் சேர்ந்த ஆழிப்பேரலை, இயற்கைப் பேரிடரே ஆகும்.

எகிப்தின் மத்திய தரைக்கடல் பகுதியில் அலெக்சாண் டரியா நகருக்கு அருகில் பழைய நகரம் ஒன்று புதையுண்டு இருந்ததை அமெரிக்கத் தொல்லியலார் கண்டறிந்துள்ளனர்.

ஸ்மித் சோனியன் இயற்கை வரலாற்று அருங்காட்சியக ஆய்வாளர் ஜான் டேனியன் ஸ்டான்லி குழுவினர் இந்நகரைக் கண்டறிந்துள்ளனர்.

இக்குழுவினர் எகிப்து அலெக்சாண்டரியா துறைமுகத் தில், நீருக்கு அடியில் தோண்டியபோது கண்டனர். கி.மு.331 இல் அலெக்சாண்டர், அலெக்சாண்டரியா நகரை நிர்மாணித்தார். அதற்குமுன் கி.மு.7 ஆம் நூற்றாண்டில் மீனவ கிராமம், அந்நக ருக்கு அடியில் இருந்தது. கிராமத்தின் பெயர் ரகோடிஸ். இங்கு மீன்பிடித் தொழில் சிறப்பாக நடைபெற்றது. அதிக மக்கள் வாழ்ந்தனர் என்ற செய்தியை அமெரிக்க நில அமைப்பியல் சங்கம் தனது மாத இதழில் வெளியிட்டுள்ளது.

இது போன்று, பூம்புகாரிலும் கடலகழ்வு ஆய்வு நடத்தல் வேண்டும்.

13. இங்கே ஓர் அறிவியல் செய்தியையும் தொடர்பு கருதி எடுத்துக் காட்டலாம்.

கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒரு மிகப் பெரிய விண்வெளிக்கல் சேரநாட்டில் விழுந்தது.

சேர நாட்டுத் துறைமுகம் முசிறி, நிலத்துள் புதையுண்டது. திருவனந்தபுரம் முதல் கோவா வரை புதிய நிலப்பரப்பு தோன்றியது எனப்புவி அமைப்பியல் ஆய்வாளர் சிலர் கூறுகின்றனர்.

இது, குஜராத் நிலப்பரப்பு தோன்றியதைப் போன்று உள்ளது.

சேர நாட்டின் மீது விண்வெளிக்கல்விழுந்த செய்தியைத் தற்கால ஆராய்ச்சியாளர் கூறுவதற்கு இணையாக,

14. புறநானூறு சங்க நூற்பாடலிலும் (பா229) ஒரு செய்தி சொல்லப்படுகிறது. அது:

யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறை சேர மன்னருள் ஒருவன். இவன் காலத்தில் சேர நாட்டில் கூடலூர் கிழார் என்னும் புலவர் பெருமான் வாழ்ந்தார்.

"ஒரு பங்குனித் திங்களில், முதல் பதினைந்து நாட்களில், ஒரு நாள் இரவு, வானில், மேட ராசியில் கார்த்திகை விண்மீனின் முதல் கால் இருந்தது. அச்சமயம் மூலவிண்மீன் உதயமாயிற்று. மிருக சீரிடவிண்மீன் மறையத் தொடங்கிய நேரம். அப்போது, வானத்தில் ஒரு விண்மீன் வடக்கிலும் செல்லாமல், அனுட விண் மீனிலிருந்து புனர்பூசம் வரைசென்று, தரையில் விழுந்தது. அதைக் கண்ட நான், நம் அரசனுக்குத் துன்பம் எதுவும் நேரிடக்கூடாதே என அஞ்சி வருந்தினேன். நான் அஞ்சியவாறே விண்மீன் விழுந்த ஏழாம் நாள் அரசன் உயிர் துறந்தான்!" என்பதே அச்செய்தி.

விண்வெளிக்கல் சேரநாட்டில் விழுந்தது.

*முசிறி நகர் புதையுண்டது.*

*புதிய நிலப்பரப்புத் தோன்றியது.*

*என்னும் அறிவியல் செய்தியுடன், கூடலூர் கிழார் கூறும் செய்தியையும் இணைத்துப் பார்க்கலாம்.*

*15. விண்வெளிக்கல் விழுந்து முசிரி அழிந்த செய்தியைக் கூறும் தற்கால ஆய்வாளர்கள், அதே கால கட்டத்தில்,*

*கீழைக் கடற்கரையில் பூம்புகார் நகரமும், பாண்டிய நாட்டுக் கொற்கைத் துறைமுகமே கடலுள் மூழ்கின எனவும் கூறுகின்றனர்.*

இது, இப்போது, இந்தோனேஷியக் கடலில் எழுந்த *சுனாமி தாக்குதல், தமிழகக் கடல் ஓரம் வரை பரவி வந்து தாக்கி அழித்தமை போன்றது.*

இந்த இரண்டு கடல் கோளால் இப்போதைய இலங்கை *தனித்தீவாகப்பிரிந்து விட்டது எனவும் சொல்லுகின்றனர்.*

குமரிக் கண்டத்தில் இருந்த இலங்கைத் தீவும் கடலில் *மூழ்கியதால், அங்கிருந்து தப்பிப் பிழைத்த மக்கள், இப்போதைய இலங்கைப் பகுதியில் குடியேறி, தாங்கள் முன்னர் வாழ்ந்த இலங்கையின் பெயரை இட்டுக் கொண்டனர். 'தென் இலங்கை' என்பது இனம் சுட்டிய அடைமொழி.*

*16. இவற்றுள் இணையாகக் கீழைக் கடலில் ஆழிப் பேரலை பொங்கி எழுந்து, இப்போது அரியலூர்ப் பக்கமிருந்து கடல் நீர் உள்வாங்கிச் சென்றுவிட்டது.*

*''கல்லக்குடி அருகில் உள்ள சாரதாமங்கலம் சிற்றூரில், இந்திய அகழ்வாய்வுத் துறையினர் அகழ்ந்தெடுத்த கடல்வாழ் உயிரினங்களின் படிவங்கள் 10 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டவை. எனவே, அப்போது அரியலூர்ப்பகுதி கடல் பகுதி''*- (The Hindu, Sep. 6, 2005)

அரியலூர் அருகில் உள்ள கீழப்பழுவூர், வாரணவாசி, கல்லமேடு ஆகிய இடங்களும் முன்பு ஆழமான கடல் பகுதியாக இருந்தன என்பதற்கு, 'பாசில்'களாகிய தடயங்கள் தற்போது கிடைத்து வருகின்றன.

இப்பகுதிகளை ஒருங்கிணைத்து 'பாசில் பூங்கா' (Fossils Park) நிறுவ பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்து வருகிறது (தினமலர், 08.10.2009).

17. இதற்கு மாறாக, பதியெழுவறியாப் பழங்குடி மூதூர் பூம்புகாரை மூழ்கடித்து, 'கடல்மீசை மிதந்திட்ட பூந்தராய்' எனச் சீகாழியை மூழ்கச் செய்தது; கடல் நீர் சீகாழிக்குள் மேலேறி வந்தது.

''பாணி மூவுலகம் புதையமேல் மிதந்த தோணிபுரத்து உறைந்தனை;''

''மொய் பவளத்தொடு தரளம் துறையாகும் தோணிபுரத் தீசன்;'

''தோணியப்பர்'' எனச் சிவபெருமானைத் திருஞான சம்பந்தர் பாடும்படிச் செய்தது, மேற்கூறிய அவரது அருள் மொழிகள்.

இதற்குக் காரணமான கடல்கோள் இரு அழிவுச் செய்திகளும் இங்கு நினைக்கத்தக்கவை. தாம் முன்பு கேள்விப்பட்ட உண்மையையே சம்பந்தர் சொல்லுகிறார்.

18. பசிபிக் கடல் பகுதியதில் ஈஸ்டர்த் தீவு உள்ளது. இத் தீவில் உடலற்ற கழுத்துப் பகுதிச் சிலைகள் காணப்பட்டன. மக்கள் யாரும் வசிக்கவில்லை.

சிலையின் கழுத்துப் பகுதியில் காணப்பட்ட எழுத்து வடிவம் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என அதனை ஆராய்ந்த ஈராஸ் பாதிரியார் கூறுகிறார்.

இத்தீவில் சிதைந்த கட்டடப் பகுதியின் தேக்கு மரத் துண்டுகள், கேரளத்து மலைப்பார் (மலபார்) பகுதியில் மட்டுமே கிடைக்கக் கூடியவை என உடன் சென்ற தாவர இயல் வல்லார் கூறினர்.

இவை இரண்டும் - எழுத்துக்கள் திராவிட மொழிக் குடும்ப எழுத்துக்கள், தேக்குமரம்-சேரநாட்டின் தொன்மைக்குச் சான்றாகும்.

ஏதோ ஒரு நாகரிகத் தொட்டிலின் பகுதியாகத் துலங்கிய இத்தீவில் நாகரிக மக்களினம் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பது உறுதி.

ஈராய் பாதிரியார் சென்றபோது, மக்களே வசிக்காத இத் தீவின் தொன்மைக்கும், சேரநாட்டுக்கும் உள்ள தொடர்பை அறிந் தார். ஆயினும், அச்சிதைவுகளுக்குக் கால வரையறை எதுவும் அவர் சொல்லவில்லை.[28]

19. திராவிட மொழிக் குடும்பத் தொடர்பு எழுத்துக்களும், மேற்கு மலைத் தேக்கு மரச் சிதைவுகளும் ஈஸ்டர்த் தீவில் கண்டு பிடிக்கப்பட்டமையால்,

குறிஞ்சியோடு தொடர்புடைய சேர மன்னரின் தொன்மை யும், சேரரை முதன்மைப்படுத்திக் கூறிய மூவேந்தர் வரிசை முறைமையின் காரணமும் ஏற்றுக் கொள்ளும் சிந்தனையில் இடம் பெறுகின்றன.

20. ''பதிற்றுப்பத்து'' சங்க நூலுள், ''உம்பற்காடு'' (உம் பல் - தேக்கு, யானை) -தேக்கு மரக்காடு சுட்டிச் சொல்லப்படுவ தும்,

புவி இயல், மண்ணியல் தன்மைக்கும், தாவரவியல் மரபுக்கும் பொருந்தி வந்து, ஈஸ்டர்த்தீவு தேக்குமரப் பழைமைக் கும், சேரலின் தொன்மைக்கும் சான்று பகர்கிறது.

கேரளத்தில், 'பூரப்பறம்பு' உள்ள இடத்தின் பெயர் 'தேக்கின்காடு' என்பதாகும்.

சங்ககால உம்பல் காட்டின் தெளி பொருளாக இன்றைய தேக்கின்காடு பெயர் அமைந்துள்ளமை, தமிழ் செம்மொழிக் காலப் பழைமைக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டு.

21. இதே போன்று, பழனிமலைத் தொடரில், 'தேக்கந் தோட்டம்' என்னும் கேரளத்துத் தேக்கின் காடு தொடர்வடிவப் பெயர் கொண்ட இடம்,

பழனியிலிருந்து கோடைக்கானல் செல்லும் மலைச் சாலையில் உள்ளடங்கி அமைந்துள்ளது.

22. யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறை, பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆகிய சேர மன்னர்களின் பெயர்களை,

'உம்பல்' என்னும் சொல்லின் மற்றொரு பொருளான யானையுடன் தொடர்பு படுத்திக் கூறப்படுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

சிறு குழந்தைகளுக்கு முதன்முதல் சோறு ஊட்டும் நாளை விசேடமாகக் கொண்டாடுவதைப் போல, இன்றும் கேரளத்தில், யானைக்குச் சோறு அளிப்பதை ஆண்டுதோறும் ''யானை ஊட்டு'' என்று விழாவாகக் கொண்டாடுகின்றனர்.

யானையோடு அவர்கள் வைத்திருந்த தொடர்பு இன்றும் பேணப்படுகிறது.

சங்க நூலான பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்படும் பெயர் கள், செயல்கள், நடைமுறைகள் இப்போதும் கேரளத்தில் வழக் கில் இருந்து வருவன. எனவே, சேர நாட்டின் தொன்மை மேலும் வலுப்பெறுகிறது.

## பழனி மலைத்தொடர் அமைப்பு

பழனி மலையின் சங்ககாலப் பெயர் ''பொதினி'' எனப் பட்டது. ''ஆவினன்குடி'' என்பார் நக்கீரர்.

மேற்கு மலைத் தொடர்ச்சியின் தொடராகத் தொடரும் பழனிமலைத் தொடர் அமைப்பைப் பற்றிப் பார்க்கலாம்.

பழனி மலைத் தொடர் 2068 ச.கி.மீ. பரப்பளவு கொண்டது. 2133 மீ. உயரம் உடையது.

இத்தொடரை அதன் அமைப்பு வழி மேல் பழனி மலை, கீழ்ப்பழனி மலை எனப் புவி அமைப்பியல் வல்லார் வரையறுத் துள்ளனர்.

பெருமாள் மலைக்கும் மேலே, மேல் பழனி மலைத் தொடர். இப்பகுதியில் கோடைக்கானல் நகரியமும் சிற்றூர்களான கவிஞ்சி, பூம்பாறை, கூக்கால் முதலியனவும் அமைந்துள்ளன.

அதற்குக் கீழே தெற்கே பண்ணைக்காடு, பூலத்தூர், தாண் டிக்குடி முதலிய தென்றிசைச் சிற்றூரிலிருந்து வடதிசைச் சிற்றூ ரான 'பாச்சனூர் வரை பரவிக் கிடப்பது கீழ்ப்பழனி மலைத் தொடராகும்.

## பழனி மலைத் தொடர் பழங்குடி இனத்தவர்

பழனிமலைத் தொடரில் ஆங்காங்கே மலைக்காடுகளில் உள்பக்கம் பழங்குடி இனத்தவர் முன்பு மிகுந்த எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தனர்.

இவர்கள் இனக்குழுக்களாக, பிறகு சமூகம் என்னும் கருத்துக் கோட்பாடு பரிணாம வளர்ச்சி பெற்று வந்த நிலையில் சமூகத்தவராக வாழத் தொடங்கினர்.

இப்போது இருக்கும் சிலரிடம் பேசியதிலும், பழகிய திலும், வாழ்க்கை நடத்துவதைக் கண்ணுற்ற போதும் இருப்பிடங்

களைப் பார்த்த போதும், அவர்களுக்கே உரிய பண்பட்ட வாழ்க்கை வாழ்வதைக் காண முடிந்தது. நான் சென்றது 1959 ஆம் ஆண்டில். அப்போது இருந்தவர்களே சிலர்தாம்.

காலமாற்றத்தினால் பிழைப்பை நாடி அவர்கள் மலையை விட்டுக் கீழே இறங்கிச் சென்றுள்ளனர். சிலர் ஆங்கே புதிதாக உரு வெடுத்த காபி, ஏலம், வாழைத் தோட்டங்களில் கூலிகளாக அமர்ந்துவிட்டனர். மதம்மாறிச் சென்றவர்கள் சிலர், அரசு உதவி பெற்றுப் படித்து அரசுப் பணிபெற்றுச் சென்றவர்கள் மிகச்சிலர்.

முன்பு காடுகளில் தாவளம் குடிசைகளில் வாழ்ந்தவர் களில் இப்போது எஞ்சியிருப்பவர்கள் காபி, ஏலத் தோட்டக் குடியிருப்புகளிலும், அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ள பாதுகாக்கப் பட்ட குடியிருப்புகளிலும் தடை செய்யப்பட்ட இடங்களில் உள்ள குடியிருப்புகளிலும் வாழ்கின்றனர்.

இவர்களுக்காக இப்போது பழங்குடியினர் நலவாழ்வுப் பள்ளிகளும் அம் மாணவ மாணவியர் தங்கிப் பயில்வதற்கு உண்டுறை விடுதிகளுங் சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள சிலரின் இயற்கையோடு இயைந்த வாழ்வைக் கவனித்த போதும், அவர்களின் பேச்சுக்களிலுருந்தும் இயற்கை யோடு இயைந்த வழிபாடு நடத்தியதாகத் தெரிகிறது. சில பழந் தமிழ்ச் சொற்களைச் சொல்லுகின்றனர். மலையாளச் சொற்களை யும் காணலாம். அவர்களின் சமூக அமைப்புப் பழைமை சார்ந்த நாகரிகத்தைக் காட்டுவதாக உள்ளது.

பழனி மலைத் தொடர் பழங்குடி இனத்தவருள்,

1. பழியர்கள்

    இவர்கள் கீழ்ப்பழனி மலைப் பழியர்,
    மேல் பழனி மலைப் பழியர் என இரு பிரிவினர்

2. முதுவர்
3. மன்னான்
4. ஊராளி
5. குறவர்
6. புலையர்

7. குன்னுவர்
8. மன்னாடி

இவருள் முதியோர்-முதியவர்கள் மறைந்தனர். எஞ்சியவர்களும் அருகியே வாழ்கின்றனர். எனவே, 'வாழ்ந்தனர்' என்றே கூறும் நிலை.

முதுவர் இனத்தார் சேரரின் ஆட்சிக்குட்பட்ட கொங்கு மண்டலம், கொச்சி - திருவாங்கூர்ப் பகுதிகளிலிருந்து பழனி மலைத் தொடருக்குப் புலம் பெயர்ந்து வந்தவர்கள் ஆவர்.

காடுகளை அழித்தல், மழை இன்மை, வறுமை, முதலிய வற்றால் இயன்றவர்கள் எல்லாரும் சென்றுவிட்டனர். போதிய மருத்துவ வசதி உரியகாலத்தில் கிடைக்காமையால் அழிந்தவர் பலர். இவர்கள் காப்புக் காட்டைப் பாதுகாக்கும் காவலர்களாக, அரசின் பிள்ளைகளாக இருந்தனர். காலமாற்றத்தினாலும், புதிய வனச் சட்ட விதிகளாலும் காட்டைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசே எடுத்துக் கொண்டது. இதனால், இவர்களின் தனித்த வாழ்வுக்கு இடையூறுகள் நேர்ந்தன.

## இருப்பிடம் பழியர்

பழியர் - கீழ்ப்பழனி மலையின் பழியர் ''கல்காட்டுப் பழியர் அல்லது ''புடைப்பழியர்'' என்று தங்களைச் சொல்கிறார் கள்.

தொடக்க காலம் முதலே 'கல்' என்னும் மலையிலும், 'புடை' என்னும் குகையிலும் வசித்து வந்தனர். இப்போது அப்படி வாழவில்லை. தாவளம் பந்தல் குடிசைகளைக் கட்டி வாழ்ந்து வருகின்றனர்; குகைகள் ஒன்றிரண்டு உள்ளன. ஆனால் அவற்றில் யாரும் வசிக்கவில்லை.

## கல்பாண்டி வீடுகள்

விழுப்புரம் மாவட்டம் கல்வராயன் மலையில், பழங்குடி இனத்தவர் வாழ்ந்த கல்பாண்டி வீடுகள் உள்ளன. இரண்டரை அடி அகலம், நான்கு அடி நீளம் கொண்டது. சுற்றிலும் கல்வைத்து

அடைக்கப்பட்டுள்ளது. மேற்கூரை ஒரே பலகைக் கல். குகையின் முன் பகுதியில், ஒரு கற்பலகையைக் கொண்டு அடைத்துக் கொள் வார்கள் என்ற இச்செய்தியைக் கூறியவர் திரு எஸ்.கே. மணி என் னும் கல்வராயன் மலைவாழ் பழங்குடி இன ஆய்வாளர் (புனிதக் குறள் அரசு - இதழ் - மார்ச், 2008).

இவைபோன்ற குகைகள் போன்ற அமைப்புகள் பழனி மலைத் தொடரில் இல்லை. ஒரு வேளை முன்பு இருந்து, பணப் பயிர்த் தோட்டம் அமைப்பவர்களால் அழிக்கப்பட்டிருக்கலாம், விலங்குகள் வந்து தங்கக் கூடும் என்று அஞ்சியும் அழித்திருக்க லாம், குகைகள் இருந்ததற்கான தடயங்களும் இல்லை. ஆனால், கோடைக்கானல் நகரியத்தின் தென்பகுதியில் ஒன்றிரண்டு உள் ளன. அவை மனிதர்கள் வசிப்பதற்கு ஏற்ற வகையில் சிறியதாக வும், குறுகியதாகவும் இல்லை. இருண்டு, ஊர்ந்து செல்லும் வண் ணம் அமைந்துள்ளன. மக்கள் வசித்தார்கள் என்று சொல்லுவதற்கு இல்லை. அதற்கு ஏற்ற இடமாகவும் இல்லை.

மேல் பழனி மலைப் பழியர் 5000 அடி உயரத்துக்கு மேல், மலைமுகட்டில், ''பழியன்தாவு'' என்னும் பகுதியில், தழைக் குடிசையில் வசிக்கின்றனர்.

சேரநாட்டு வழக்கு 'காவு' என்பது, 'தாவு' எனத்திரிந்தது.

மலைமேல், கானல் (காடு)களுக்கு நடுவே, பெரிய திடல் இடம் விட்டு, திடலைச் சுற்றிக் குடில்கள் அமைத்து வாழ்கின்ற னர்.

காட்டு விலங்குகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எல்லாரும் ஒரே இடத்தில்குழுவாக இணைந்தே வசிக்கின்றனர். ஆனால் கொடிய காட்டு விலங்குகள் இப்போது கிடையா.

அஞ்சு முகப்புல், போதைப் புல் வேய்ந்த குடில்கள், பக்க வாட்டில் மூங்கில் படல்கள் வைத்து ஈத்தைச் செடிகளால் அடைத் துள்ளனர். மண்தரை, தரையில் குரவம் தழையைப் பரப்பியுள்ள

னர். 'குரவம்' தழை என்பது குராமரத்தழையாக இருக்கலாம். குராமரம்-வெண்கடம்ப மரம்.

திடலின் நடுவே பசுந்தழைப் பந்தல் தாவளம் குடில் அமைந்துள்ளனர். இக்குடிலை இந்த ஆதிவாசி இனத்தார் ''தெய்வப்புரா'' என்று இதற்கு முன் வாழ்ந்தவர்கள் சொல்வதைக் கேட்டுச் சொல்கின்றார்கள்.

தெய்வப் புரா - செய்வப்புரை - தெய்வம் குடியிருக்கும் புரை. புரா என்பது மலையாள ஒலிப்பு வடிவம்.

இவர்களின் திடல் கேரளத்துத் திரிசிவப் பேரூரில் (திரி சூர்) அமைந்துள்ள ''பூரப் பறம்புத் திடலை'' நினைவுபடுத்து கிறது.

பழியர்களின் 'தெய்வப் புராவில்' எந்தத் தெய்வத்தின் உருவமும் கிடையாது.

பூசைப் புரை, தெய்வப்புரை, முடிப்புரை ஆகியவை கேரளத்தின் வழிபாட்டு இடங்களாகும்.

சீவேலிப் புரை, தேவாரப் புரை, ஊட்டுப் புரை, ஆக்குப் புரை, எடுத்துப் புரை ஆகிய கேரளத்துப் புரைகள் நினைவுக்கு வருகின்றன.

இந்த வழிபாட்டு முறைகள், பழனிமலைவாழ் பழங்குடி யினரிடையே சேரநாட்டின் (கேரளத்தின்) பண்பாடு, வாழ்வியல், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றின் தாக்கத்தைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

## உறவு முறை

கல்காட்டுப் பழியர் தம் அண்ணன் மனைவியை 'நங்கை அவுக' எனவும், அத்தானை 'மச்சான் அவுக' எனவும் உயர்வு சிறப்புக் கொடுத்துச் சொல்லுகின்றமை, அவர்களின் நயத்தக்க நாகரிகத்தை வெளிப்படுத்துகிறது.

'நங்கை கொழுந்தி' - கம்பன் நினைவுக்கு வருகின்றான்.

'நங்கை' என்னும் சொல்வழக்கு, கேரளத்தில், 'நங்ஙம்மா' எனவும், கேரளப் பழங்குடியினரிடையே (முன்னூட்டி) 'நங்ஙர் எனவும் அமைந்துள்ளது.

நில முதலாளிகளைப் பழியர்கள் 'ஐயன்' எனச் சொல்லுகின்றனர். 'ஐயன்' என்பது உயர்வு குறித்துச் சொல்லப்படுவது. 'ஐயன் ஆரிதனார்' என்னும் சேரநாட்டுப் புலவர் நினைவுக்கு வருகிறார்.

பழியர்கள் குறிஞ்சிக் கடவுள் முருகப்பெருமானைக் ''குன்ற நாதன்'' எனப் போற்றிப் பரவுகின்றனர்.

'குன்றன்' என்றே முற்காலத்தில் சொல்லி இருத்தல் வேண்டும். 'கணியன் பூங்குன்றனார்' என்னும் நல்லிசைப் புலமை நல்லார் பெயர் நினைவுக்கு வருகிறது.

'நாதன்' - பிற்காலத்தில் இணைந்த ஏட்டுப் பெயர். அம்மக்களுக்கு முருகனே வாய்த்த முழுமுதற் கடவுள். (நீல மலையில் - குந்தா-இன்றா-குன்றன், கருநாடகத்தில் குன்றப்பா-குண்டப்பா)

மேல் மலைப் பழியர் பாடும் பாட்டில், ஏட்டில் எழுதாக் கவிதை ஒன்றில்,

**''வண்ட மெட்டுப் பாதையிலே**
**கண்ட மட்டும் காடு வெட்டி**
**ஆன நிக்க எடமில்லாம**
**அலையுதடி பாத்தேடி''**

இப்பாடலடியில், வண்டன்மேட்டுப் பாதை 'என்பது' வண்ட மெட்டுப் பாதை எனத் திரிந்தது.

வண்டன் என்னும் பெயர் கொண்ட குறு நில மன்னன் ஒருவன். அவன் பெயரால் அமைந்த பேரியாறு, வண்டன் பேர் யாறு. கால மாற்றத்தில் 'வண்டிப் பெரியார்' ஆயிற்று.

வண்டன் மேட்டுப் பாதையைக் குறிப்பிடுவதிலிருந்து மேல் மலையாகிய கோடைமலை உச்சியிலிருந்து 'மூணாறு' செல்வதற்கு வழி அமைக்கப்பட்டிருந்தது. அவ்வழியாக மக்கள் போக்கு வரவு இருந்தது என்னும் வரலாற்றுச் செய்தி தெரிகிறது.

அடர்ந்த மலைக்கானல் காடுகள் வெட்டி அழிக்கப்படுவதையும் இப்பாடலில் குறிப்பிட்டு வருந்துகின்றனர். யானைகள் வசிப்பதற்குத் தக்க இடம் இல்லாமல் சோலைக் காடுகள் அழிக்கப்படுகின்றன.

ஆனால், அப்போது வாழ்ந்த கானகத்து யானைகள் இப்போது இடம்பெயர்ந்து போய்விட்டன. காட்டெருமைகள் வசிக்கின்றன.

1959 வரை கரடிகள் காணப்பட்டன. இன்றைய நி•லயில் கட்டடப் பெருக்கம் இரசாயன உரம் பூச்சிக் கொல்லி மருந்துப் பயன்பாடு ஆகியவற்றால் நரிகள் கூட இல்லாமல் அழிந்து விட்டன.

'மஞ்சு தவழும் மலையை', 'மஞ்சா வரை' எனவும், 'தேன் வரையை' தேவரை எனவும் சொல்லுகின்றனர். தூய பழஞ் சொற்கள்.

கீழ்ப்பழனி மலையில், தடியன் குடிசை (தடிவீரன் குடிசை) என்னும் இடத்திலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் பாதையில், 'குப்பம்மாள்பட்டி' என்னும் சிற்றூர் உள்ளது.

இவ்வூரில் வாழும் பழியர் இன மக்கள் தங்களின் பூசாரியை '' முன்னோடும் பிள்ளை'' என்கின்றனர்.

திருவிழாவில் அரிவாளைக் கையில் வைத்து ஓங்கிக் கொண்டு பூசாரி, முன்னால் ஓடுவர். அவரைத் தொடர்ந்து பின்னால் பலர் ஓடுவார்கள்.

திருவிழா என்பது, பழியர் மட்டும் தமது குடிசைகளில் ஒன்றாகச் சேர்ந்து, சாமியாடிக் கொண்டாடும் விழா.

ஏறத்தாழ இதே போன்று கேரளத்தில் 'காவு தீண்டல்' என்னும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அந்நிகழ்ச்சியில் ஆண் பெண் அனைவரும் கையில் அரிவாளை வைத்துக் கொண்டு ஓடுவர்.

'மேலும், 'காவு தீண்டல்' தொடக்க நிகழ்ச்சியைப் பொற் கொல்லர் ஒருவர், கோயிலை மும்முறை வலம் வந்து அறிவிப் பார்.[29]

"Indeed the festival opens the symbiotic ceremonial "Kavu theendal" or purifying of the temple by a goldsmith going round the temple three times ringing a bell at about 7 in the morning."

இவ்வாறு கேரளத்தில் 'காவு தீண்டல்' நிகழ்ச்சி நடை பெறுகிறது.

இவ்வோட்டத் திருவிழா வழிபாட்டுத் தொடர்ச்சி, காலப்போக்கில் பரிணாம மாற்றம் பெற்று, சமவெளியில் சேர நாட்டின் தொடர்புடைய குமரி மாவட்டத்தில். கையில் விசிறியுடன் சிவராத்திரி நன்னாளில் ஓடும் 'சிவாலய தரிசன ஓட்டமாக' இருக்கலாமோ?

ஏனெனில் 'இவ்வோட்ட தரிசனம்' வேறு மாவட்டங் களில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பழியர்கள் காட்டைக் 'காவு' என்னும் தூய பழந்தமிழ்ச் சொல்லால் சொல்லுகின்றனர். அடுத்த காவுக்குப் போக வேண்டு மானால், காணிக்காரர் (தலைவர்) போய்க் காடு பார்த்து வருவார் என்கின்றனர்.

இதில் ஒரு வேறுபாடு தெரிகிறது. இதுவரை மக்கள் வசிக்காத இடத்தைக் காடு எனவும், வசிப்பதற்கு ஏற்றவாறு திருத்திய காட்டில் மக்கள் வசிக்கும்போது, அந்த இடம் காவு எனவும் புரிந்து கொள்ள முடிகிறது.

குமரி மாவட்டத்தில் காவடியூர் (கா+அடி+ஊர்) காவை அடுத்துள்ள ஊர் அமைந்துள்ளது.

சீர்திருத்திய, மக்கள் வசிக்குமாறு செப்பம் செய்த காட்டைப் பழியர்கள் செப்புக்காடு என்கின்றனர்.

''காடும் காவும் கவின்பெறு துருத்தியும்'' முருகப் பெருமான் தங்கியிருக்கும் இடங்கள் எனத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

## பெயர்கள்

இப்பழனி மலைத் தொடரில் வாழும் பழியர் இன மக்களின் பெயர்கள் சங்க காலத் தூய தமிழ்ப் பெயர்களாக விளங்குவதைப் பார்க்கும்போது, இம்மக்களின் தொன்மையை யும், கலாச்சார அறிவையும், பெயர்கள் அமைந்த தொடர்பையும் உணரமுடிகிறது; மகிழ்ச்சி ஏற்படுகிறது.

அதே வேளையில், இப்போது இம்மக்கள் வசிக்கும் இருப் பிடத்தைத் தேடிப் பார்க்கப் போகும் 'அதிசயப் பொருளாக' மாறி இருப்பதை நினைக்கும் போது, இவர்களின் சுதந்தர வாழ்க்கை யும், கலாச்சாரமும் இம்மலை மண்ணில் மடிந்து போனதை எண்ணி மனத்துயர் மேலிடுகிறது.

பழியர்களுள் ஆண்பாற் பெயர்களில் சில குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை.

அவை: செங்கண்ணான், குறிஞ்சான், நாகன், மலையாளம் முதலியன.

## 1. செங்கண்ணன்

1. செங்கண்ணான் என்பது திருமாலைக் குறிக்கும்.

2. ''செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ'' என் னும் ஆழ்வார் பாசுரப்பகுதியால், செங்கண் என்பது கண்ணனின் அழகிய கண்களைக் குறிக்கும்.

3. ''தாமரைக் கண்ணான் உலகு'' என்னும் குறட்பாப் பகுதியால், செந்தாமரைக் கண்ணனைக் குறிக்கும்.

*4. ''செங்கண்மால் சிலை பிடித்து'' என அப்பர் தம் திருத் தாண்டகத்தில் பாடுகின்றார்.*

எனவே, செங்கண்ணான் என்பது திருமாலைக் குறிக் கிறது.

''சேரி'' என்பது குறிப்பிட்ட ஒரு குழுவினர் கூடி வசிக்கும் இடம். ''கூடுவான் சேரி'' குறிப்பிட்ட குழுவினர் கூடும் சேரி.

ஒழுகுநெய் சேரி, வடசேரி நினைவு வரும். 'வந்து போய்த்' தங்கும் இடமாக •ும் இருக்கலாம்.

வாணிகச் சாத்து வந்து போய்த் தங்கும் இடம் சாத்துவச் சேரி. இது, வேலூர் - சத்துவாச்சாரி ஆகிவிட்டது.

விருதுநகர் அருகில், அரசன் கோக்கிழான் அடிகள் பெயரால் அமைந்த சேரி ''கோக்கிழான் சேரி'' தற்போது கொக்கலாஞ்சேரி ஆகிவிட்டது.

இவை போன்று, கேரளத்தில் தற்போது பெயர் கொண்டு விளங்கும் செங்கனாச்சேரி அல்லது சங்கனாச்சேரி என்பது, ''செங்கண்ணான்சேரி'' என்னும் தூய தமிழ்ப் பெயரின் சிதை வாகும்.

படை நடத்திச் சென்று சேரநாட்டு அப்பகுதியை வென்று தன் பெயரை அப்பகுதிக்கு இட்டுக் கொண்டான் 'கோச்செங்கட் சோழன்'. எனவே, செங்கண்ணான் சேரி ஆயிற்று போலும் என் கிறார் பேராசிரியர் ஔவை துரைசாமிப்பிள்ளை. ஆயினும் 'ஆயிற்று போலும்' என்னும் ஐயத்துடனேதான் குறிப்பிடுகின்றார். (சேரர் வரலாறு - ஔவை சு. துரைசாமிப்பிள்ளை - ப. 312)

சேரநாட்டுத் தாக்கம் பெற்ற பழனிமலைப் பழங்குடி யினர், சேரநாட்டுப் பகுதியை வெற்றி கொண்ட சோழன் பெயரான செங்கண்ணான் என்பதை இட்டுக் கொண்டனர் எனக் கூற நேரிடும்.

அவ்வாறன்றி, சேர நாட்டில் வழிபடு கடவுளாகக் கொண்ட கண்ணனின் பெயரான செங்கண்ணான் பெயர்கொண்ட செங்கண்ணான் சேரி எனக் கொள்ளின் ஏற்ப அமையும்.

இவை போன்றவை ஆங்கிலத்தில் எழுதப் பெற்று, பின்னர்ப் பொருள் பிரியாமல் தமிழ்ப்படுத்தியதன் விளைவு.

முசிறி துறைமுகத்தில் வந்திறங்கிய வாணிகக் கூட்டத் தாருக்குத் தனியாக ஒதுக்கித் தரப்பட்ட இடம் ''செங்கண்ணான் சேரி'' ஆகும்.

அவ்விடத்தின் தனித்தன்மை கருதி, செங்கண்ணான்-கண்ணன் - பெயரால் இச்சேரி அமைக்கப்பட்டது. காலப் போக்கில் பெயர் சிதைவுற்றது.

ஆயினும் 'செங்கண்ணான்' என்னும் பழந்தமிழ்ப் பெயர், இப்பழியர் பழங்குடியினரிடையே வழக்கில் உள்ளமை, இவர்கள் மரபின் ஆணிவேர் 'ங்க காலத்தைத் தொட்டு நிற்பதை உணர முடிகிறது.

இவ்விடத்து ஒப்பீடாக, கொற்கைத் துறைமுகத்தில் வந்திறங்கிய உரோமானிய வாணிகக் கூட்டத்தார் 'சோனகர்' எனப்பட்டனர். இவர்கள் வந்து தங்குவதற்குத் தனியாக ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட இடம் ''சோனகன் விளை'' என்பதாகும். திருச்செந்தூர் அருகில் உள்ளது.

மலைவாழ் வேடர் மலைபடு பொருள்களைச் சமவெளிக்குக் கொண்டு வந்து, ஓரிடத்தில் சந்தை கூட்டி விற்பனை செய்வர். அவ்விடம், திண்டுக்கல் அருகில் வேடர் சந்தையூர். பின்னர், வேடசந்தூர் எனத் திரிந்தது.

## 2. குறிஞ்சான்

குறிஞ்சியான் என்னும் குறிஞ்சி நிலத்து உரிமைப் பெயரின் சிதைவாகும். குறிஞ்சிக் கடவுள் செவ்வேள். குறிஞ்சி நிலத்துடன் பொருந்த அமைந்த பண் குறிஞ்சிப்பண். குறிஞ்சிப் பண்

ணொடு பொருந்த, இயைந்த அமையும் பண்கள் மேகராகக் குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, நட்டபாடை என்பன. நட்ட பாடைப் பண்ணின் நிற உரிமை செம்மை.

இவையெல்லாம் குறிஞ்சி நில வகுப்பின் தொன்மையை யும், சேர மன்னரின் தொன்மையையும் விளக்கி நிற்பன.

### 3., நாகன்

பழியர்களுள் நாகன் என்னும் பெயர் இடம் பெறுகிறது.

சேரநாட்டிலும் நாகவழிபாடு உண்டு. அங்கே, 'பாம்புக் காவு' என்னும் வழிபாட்டு இடம் மிகுதியும் உண்டு.

பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனைப் பாடியவர் 'முரஞ்சி யூர் முடி நாகனார்' என்னும் புலவர்.

இவர் முதற் சங்கப் புலவர் என்னும் கருத்தும் உண்டு. இவனை இவர் பாடிய பாடலே புறநானூற்றில் முதல் பாடலாகத் தொகுக்கப் பெற்றுள்ளது.

சேர சோழ பாண்டிய மண்டலங்களைச் சேர்ந்தவர்களை நாக இனத்தவர் எனக்கூறும் செய்தி உண்டு.

நாகர்கோயில், நாகப்பட்டினம் வேறுபாடு உண்டல்லவா!

இந்தியாவின் வடகிழக்கில் நாகலாந்து. நேர் தென்மேற் கில் நாக வழிபாடு.

நேபாளத் தலைநகர் காட்மாண்டுவிலிருந்து 30 கிமீ தொலைவில் நாகர்கோடு என்னும் ஊர் உள்ளது.

இந்தியாவின் மையப்பகுதியில் நாகபுரி. தென்கோடியில் நாகர்கோயில், இவ்வூரின் பெயர் நாகர் கோடு என்று இருந்து பின்னர் மாறி இருத்தல் வேண்டும். ஏனெனில் சுற்றிலும், கோடு என முடியும் ஊர்கள் மிகுதியும் உள்ளன.

இலங்கையின் தென்கோடியில் நாகர்கோயில் உண்டு. இதன் அருகில் அம்பலங்கொடா (அம்பலம் கோடு- கோட்டம் பலம்) உள்ளதால், இதுவும் நாகர் கோடு என இருந்து மாறி இருத்தல் வேண்டும்.

பழனி மலைத் தொடர் வாழ் பழங்குடி மக்களிடையே நாகன், நாகம்மா என்னும் பெயரிடும் வழக்கத்துக்கும், சேர நாட்டு நாகவழிபாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளமை தெரிகிறது.

## 4. மலையாளம்

'மலையாளம்' என்னும் பெயர் கொண்டு, ஆண்கள் கீழ்ப் பழனி மலையில் பழியரிடையே வாழ்கின்றனர்.

நாட்டைக் குறிக்கும் போது' மலையாளம்' எனவும், மக்களைக் குறிக்கும் போது 'மலையாளி' எனவும் ஆகிறது.

பழியர்களுள் பெண்பாற் பெயர்களுள் சில தூய தமிழ்ப் பெயர்களாகத் துலங்குகின்றன.

சில: பூங்கூ, கூந்தல், செங்கண்ணி என்பன.

## 4.1. பூங்கூ

பூங்குயில் என்பது 'பூங்கூ' என மருவி வழங்கலாம். 'பூங் குயில் போல் ஏனல் புனம் காத்து' என்னும் அடியில், பூங்குயில் போல் என்னும் உவமையை வள்ளியம்மைக்குக் கூறுகிறார் குமர குருபர சுவாமிகள்.

தினைப்புனத்தில் காவல் இருக்கின்றவளைக் கூவி விளிக்குங்கால், இறுதி கெட்டு, அளவு நீண்டு 'பூங்கூ' என்றாயிற்று.

சேய்மை விளி, கூவி விற்றல், பாடுதல், அழுகை முதலிய வற்றில் அளவு நீண்டு ஒலிப்பது அறிந்ததே.

## 4.2. கூந்தல்

காலமாற்றத்தால் தமிழ்ப் பெயர் மொழிமாறி 'வேணி' ஆயிற்று.

## 4.3. செங்கண்ணி

செங்கண்ணி என்பது செங்கண்ணான் என்பதன் பெண் பாற் பெயர்.

இனி, பழியர்கள் வழிபடுகின்ற தெய்வங்களைப் பற்றிக் காண்போம்.

பழியர்கள், தாங்கள் வழிபடுகின்ற தெய்வங்களுள் சில தெய்வங்களை 'ஊட்டும் தேவாதிகள்', 'ஊட்டாத தேவாதிகள்' எனச் சொல்லுகின்றனர்.

ஊட்டும் என்பது, உணவு ஊட்டும் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது.

மலை செழிக்க, மழைபொழிந்து செந்நெல், வெண்ணெல், வெதிரி நெல், தினை, ஓரித்தேன் முதலிய உணவுப் பொருள்களைச் செழிக்க வழங்கும்போது, இச் செழிப்புக்குக் காரணமான தெய்வங்களை ''ஊட்டும் தேவாதிகள்'' எனக் கூறினர்.

மழை வளம் கரந்து, வறட்சி வாட்டுங்கால் 'ஊட்டாத தேவாதிகள்' எனக் கூறுவர்.

குழந்தைகளுக்குச் சோறு ஊட்டுவதை, வட மொழித் தாக்கம் மிகுதியும் உள்ள கேரளத்தில், சோறு ஊட்டுதல் என்றே தூய தமிழில் சொல்கின்றனர்.

உணவுக் கூடத்தை ஊட்டுப் புரை என்கின்றனர். இக்கூடத்தில் உணவு பரிமாறுவர்.

கேரளத்து 'ஊட்டு' என்னும் தமிழ்ச் சொல் வழக்கு, இம்மலைவாழ் பழங்குடியினரிடையேயும் வழக்கில் உள்ளது.

மலைவாழ் பழங்குடி இனத்தவர் அனைவருமே மழை வளம் வேண்டி, படையலிட்டுத் தங்களின் வழிபாடு தெய்வத்தை மழைபெய்விக்குமாறு வணங்கிக்கூவி அழைப்பர். இது அவர் களின் திணை சார்ந்த நாகரிக வெளிப்பாடு.

சமவெளியிலும் இவ்வழிபாடு உண்டு.

மலை நாட்டோடு தொடர்புடைய சேரநாட்டு இளங்கோ வடிகள் இயற்கை வழிபாட்டைக் கருத்திற் கொண்டு, திணை சார்ந்தது, தலைப்பெயல் தலைஇய தண்ணருங்கானத்தைக் கருதி, 'மாமழை போற்றுதும்' என வாழ்த்தாகச் சொல்லி மழையைப் போற்றும் நுட்பம் இங்கு நினைக்கத்தக்கது.

''உண்ணுவான் தம்பிரான்'' என்னும் தெய்வத்தையும் மலைப் பழியர்கள் வணங்குகின்றனர். 'உண்ணுவான்' என்பது, திருமால் வழிபாட்டையொட்டிய 'வெண்ணெய் உண்ணும்' கண்ணன்.

இவ்வாறு சொல்லுவதற்கும் காரணம் உண்டு.

குஜராத்திலிருந்து - துவாரகையிலிருந்து - புலம் பெயர்ந்து தென்றிசை நோக்கி வந்த வேளிர்கள், வரும் வழியில், ஆங்காங்கே சில தலைமுறைக் காலம் தங்கி வாழ்ந்து, அப்படியே சேர நாட்டுக் குள் வந்தனர்.

இன்றைய திருவனந்தபுரப் பகுதியில் வந்து அவர்கள் தங்கினர். துவாரகையில் தாங்கள் வழிபட்டு வந்த கண்ணன் சிலையையும் கையோடு எடுத்து வந்தனர்.

அச்சிலையைத் திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி திருக் கோயிலின் மூலக்கோயிலான 'அம்பாடி'யில் நிறுவினர்.

அச்சிலை இடக்கையைத் தொடையில் வைத்து வலக் கையில் சாட்டை, இடுப்பில் வேய்ங்குழல் செருகிய ஆயர்குலக் கண்ணன் சிலையாகும்.

கேரளத்தில் திருமால் வழிபாட்டோடு, கண்ணபிரான் வழிபாடும் இருந்து வருகிறது. எனவே, 'வெண்ணெய் உண்ணும் கண்ணனாக, 'உண்ணுவான் தம்பிரான்' இருக்கக்கூடும் எனக் கருத முடிகிறது.

குரு + ஆய் + ஊர் (குரு - வாயு - ஊர் - என்பது புராண மரபு) குருவாயூரப்பனுக்குத் துலா நிறைப் படையலாக வெண்ணெய் வழங்கும் மரபு இங்கு நோக்கத்தக்கது.

பழியர் மக்களின் பெண் தெய்வங்களுள் ஒன்று ''குண் டாத்துக் கன்னி'' என்பது.

இத்தெய்வம், மதுரையை எரியூட்டி, வையையின் ஒரு கரை வழியே வந்து, திருச்செங்குன்றம் ஏறி விண்ணாடு அடைந்த ''குன்றத்துக் கன்னி'' கண்ணகியைக் குறிக்கிறது.

சிலப்பதிகார நிகழ்வுச் செய்தியைச் செவிவழியாக இம் மலைப் பழங்குடியினர் அறிந்து வைத்துள்ளனர்.

''குன்றத்து'' என்பது, மலை மக்களின் பேச்சு வழக்கில், ''குண்டாத்து'' என மருவியது.

## பழனி மலைத் தொடர் பாச்சலூர் - கேரளப் பாச்சலூர்ப் பதிகம்

கீழ்ப்பழனி மலைத்தொடரில், வட பகுதியில் அமைந் துள்ள பாச்சலூர் சிற்றூர்.

மலையின் வட பக்கம் ஒட்டன் சத்திரம் ஊரிலிருந்து மலை யேறி வரலாம்.

பால் ⟶ செல் ⟶ ஊர் ⟶ பாச்சலூர் ஆனதாக அவ்வூர் மக்கள் சொல்லுகிறார்கள். ஏதோ ஒன்றின் அடிப்படையில் இப்படிச் சொல்லுகிறார்கள்.

ஆயினும், அம்மலைக் கிராமத்தின் அருகில், பன்றி மலை என்னும் சிற்றூர் அமைந்திள்ளது.

தாயை இழந்து பசியால் துன்புற்ற பன்றிக் குட்டிகளுக்குச் சிவபெருமான் தாய்ப் பன்றியாக வந்து, பால் புகட்டிக் காப்பாற்றிய திருவிளையாடற் புராணக் கதை நமது நினைவுக்கு வரும்.

இதற்குப் பொருத்தமாகப் பன்றி மலை, பாச்சலூர் இரு மலைச் சிற்றூர்களுக்கு இடையே ''ஆடலூர்'' என்னும் ஊரும் உள்ளது. இது சிவபெருமான் செய்தருளிய திருவிளையாடலை நினைவுபடுத்துவது போல் உள்ளது.

சிவபெருமான் வேட்டுவ வடிவில் வந்து, காட்சியருளி, அருச்சுனனுக்குப் பாசுபத அஸ்திரம் வழங்கிய இடம் இப்பன்றி மலை எனவும் அவ்வூரில் வாழும் முதியவர் சிலர் சொல்லுகின்றனர்.

இதற்குச் சான்றாகப் பிற்காலப் பாண்டிய மன்னன் கட்டிய 'தரிசனலிங்கேசுவரர்' கோயிலும் பாச்சலூரில் உள்ளது. அருச்சுனனுக்குச் சிவபெருமான் தரிசனம் கொடுத்ததை இக்கோயில் நினைவூட்டுகிறது. கற்கோயில்தான். கல்வெட்டுகள் உள்ளன.

இவ்விடத்தில், பாரவி என்னும் வடமொழிவாணவர் எழுதிய ''கிராதார்ஜீனியம்'' என்னும் வடமொழி நூலின் கருத்து ஒப்பு நோக்கத்தக்கது.

அருச்சுனன் 'இந்திர கீல மலையில்' சிவ பெருமானிடமிருந்து, 'பாசுபத அஸ்திரம்' பெறத்தவம் இயற்றினான். அப்போது மூகாசுரன் என்னும் அசுரன் பன்றி வடிவம் கொண்டு, அருச்சுனன் இயற்றும் தவத்துக்கு இடையூறு செய்தான். அருச்சுனன் பன்றியைக் கொன்றான்.

பன்றிக்காகச் சிவனுக்கும், அருச்சுனனுக்கும் மற்போர் நடந்தது. மற்போரில் அருச்சுனன் சிவன் மார்பில் மோதுவது.

'ஸ்ஹ்ய பர்வதத்தின்' (மேற்கு மலைத் தொடரில்) அகன்ற பாறைமீது மோதும் கடலின் பேரலைகள் போல இருந்தது என்கிறார் பாரவி.

"புரைகெழு சையம் பொழி மழை தாழ"

எனப் பரிபாடல், ஸஹ்யபர்வதத்தை சையம் எனத் தமிழ்மரபுக் கேற்பச் சொல்லுகிறது.

பொதிகை மலைத் தொடரில் தெற்கே வர, சயிலம் (சிவ சயிலம்) என்றாகிறது.

எனவே, பாரவி தென் இந்தியராகவும், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிக்காரராகவும் இருக்கலாம்.

பாரவி குறிப்பிடும் கிராதார் ஜீனியம் சொல்லும் செய்தியை இவ்விடத்துக் குறிப்பிடக் காரணம் என்ன?

பாரவி குறிப்பிடும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி யான கீழ்ப்பழனி மலையில்தான் பன்றிமலை அமைந்துள்ளது. சிவனுக்கும் அருச்சுனனுக்கும் மற்போர் பன்றி மலையில் தான் நடந்தது.

இம்மலையில்தான் சிவபெருமான் வேட்டுவ வடிவம் விடுத்து அருச்சுனனுக்குக் காட்சியருளி, பாசுபாதஸ்திரம் வழங் கினார்.

"கிராதார் ஜீனியம்" நூலின் காலம் கி.பி.500 முதல் கி.பி.550 வரை.

மேற்குக் கடல் அலைகள், மேற்குத் தொடர்ச்சி மலைப் பாறையின் மீது மோதுவது போன்று என்பதால், கடல் அலை மோதியது, கேரளத்தில் அமைந்துள்ள பாச்சலூரில் அப்பாச்சலூர்,

மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்புறமான கடலோரமலைப் பகுதியில்.

ஏனெனில், கீழ்ப்பழனி மலைப் பாச்சலூருக்கும் கடலுக் கும் தொடர்பே இல்லை.

திருவனந்தபுரம் பத்மனாப சுவாமி கோயிலின் கருவறை யான ஸ்ரீ கோயிலில், இரண்டு நிலைகளுக்கு இடையே, மரத்தால் செய்யப்பட்ட சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை, கிராதார் ஜீனியம் கதையை விளக்குவது குறிப்பிடத்தக்கது.

சிக்கிம் மாநிலத்தின் வடபகுதியில் ''இந்திரகீலம்'' என் னும் ஓர் இடம் உள்ளது.

நெல்லை மாவட்டம் திருப்புடை மருதூர், நாறும் பூ நாதர்கோயிலில், மரச்சிற்பத்தில், கிராதார் ஜீனியக் கதைகள் செதுக்கப்பட்டுள்ளன.

சிக்கிம் மலை -பன்றி மலை - புடை மருதூர் மலைத் தொடர்ச்சி அடிவாரம் - திருவனந்தபுரம் மலையடிவாரம் - எனவே, கிராதார் ஜீனியம் தொடர்கிறது போலும்.

காடு, மலை இவற்றைச் சார்ந்து, இவ் இயற்கைச் செல் வங்களைப் பேணும் தூய எண்ணத்தைத் தூண்டும் விதத்திலேயே புராணக் கதைகள் அவ்விடங்களில் அமைந்துள்ளன.

ஆந்திராவில், லேபாட்சியில் உள்ள வீர பத்திரர் கோயி லிலும் கிராதார் ஜீனியம் சிற்பங்கள் உள்ளன.

கிராத அர்ஜுனியம் - கிராதர் - வேடுவர். ''கிராத வேட மொடு கிஞ்சுக வாயவள்'' என்பார் மாணிக்கவாசக அருளாளர்.

''உத்தரம் உறுதிறன் மறவர்தம் வடிகொடு உருவுடைப் பத்தொடு பெயரிடை விசயனை அசைவுசெய் பரிசினால் அத்திரம் அருளும் நம் அடிகள்'' என்பார் திருஞான சம்பந்தர் சிருச்சேறைப் பதிகத்தில்.

கேரளப் பாச்சலூர்ப் பதிகத்தில் மக்கள் எற்றத் தாழ்வு கலகக் குரல்கள் கேட்டன.

பழனி மலைப் பாச்சலூரில் புராண மரபுடன் தொடர் புடைய வரலாறு ஒன்று தெரிகிறது.

பழனி மலைத் தொடரில், பாச்சலூரில் பாண்டிய மன்னன் ஒருவன் கோயில் கட்டியமை போன்று,

கேரளத்துப் பந்தளம் மலைப் பகுதியிலும் பாண்டிய மன்னன் கோயில் கட்டியுள்ளான்.

பந்தள மன்னன் இராஜசேகர பாண்டியன் அய்யப்பன் கோயிலைப் பந்தளத்தில் அமைத்தான். அக்கோயில் போதைப் புல்லால் வேயப்பட்டுள்ளது, அதுவே, அய்யப்பனுக்கு அமைந்த முதற் கோயில்.

பந்தளம் அய்யப்பன் கோயிலை, பாண்டிய மன்னன் அமைத்தான் என்பதற்குச் சான்றாக, பந்தள மன்னன் அரண் மனையில், பாண்டிய மன்னர் குல தெய்வமான மதுரை மீனாட்சி யம்மன் திருவுருவச்சிலை இன்றும் உள்ளது.

''பாண்டிய வம்சத்தைச் சார்ந்தவர்களான பந்தளம் அரச ரோடு அய்யப்பன் தொடர்பு படுத்தப்படுகிறார்.''[30]

இப்பன்றி மலை பன்னிமலை, பண்ணிம்லை என வரலாற்றுடன் தொடர்புபடுத்தப்படுகிறது.

பன்னுதல் - திரும்பத் திரும்பத் பேசுதல், பன்னுதல் - பன்னிமலை - மடிப்பு மலை எனப் புவி அமைப்பியல் நோக்கில் சொல்லப்பட்டிருக்கலாம்.

மூணாறு மலையில் 'பன்னியாறு' என்னும் பகுதி உள்ளது.

''தமிழகத்தில் கபிலகரவல், உத்தரநல்லூர் நங்கை பாட்டு போன்றவற்றில் கேட்ட கலகக் குரல்களை இரவல் வாங்கிக்

கேரளமும் எதிரொலித்தது... என்பதை உத்தரநல்லூர் நங்கை பாடல், கேரளத்தில் 'பாச்சலூர்ப் பதிகம்' என்னும் பெயரில் வழங்கி வருவதிலிருந்து ஊகிக்கலாம்''.[31]

பழனி மலைத் தொடர் பாச்சலூர் போன்றே கேரளத்திலும் பாச்சலூர்ப் பெயரில் பதிகம் உள்ளது.

பழனி மலைத் தொடர் பாச்சலூரில் ஒரு காலத்தில் ஆதி வாசிகள் வாழ்ந்தனர். இப்போது யாரும் இல்லை. அவர்கள் இருக் கிற காலம் வரையிலும் பிறருடன் தொடர்பு கொள்ளாமல் வாழ்ந்த வர்களே. ஆனால், தங்கள் இனத்தாழ்வின் உயர்வுக்காகக் கலகம் செய்ததாகத் தகவல் இல்லை.

## பழந்தமிழ்ச் சொல் வழக்கும் தம்பிரான் சொல் வழக்கும்

பழனி மலைத் தொடர்வாழ் பழங்குடி மக்கள் வாயினின் றும் தூய பழந்தமிழ்ச் சொற்கள் சில இயல்பாக வருகின்றன.

வடமொழிக் கலப்பு வந்துவிட்ட போதும் சங்க காலத்துக் கும் முன்னால் வழக்கில் இருந்த சொற்களை வழிவழியாகக் கேரள மக்கள் இப்போது பேசி வருவதைப் போன்றே, இம்மலை மக்க ளிடையையும் சில அருந்தமிழ்ச் சொற்கள் வழக்கில் உள்ளன.

இதனால் பண்டைக் குமரிக் கண்ட மக்களின் கால் வழி யினர் என இம்மலை மக்களைக் கூறமுடிகிறது.

மேலும், இக்குடியினரின் காலப் பழைமைக்கும் , தமிழ் மொழியின் காலப் பழைமைக்கும் உள்ள தொடர்பை உணர முடிகிறது.

இப்பழங்குடியினர் மேற்குத் திசையைக் 'குடக்கு' என் கின்றனர். பண்டு, அற்றம், ஞாயிறு, உணக்கல், புழுக்கு, வண்ணெ: மலர், ஓரித்தேன் - இவ்வாறு பல பழந்தமிழ்ச் சொற்கள் வழக்கில் பயன்படுத்துகின்றனர்.

கானல், கானல்காடு, செங்கரைக்கானல், பண்ணைக் காடு, பெரும்பாறை, ஊற்றாம்பாறை, பெரும்பள்ளம், மூங்கில் பள்ளம்

முதலான இலக்கிய வளம் பொதிந்த பழஞ்சொற்கள் இம்மலை மண்ணில் கேட்டு இன்புறுவாரின்றிக் கிடக்கின்றன.

## தம்பிரான்

''தம்பிரான்'' என்னும் சொல் வழங்கப்படுவதை அறிவோம். மலையாள வழக்கில் அரசனைத் 'தம்பிரான்' எனவும் அரசியலைத் 'தம்பிராட்டி' எனவும் வழங்குகின்றனர்.

பேச்சு வழக்கில் தம்புரான், தம்புராட்டி என்கின்றனர்.

பழனி மலைத் தொடர் பழங்குடி இனத்தவர் வழக்காற்றிலும் இவ்வாறு கூறும்மரபு உள்ளது.

அரசரைக் குறிப்பதற்கும், குறுநில மன்னரைக் குறிப்பதற்கும் 'தம்பிரான்' சொல்லைப் பயன்படுத்தினர்.

'மன்னான்' என்னும் பழங்குடி இனத்தலைவர் 'பூனையாத்துத் தம்பிரான்' எனக் கூறப்படுகின்றார்.

வான்யாறு ——→ வானியாறு. வான்யாற்றுக்கும் சேர மன்னர்க்கும் அவர்தம் கிளைஞர்க்கும் தொடர்பு உண்டு.

'பூவானியாற்றுத் தம்பிரான்' என்பது பேச்சு வழக்கில், பொருள் புரியாமல், 'பூனையாத்துத் தம்பிரான்' என மருவியுள்ளது.

அரசனுக்கும், குறுநில மன்னனுக்கும் 'தம்பிரான்' என்னும் சிறப்புப் பெயர் வந்தது சரி. இனக்குழுத் தலைவர் 'மன்னானுக்குச் சிறப்புப் பேயராக வந்தது எப்படி?

''செங்கேணி சாத்தன் நாலாயிரவன், கரிகாலச் சோழச் செங்கேணி நாடாழ்வான்'' என்னும்பெயர் கி.பி.1069 ஆம் ஆண்டு வடார்க்காடுமாவட்டக் குறுநில மன்னன் கல்வெட்டு ஒன்றில் வந்துள்ளது.

தன் மரபின் முன்னோன் கரிகாற்சோழன் பெயரைச் செங்கேணி நாடாழ்வான்தன் பெயருடன் இணைத்துச் சொல்லு வதைப் போன்று,

சேர மன்னரின் பெருமையும், தொடர்பும் கருதி அம்மனுக் குரிய தம்பிரான் சிறப்புப் பெயரை மன்னான் இனக் குழுத் தலைவர் இணைத்துக் கொண்டார்,

மேல் பழனி மலையில், வடமேல் சரிவில், 'கூக்கல்' என்னும் சிற்றூர் அமைந்துள்ளது.

இவ்வூரின் கே.சேதுநாத மன்னாடி என்பவர் குடும்பத் தாரிடம் செப்புப் பட்டயம் ஒன்று உள்ளது.

அச் செப்புப் பட்டயத்தில், ''...ஸ்ரீமது சாலிவாகன... விசால லக்ஷணம் பொருந்தியிருக்கிற வாக்குடைய மஹாராஜா வான 'தம்பிருன்'...பாண்டிய ராஜா தென் பழனியைவிட்டு எழுந் தருளியாகி, 'தம்பிருன்' சமூகத்திற்கு... செல்வனாசாரி ஒரு வன் கூடவே, சிற்பி சாஸ்திரம்... வருவான். அவனுக்குத் 'தம்பி ரான்' கட்டளை இட்டது... நாக நாயக்கத் 'தம்பிரான்' .... 'தம்பிருன்' முன் நாங்கள் எதையும் வெட்டுவதாக ராஜா ரத்துச் செய்தார்.... இவ்வூரில் மீனாம்பிகை அருளினாலும், 'தம்பிருன்' வாக்கி னாலும்....''

இச்செப்புப் பட்டயத்தில், 'தம்பிரான்' என்னும் சொல் குறிப்பிடப்படும் இடங்கள் மட்டுமே எடுத்துக் காட்டப்பட் டுள்ளன.

'தம்பிரான்', 'தம்பிருன்' என இரு வடிவிலும் குறிக்கப் பட்டுள்ளது.

மலையாள வழக்கில் அரசனைத் 'தம்பிரான்' எனவும், அரசியைத் 'தம்பிராட்டி' எனவும் வழங்கப்படுவது இப்பழனி மலைத் தொடர் பழங்குடி இனத்தவரிடையேயும் வழக்கில் உள்ளதைப் பார்க்கும்போது,

சேர நாட்டுக்கும், இப்பழனி மலை வாழ் பழங்குடி இனத்தவருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு அமைந்திருந்தமை தெரிய வருகிறது.

இம்மலை மக்கள் அரசரைக் குறிப்பதற்கும், குறுநில மன்னரைக் குறிப்பதற்கும் 'தம்பிரான்' என்னும் சொல்லைப் பயன்படுத்தினார்.

சேர மன்னர்களைத் குறிப்பதற்குப் பயன்படுத்திய 'தம்பிரான்' என்னும் சொல்லை, இங்கே,, செப்புப் பட்டயத்தில் பாண்டிய மன்னருக்கும், நாயக்க மன்னருக்கும் பயன்படுத்தியுள்ளனர்.

1. 'உண்ணுவான் தம்பிரான்' என இமமலை மக்கள் கூறுவதை முன்னர்ப் பார்த்தோம்.

2. 'சேரர் பிரானும் ஆரூரர் தம்மைப் பிரியாச் சிறப்பானும் வாரம் பெருக'[32]

சேரர் - அரசர் - சேரமான் பெருமாள் நாயனார். இங்கே, 'பிரான்' என நின்று அரசர்க்கு ஆகி வந்தது.

3. கேரளத்தில் திரிசிவப் பேரூரில், ''இராமவர்மா சாக்தன் தம்புரான்'' அரண்மனை உள்ளது. தம்பிரான் என்பது, இங்கே சிற்றரசரைக் குறிப்பதற்கு வந்துள்ளது.

4. சேரநாட்டுக்குத் திரு அஞ்சைக் களத்துக்கு வந்த சுந்தர மூர்த்தி சுவாமிகளும், 'தம்பிரான் தோழர்' எனக் கேரள வாசனை வீசிடப் பெற்றார். இங்கே, 'அடியவரை'க் குறிப்பதற்கு வந்துள்ளது.

5. நெல்லை மாவட்டம், மேற்கே கேரள எல்லையில், 'தம்' நீங்கி, 'பிரான்' மட்டும் நின்று, ஊர் முன் ஒட்டாகச் சேர்ந்து, 'பிரானூர்' ஆயிற்று.

6. கிழக்கே, சேரன் மாதேவி அருகில், 'பிரான்' என்பதுடன் 'சேரி' சேர்ந்து, 'பிரான் சேரி' ஆயிற்று.

7. புதுக்கோட்டை மாவட்டத்தில், 'பிரான்' சொல்லுடன் 'மலை' சேர்ந்து, 'பிரான் மலை' ஆயிற்று.

வேள் பாரியின் பறம்பு மலையே 'பிரான் மலை' என்பர். பிரான், பாரிவள்ளலுக்கு- குறுநில மன்னனுக்கு ஆகிவந்தது.

கேரளப் பறம்புக் குளம், தமிழகப் பறம்பு மலை - பறம்பு சொல் ஒப்பு- நோக்கத்தக்கது.

8. 'தேவர் பிரான்' (பெரிய புராணம், பா. 3851) வீரபத்திரக் கடவுளுக்கு ஆகி, பிரான் வந்தது.

9. திருச்செங்கோடு மலையடிவாரத்தில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் திருப்பெயர் கயிலாயநாதர். அப்பெரு மானை 'நிலத்தம்பிரான்' என்பர்.

10. திருச்செங்கோடு 'மலைமேவு பெருமான் பாகம் பெண்ணுருவானவன். (அர்த்தநாரீசுவரர்). இவரை 'மலைத் தம்பி ரான்' எனப் போற்றுவர். இங்கெல்லாம் தம்பிரான் 'சிவன்' ஆனார்.

11. கோடைக்கானல் மேல் மலைத் தொடரில் அமைந் துள்ள பூம்பொறை (பூம்பாறை) கிராமக் கோயிலில் வீற்றிருக்கும் முருகவேளை, ''மயிலேறும் தம்பிரானே'' என அருணகிரியார் பாடிப் பரவுகின்றார். இங்கே, முருகன் தம்பிரான் ஆனார்.

12. சுந்தரர் செந்தமிழில், ''ஆரூரன்தம்பிரான், ''ஆரூரன் மீ கொங்கில்'' என வரும். இங்கே பிரான் சிவனடியாரைக் குறிப்ப தற்கு வந்துள்ளது.

13. ''பட்டர் பிரான் கோதை சொன்ன'' – ஆண்டாள். இங்கே பிரான் என்பது வைணவ அடியாரைக் குறிக்கிறது.

14. பிரானுக்குப் பெண்பாலாய்ப் பிராட்டி வந்து, மதுரை மேற்கு எல்லையில் "பிராட்டி பற்று" (விராட்டி பத்து) ஊரும்,

15. திருச்சிராப்பள்ளி நகர் மேற்கு விறலிமலைச் (விராலி மலை) சாரலில் "பிராட்டி ஊர்" சிற்றூரும் (விராட்டியூர்) ஏற்பட்டுள்ளன. இன்றும் உண்டு.

16. "தம்பிரான் வணக்கம்" என்னும் முதல் அச்சு நூல்-இந்தியாவிலும் முதல் நூல்-கிறித்துவத் தமிழ் நூல்- கோவாவில் கி.பி. 1556 இல் அச்சிடப் பெற்றுள்ளது. தமிழ் மரபைப் பின்பற்றி ஏசுவைத் தம்பிரான் எனக் கூறி இருக்கிறார்கள்.

இச்சான்றுகளிலிருந்து, தம்பிரான் என்னும் சொல் இறைவன், வேந்தன். குறுநில மன்னன், அடியவர்கள் ஆகியோருக்கும் ஊர்ப் பெயர்களுக்கும் வழங்கி வந்தமை புலனாகின்றது.

எனவே, சேரநாட்டின் 'தம்பிரான் சொல் வழக்கு' பழனி மலைத் தொடர்வாழ் பழங்குடி மக்கள் வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

## முதுவர்

பழனி மலைத்தொடர் வாழ் பழங்குடியினருள் முதுவரும் ஓர் இனத்தார் ஆவர். இவர்கள் இம்மலையில் இரண்டாயிரம் மீட்டர் உயரமுடைய மலை முகடுகளில் வாழ்கின்றனர்.

சேரர் ஆட்சிக்குட்பட்ட கொங்கு மண்டலம், கொச்சி - திருவாங்கூர்ப் பகுதிகளிலிருந்து பழனிமலைத் தொடருக்குப் புலம் பெயர்ந்து வந்தவர்கள் இவர்கள்.

இவர்கள் மேற்குக் கடற்கரைப் பகுதியில் இருந்து இந்த மலைப் பகுதிக்குக் குடி பெயர்ந்து வந்திருக்கலாம் என மானிடவியலறிஞர்களும் கூறுகின்றனர்.

இவர்கள் இம்மலைப் பகுதியில் வளம் நிறைந்த பகுதியிலும், வளம் இல்லாத பகுதிகளிலும் வாழ்கின்றனர். அடர்ந்த காட்டுப் பகுதியில், உள்ளடங்கிய பகுதியில் வாழ்ந்தனர்.

பிழைப்பை நாடி புலம் பெயர்ந்து சென்றுவிட்டனர். சிலர் மலைத் தோட்டங்களில் கூலிகளாக அமர்த்தப்பட்டுவிட்டனர்.

ஒன்றிரண்டு குடும்பங்களே வசித்து வருகின்றனர். வளமான பகுதிகளில் வாழ்ந்தவர்கள் ஈத்தைப் புல், ஈத்தைத் தட்டை காட்டு இலை தழைகளால் கூரை வேய்ந்த குடிசைகளில் வசித்தனர்.

வளமற்ற பகுதியில் வாழ்ந்தவர்கள் போதைப் புல் வேய்ந்த குடிசைகளில் வசித்தனர்.

முதுவர்கள் சிறு சிறு குடியினராக வசித்தனர். அவர்கள் வசித்த அந்த இடத்தைக் 'குடி' என்று சொன்னார்கள்.

''சிறு குடியீரே! சிறுகுடியீரே!'' என்னும் சிலப்பதிகாரத் தொடர், ''குன்றச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து, தொண்டகச் சிறுபறை குரவை அயர'' என்னும் திருமுருகாற்றுப்படை அடிகள் ஆகியவை நமது நினைவுக்கு வருகின்றன.

இவையெல்லாம் மலையோடு தொடர்புடைய பெயர்கள்.

சங்க காலத்தில் கட்டமைக்கப்பட்ட குடியமைப்பு-சமூக அமைப்பு - இன்றும் இம்முதுவர் பழங்குடி இனத்தவரிடையே அடையாளமாக - எச்சமாகக் காணப்படுகிறது.

இவர்களின் பெரிய குடிக்கு ''வலிய கண்டம்'', செழிப்பான இடம், செழித்த கண்டம் எனப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

கேரளத்திலும் சிறிய நிலப்பரப்பு ஒன்றை 'வலிய கண்டம்' எனச் சொல்லும் வழக்கு உள்ளது.

'கண்டம்' என்னும் பெயரைக் கேட்டவுடன் குமரிக் கண்டம் நினைவுக்கு வருகிறது.

முதுவர் குடி ஒவ்வொன்றிலும் அவர்கள் வழிபாட்டு இடமான 'தாவளம் குடில்' இருக்கும்.

குறிஞ்சி நிலத்தவராகிய இம்மக்களுக்கு, குறிஞ்சிக் கடவுள் முருகப் பெருமானே வழிபடு முதன்மைக் கடவுள்.

இவர்கள் வழிபாட்டு இடங்களில் பூசாரி கிடையாது. இயற்கை வழிபாட்டையொட்டியே இவர்கள் வழிபடுகின்றனர்.

முழுநிலா நாளில், வட்டமாகக் கூடிநின்று ஆடிப் பாடு வார்கள். இவர்களுடைய சிறு தெய்வம் கரகநாச்சி என்பது. இத் தெய்வத்துக்கு உருவம் இல்லை. இத்தெய்வத்தைப் 'பூவாடை' எனவும் கூறுகின்றனர். இதுவே, 'பாவாடை' என மருவி, சிலர் பெயராகச் சில ஊர்களில் இட்டுக் கொள்கின்றனர்.

முதுவர் குடிகளில் குமரிமடம், இளந்தாரிமடம் என இரண்டு தனித்தனியான குடில்கள் உள்ளன. இவை தாவளம் குடிசைகள் போன்று அமைந்துள்ளன.

குறிஞ்சித் திணையின் இயற்கை இயல்பைக் கெடுக்காமல் இயற்கையோடு இயைந்த வாழ்வை இம்மலை மக்கள் மேற் கொண்டனர்.

பன்னிரண்டு வயது நிரம்பிய ஆண்கள் இளந்தாரி மடத் திலும், பன்னிரண்டு வயது நிரம்பிய பெண்கள் குமரி மடத்திலும் தனித்தனியே தங்க வைக்கப்படுவார்கள்.

இந்த மடம் என்பது, தாவளம் குடில் போன்றதொரு குடிலாகும்.

வளர் இளம் பருவத்தை அவர்கள் அறிந்தே வைத்துள்ள னர். இவ்வாறு தங்க வைப்பதன் மூலம் தனி மனித ஒழுக்கம், மனக்கட்டுப்பாடு முதலியவற்றைச் சரியான முறையில் பேணினர். குழு ஒழுக்கமும் பேணப்பட்டது.

இவர்கள் 'குடி'த் திருமணத்தில் தாலி கட்டும் பழக்கம் இல்லை.

முதுவர் இனத்தாருள் மூத்தவர் ஒருவர் தலைவராக இருப் பார். இவரை 'மூப்பன்' எனச் சொல்லுகின்றனர். குடிக்கொருவ ராக பல மூப்பன்கள் உண்டு.

இது, கேரளத்தில் 'மூத்தச்சன்' எனச் சொல்லுவதோடு பொருந்தி வருகிறது.

மூப்பன் இடும் கட்டளைகளை இம்மக்கள் மதித்து நடப்பார்கள்.

அந்தக் கட்டளைகளை ஏற்று நடப்பதில் சிக்கள் ஏற்பட்டு வழக்கு ஏற்படுமானால், அவை தீர்க்க முடியாமல் போனால், இந்த மூப்பன்களுக்கெல்லாம் தலைவர் ஒருவர் இருப்பார். இவருக்கு ''மேல்வாக்கன்'' என்பது பெயர். இவர் நியாயத் தீர்ப்பு வழங்கு வார்.

இதனால், இவருக்கு, ''நியாய வாக்கன்'' என்ற பெயர் வழங்குவதும் உண்டு.

''தொல்பழங்காலத்தில் தமிழகத்தில், ஊர் மூதறிவாளர் தங்கள் சிற்றூர் மக்களை ஒருங்கு கூட்டி, தொன்மூதாலத்தின் அடியில் அமர்ந்து, ஊருக்குப் பொதுவான திட்டங்களைச் செயல் படுத்த ஆலோசிப்பதோடு, தீர்க்க முடியாத சிக்கலான வழக்கு களையும் முறையாக விசாரித்துத் தீர்ப்பு வழங்குவர்.''[33]

"The Cankam is really a poetic fraternity of free souls. This kind of development of the group thought is universal in the ancient Tamil country, where the shire sing grey heads assemble under the ancient banyan tree in every village to decide upon the common course of village action."

இச் செய்தியும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

பழந்தமிழ் வழக்கு இம்மலை மக்களிடத்தில் சமூக நீதியாகத் தொடர்ந்து வந்துள்ளது.

மேல் முறையீடு செய்வதற்கு, மேல்வாக்கனுக்கு மேல் அதிகாரம் உடையவர்கள் இல்லை.

## மருமக்கள் தாய முறை

கேரளத்தில் நடைமுறையில் இருந்ததைப் போல, இம் முதுவர்களிடத்திலும் **மருமக்கள் தாய முறை** இருந்து வந்தது தெரிகிறது.

ஒருவரின் சொத்து, அவரின் பெண் மக்களுக்கே உரிமை உடையது. இவர்களின் சொத்து என்பது **"போடுகாடு"** அல்லது **"செப்புக் காடு"** என்னும் செப்பம் செய்து திருத்திய காட்டை ஆகும்.

## தீய நிமித்தம்

சிலப்பதிகாரத்தில் தீய நிமித்தங்கள் பற்றிய குறிப்புக்கள் வருவதைப் போன்று,இம் முதுவர்களிடையேயும் தீய நிமித்தம் பற்றிய அச்ச உணர்வு உண்டு.

மலையாட்டு இனமாகிய கேழையாடு, மான் இனம், காட்டுப் பறவைகள் ஆகியவை வழக்கத்திற்கு மாறாக ஒலி எழுப்பினால், ஏதோ ஒரு தீங்கு நேரப் போகிறது என்பதை இவர்கள் அறிந்து கொள்கின்றனர். இவர்கள் புறப்படும் போதும், நடக்கும் போதும் இவை குறுக்கே போனால் தீய நிமித்தமாக நினைக்கின்றனர்.

ஏதோ ஒரு தீங்கு வரப்போவதை முன்னதாக உணர்ந்து அதற்கு ஏற்றவாறு எச்சரிக்கைக் குரல் விதம் விதமாக எழுப்புவதாகப் பறவைகளின் இயல்பறிந்த பறவை இயல் வல்லார் கூறுகின்றனர்.

## நீத்தார் கடன் கழித்தல்

மலைவாழ் பழங்குடியினருள் புலையர் இனத்தார் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். இது பண்டைத் தமிழர் மரபையொட்டியது. பதினாறாம் நாள் இறுதிச் சடங்கைச் செய்கின்றனர்.

தங்கள் குடும்பத்தவருள் ஒருவர் எங்காவது வெளி இடத்தில் இறந்துவிட்டால், இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர், இறந்தவரின் உறவினர், தங்கள் தாவளம் குடில்களில், இறந்தவரின் 'நிழலை' அழைத்து வழிபடுவர்.

அவர்கள் 'நிழல்' என்று குறிப்பிடுவது, இறந்தவரின் 'ஆன்மா' என்று புரிந்து கொள்ள முடிகிறது.

இவ்வாறு சொல்வதற்குச் சான்று வேண்டும் அல்லவா..

கம்ப ராமாயணம் ஆரணிய காண்டம் பகுதியில் நிழல் என்னும் சொல், அவ்விடத்தில் ஒளி என்னும் பொருளில் வருகிறது.

சைவ சித்தாந்த சாத்திரத்தில், சிறந்த ஆன்மாவுக்கு நிழல் கிடையாது என்னும் குறிப்பு வருகிறது.

நிழல் கிடையாது என்றால் அந்த ஆன்மா ஒளியாகிறது என்பது பொருள்.

எனவே, இவ்வினத்தார் கூறும் நிழல் என்பது, இறந்தவரின் தூய ஆன்மாவைக் குறிக்கும்.

இறந்தவரின் நினைவாகப் படையலிட்டு அவ் ஆன்மாவை அழைத்து ஏற்கும் வண்ணம் வேண்டி வழிபடுவர். அவர்கள் நிழல் என்று சொல்லுவது, ஒளியைக் குறித்து, பின்னர் 'ஆன்மா'வுக்கு ஆகிவந்தது.

ஆகவே, நிழலை அழைத்தல் என்பது, இறந்தவரின் ஆன்மாவை அழைத்தல் என்ற பொருளில் கூறினர்.

சாதாரணமாகச் சொன்னால் 'ஆவி' நம்பிக்கை அவர்களுக்கு இருப்பது தெரிகிறது.

ஆனால், இவற்றையெல்லாம் அப்பழங்குடியினர் தெரிந்து கொண்டுதான் சொல்லுகிறார்களா எனச் சொல்வதற்கில்லை. நாம் இப்படி நினைப்பதற்கு இடம் இருக்கிறது.

இதே போன்று, இறந்தவர்களின் நிழலை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை அழைத்து வழிபாடு செய்யும் வழக்கம் உதகையிலும் உண்டு.

உதகையில் 'கோக்கால்' என்னும் சிற்றூரில், கோத்தர் பழங்குடி இன மக்கள் வாழ்கிறார்கள். இவர்களிடையே இவ்வழிபாட்டு முறை இன்றும் உள்ளது.

உதகையில் கோக்கால் - ஊர். மேல் பழனிமலையில் கூக்கால் - ஊர். பெயர் வேறுபாடு உண்டா? சிந்திக்க வேண்டியது.

பண்டைத் தமிழர் சமூகத்தில், இறந்தவர் உடலைப் புதைக்கும் வழக்கம் உள்ளது.

**''மன்னர் மறைந்த தாழி**
**வன்னி மன்றத்து விளங்கிய காடே''** -பதிற்றுப்பத்து, 5:4.

மன்னர் மறைந்ததும் தாழியில் வைத்துப் புதைத்ததை இப்பகுதி கூறுகிறது.

இம்மலை மக்கள் பிணத்தைத் தெற்கு வடக்காக, முகம் வானத்தை நோக்கி இருக்கும் வண்ணம் புதை குழிக்குள் இடுவர்.

தெற்கே தலை இருக்குமாறு புதைப்பது தென்புலத்தாரை நினைவுபடுத்துகிறது. வடக்கு - வடக்கிருத்தல். உயிர் நற்கதி அடையும் என்னும் நம்பிக்கை.

எல்லா வைணவத் தலங்களிலும் கோயில் வடக்கு வாசலைத் திறந்து, ''சுவர்க்க வாசல்'' திறப்பு விழா நடத்துவார்கள்.

திருவனந்தபுரம் பத்மனாப சுவாமி கோயிலில் மட்டும் சுவர்க்க வாசல் திறப்பு விழாவை ''வடக்கு வாசல் திறப்பு'' என்று சொல்லுகின்றார்கள்.

''வடக்கு வடக்கென்ப வச்ச தொன்றில்லை'' என்னும் திருமந்திரத் தொடரும், வடக்கிருத்தல் -'உள் (அகம்) நோக்கி இருத்தல்' எனச் சொல்லும் மரபும் நினைக்கத்தக்கவை.

திருவண்ணாமலை அருகில் திருக்கோயிலூரில், புலவர் கபிலர் ஒரு பாறை மீது அமர்ந்து உண்ணாநோன்பு மேற்கொண்டு, வடக்கிருந்து உயிர் துறந்தார். அப்பாறை 'கபிலக்கல்' என இப் போதும் வழங்கப்படுகிறது.

'வடக்கிருத்தல்' என்னும் சங்க கால வழக்கினை இன் றைய கேரளத்தில் ''வடக்கு வாசல் திறப்பு' என மரபு வழியாக நினைக்கச் சொல்லுவது, சேர நாட்டின் தொன்மைக்கு மேலும் ஒரு சான்றாகிறது.

''கி.மு.2028 இல், எகிப்து நாட்டில் 'கூஃபு' என்பவர் கட்டிய பிரமிடு உள்ளது. அதில், இறந்தவர்களைப் புதைக்கும் போது, அவ்வுடலில் இதயத்தைத் தவிர, பிற உறுப்புக்களை எடுத்துப் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

இறந்தவர் உயிர், பிரமிடு மேற்கூரையில் (விதானம்) பக்க வாட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஒரு துவாரத்தின் வழியே வெளியேறிச் சென்று, விண்ணில் உள்ள விண்மீன் ஒன்றுடன் கலந்து விடும். பிறகு அந்த ஆன்மா மறு உலகம் சென்று விடும் என்பது அவர்கள் நம்பிக்கை.''[அ]

இறப்புக்குப் பின் ஆன்மாவைப் பற்றிய ஒவ்வொரு சமயத் திலும் ஒவ்வொரு விதமாகச் சொல்லப்பட்டாலும், அடிப்படை ஒன்றாகவே அமைந்துள்ளது.

முதுவர்களின் இவ்வாழ்வியல் முறைகள், அவர்களுள் எஞ்சியிருப்போர் கூறியதிலிருந்தும், அவர்கள் கூறியவற்றிலிருந்

தும் ஊகித்து அறிந்ததன் அடிப்படையிலும் இங்கே குறிக்கப் பெறு கின்றன.

## புல்லாற்றூர் - சங்க கால ஊர்ப் பெயர்

புல்லாற்றூர் ஒரு சிற்றூர். கீழ்ப்பழனி மலைத் தொடரில் அமைந்துள்ளது. இவ்வூரின் இன்றைய பெயர் பூலத்தூர்.

மொழி மரபு உணராதவர், வரலாற்று உணர்வு இல்லாதவர் வாயில் மரபு நெறி பிறழ்ந்து மருவி வழங்கும் பெயர்.

கோடைக்கானல் மலைக்குச் செல்லும் தென்புறச் சரிவுப் பாதையிலிருந்து பிரிந்து செல்லும், சிறிய வடக்குப்பாதையில் சென்றால் இச்சிற்றூரை அடையலாம். இப்போது பேருந்து சில சமயம் சென்று வருகிறது. பண்ணைக்காடு ஊருக்குக்கீழே அமைந் துள்ள உள்ளடங்கிய கிராமம்.

இதே போன்று, பழனி மலைத் தொடர் கிழக்குப் பகுதி 'சித்தரேவு' (சித்தையன் ரேவு - ரேவு -வழி. தெலுங்குச் சொல்) வழி யாகக் கீழ்ப்பழனி மலைக்கு வரும் தூண்டிக்குடி மலைச் சாலை யில் 'புல்லாம் வழி' என்னும் மலைக்கிராமம் உள்ளது.

மலையிலிருந்து வலப்புறச் சரிவில் ஒற்றையடிப் பாதை யில் இறங்கி நடந்து செல்லவேண்டும்.

கேரளத்தில் ஹரிப்பாடு அருகில் படி ஞாயிறு-'புல்லாம் வழி' என்னும் இடம் உள்ளது.

'புல்லாற்றூர்' என்னும்போதே, 'புல்லாற்றூர் எயிற்றிய னார்' என்னும் சங்க காலப் புலவர் நமது மனத்தகத்து வருகின்றார்.

இப்புலவர் பெருமகனார் இவ்வூரில்தான் பிறந்தார் எனச் சொல்வதற்கு, ஊர்ப்பெயர் சான்றாக அமைந்து துவங்குகின்றதே யன்றி, வேறு எவ்விதச் சான்றும் இதுவரை கிடைக்கவில்லை.

ஆயினும், சங்க காலப் பெயர் தாங்கிய ஊர் ஒன்று நமக்குத் தெரிய வந்துள்ளது.

புல் + ஆறு + ஊர் = புல்லாற்றூர். கல் + ஆறு = கல்லாறு போன்று.

புல் - மூங்கில் என்னும் பொருளும் உண்டு. ''புறக்காழ னவே புல் என மொழிப'' தாவரவியல் நுட்பத் தொல்காப்பிய நூற்பா.

உள்ளீடு இல்லாத, அளவில் பருமனான 'கழை' என்னும் மூங்கில். மெல்லிய 'ஈத்தை' என்னும் மூங்கிலும் உண்டு.

புல், தருப்பையையும், நாணல் வகைகளையும் குறிக்கும்.

தருப்பைப் புல்லின் வடமொழிப்பெயர்களுள் ஒன்று குசம். குசத்தைத் தழுவி வரும் ஆறு ''குசத்தலை'' ஆறு . இது திருத் தணி மலையில் தோன்றி வருகிறது.

வடக்கே, துவாரகைக்கும் 'குசஸ்தலை' என்னும் பெயர் உண்டு.

அதே போன்று, புல்லைத் தழுவி வருவதால் புல்லாறு; புல்லாறு பாயும் ஊர் புல்லாற்றூர்.

கேரளத்தில் கொல்லங்கோடு அருகில் 'புல்லூர்', நீலாம் பூர் அருகில் 'புல்லன்கோடு' என்னும் ஊர்கள் அமைந்துள்ளன.

திருவனந்தபுரத்தில் ''கழைக்குட்டம்' பகுதி அமைந்திருப் பதைப் போன்று, பழனிமலைத் தொடரில், அதே பொருளில் அமைந்துள்ள 'மூங்கில் பள்ளம்' என்னும் சிற்றூர், பழனியி லிருந்து கோடைக்கானல் செல்லும் மலைப் பாதையில், தென்புறச் சரிவில் அமைந்துள்ளது.

''கழை நிலை பெறாஅக் குட்டத் தாயினும்'' (பதிற்றுப் பத்து: 3:3) எனப் பாலைக் கௌதமனார் சொன்ன பெயர், கேரளத் தில், இப்போதும், எப்போதும் நிலைத்துள்ளது. சங்க காலத்திய தூய தமிழ்ப் பெயர்.

திருக்குற்றால மலைச்சாரலில் 'மூங்கில் ஓடை' ஓடுகிறது.

இவ்வாறு புல் - மூங்கில் - பற்றிச் சேரநாட்டுக்கும் இயை புண்டு.

## மன்னவனூர்

பழனி மலைத் தொடரில், பழங்குடியினரான குன்னுவர் வாழும் பழம்பதி மன்னவனூர். இம் மக்கள்வாய்மொழியில், 'சேர மன்னன்' ஒருவன் இங்கு வந்து சென்றதாகச் சொல்லுகின்றனர். செவி வழிச் செய்திதான்.

மன்னவன் வந்தமையால் ''மன்னவனூர்'' ஆகியிருக்க லாம்.

இப்படிச் சொல்லுவதற்கு, சேர மன்னன் ஒருவன் இம் மலைப் பகுதிக்கு வந்திருக்கக் கூடுமா என்னும் ஐயம் எழுகிறது.

அதற்கு விடை காண்போம்

1. சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணவந்த செய்தி யும், குன்றக் குறவர் இம்மலையில் கிடைக்கும் பொருள்களை அம்மன்னன் முன்வைத்து, 'குரவைக் கூத்து' அயர்ந்து வணங்கிப் போற்றிய செய்தியும் சேர மன்னனின் இளவல் இளங்கோவடி களின் சிலப்பதிகாரத்தால் அறிகிறோம்.

2. ''அண்மையில், சேர நாட்டு மார்த்தாண்டவர்மா மன்னர் காலம் வரையிலும், அவ் அரசனின் குதிரைப் படைத் தலைவராக விளங்கிய ''திருச்சிற்றம்பலம் பொன் பாண்டித் தேவர், தமக்கு மன்னர் மானியமாக வழங்கிய 'பாலமார்த்தாண்டபுரம்' ஊர்ப் பகுதிகளில் விளைந்த விளைபொருள்களைச் சேரமன்னர்க்கு ஆண்டு தோறும் காணிக்கையாகக் கொடுத்தார்''.[35]

3. குன்னுவர் பழங்குடியினரின் முன்னோர், ஆண்டு தோறும் மலைபடு பொருள்களுடன் திருவாங்கூர் மன்னரைக் கண்டு வணங்கி மகிழ்ந்து வரும் வழக்கம் இருந்து வந்ததையும் இம்மலைப் பழங்குடியினர் சொல்லுகின்றனர்.

இந்த மரபு வழிச் செய்தியும் இங்கு நினைக்கத்தக்கது.

அவ்வளவு தொலைவு 'வந்தும் போயும்' அவ்வளவு எளிதாக நடந்திருக்க முடியுமா? என்னும் ஐயமும் கூடவே எழுகிறது.

4. இப்பழங்குடியினர் பழங்காலத்திலிருந்தே பரம்பரை பரம்பரையாக நடந்து சென்ற மலை வழிகள் மறைந்தும் மறையாத தடங்கள் இப்போதும் பழனிமலைத் தொடரில் காணப்படுகின்றன.

5. கோடைக்கானல் மலை உச்சியில் கேரளத்தைத் தொடு மாறு, மூணாறு செல்லும் தடம் இருந்ததாகவும், நடந்து செல்லும் பழக்கம் ஒழிந்து, பேருந்துப் பயணம் வந்துவிட்டமையால், அவ்வழி ஒருவழியாய் மறையத் தொடங்கியதாகவும் சொல்லுகின்றனர். பழைய தடத்தை இப்போதும் பார்க்கலாம்.

6. கீழே சமவெளியில், கிழக்கே பெரியகுளத்தில் இருந்து 'அடுக்கம்' (பன்மலை அடுக்கத்து'- ஒடுக்கம் எனப் பொருள் புரியாமல் சொல்லுகின்றனர்) என்னும் மலைச் சிற்றூர் வழியாக மலை உச்சிக்கு வரும் ஒற்றையடிப் பாதையும்.

7. மேற்கே பழனியிலிருந்து மலையேறி 'பெரும்பள்ளம்' மலைக்கிராமம் வழியாகக் கீழ்ப் பழனி மலைத் தொடருக்கு வரும் ஒற்றையடிப் பாதையும் நடைச் செலவு இன்மையால் மறைந்து விட்டன.

8. இதேபோல், சேரநாட்டிலிருந்து, 'பண்ணைக்காடு' என்னும் 4500 அடி உயர மலைக் கிராமத்துக்கு அருகில், வடக்கே குறுக்கிடும் மலைத் தொடரைத் தாண்டி, கீழ்ப்பழனி மலையில் உள்ள '[illegible]டிக்குடி' என்னும் ஊருக்கு வரவழி செய்து மலை ஒற்றையடிப் பாதையும் 1965 இல்பேருந்து போக்குவரத்து வரும்வரை புழக்கத்திலிருந்து வந்தது.

எனவே, இப்பழைய மலைத்தடங்கள் வழியே இப்ப[illegible] குடி மக்கள் ஏற்கெனவே போய் வந்திருத்தல் வேண்டும் என[illegible] உறுதியாகிறது.

அழியும் நிலையில் உள்ள இவ்வழித் தடங்களைக் கண்டறிந்து, தமிழக அரசு மீண்டும் அவற்றில் பெருவழிச்சாலை அமைக்க இருப்பதாக அறிவித்துள்ளது.

## பூம்பொறை - பூம்பாறை

கோடைக்கானல் நகரியத்தின் வடமேற்புறச் சரிவில் 'பூம்பாறை' என்னும் மலைப்பள்ளத்தாக்குக் கிராமம் உள்ளது.

அப்பகுதி மக்கள் அவ்வூரை, 'பூம்பாறை' என வழங்கினாலும், அப்பெயருக்குள் சங்க இலக்கியம் சுட்டும் வரலாற்றுப் பெயர் மொழிமரபு அறியாமை, இலக்கிய வளம் தெரியாமை, வரலாற்று உணர்வு இல்லாமை போன்றவற்றால் (புல்லாற்றூர் போன்று) மறைந்துள்ளது.

பூம்பாறை ஊரின் சரியான பெயர் பூம்பாறையன்று. 'பூம்பொறை' என்பதே அதன் வரலாற்றுச் சார்பான பெயராகும்.

இவ்வாறு சொல்லுவதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளனவா என்னும் வினா எழும். சான்றுகளைப் பற்றிச் சிந்திக்கலாம்.

சேர மன்னர் மரபினருள், 'பொறை' மன்னர் ஐவர், வரலாற்றில், பதிற்றுப் பத்து சங்க நூலில் தெரிய வருகின்றனர்.

அவர்கள்: 1. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, 2. சேரமான் மாந்தரஞ்சேல் இரும்பொறை, 3. சேரமான் கணைக்கால் இரும்பொறை, 4. குடக்கோச் சேரல் இரும்பொறை, 5. யானைக் கண் சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் ஐவர் ஆவர்.

அவ் ஐவருள் ஒருவன் கானகத்தின் வழியே, மேல் பழனி மலை ஏறி, 'பூம்பாறை' என மருவி வழங்கப் பெறும் இப்பகுதிக்கு வந்துள்ளான். இப்பகுதியில் சில நாள்கள் தங்கியுள்ளான்.

எனவே, பொறை மன்னன் வந்து தங்கியிருந்த காரணத்தால், ''பூம்பொறை'' என்பதே அவ்வூரின் பொருத்தமான பெயர் ஆயிற்று.

''அறையும் பொறையும் மணந்த தலைய'' என்னும் புற நானூற்றுத் தொடரில் வரும் 'பொறை' என்னும் சொல் சுட்டும் பொருளில் இங்கு அச்சொல் வரவில்லை. 'பொறை மன்னனைக்' குறிப்பதற்கே வந்துள்ளது.

இதே போன்று சேரமன்னர்கள் வேறு இடங்களில் சென்று தங்கி, அவர்கள் தங்கியிருந்த காரணத்தால் பெயர் பெற்ற இடங்கள் உள்ளனவா என்னும் வினா எழுகிறது.

அவ்வாறு பெயர் பெற்ற இடங்களும் உண்டு.

''சேரன் செங்குட்டுவன் வடபுலம் செல்லுங்கால், ஏ.றில் மலை அருகில் நீல மலையில் தங்கினான். அங்ஙனம் தங்கியமைக் குச் ''செங்கோட்டூர்'' என்னும் ஊர்ப் பெயர் சான்று பகர்கிறது.''[86]

சேர மன்னன் செங்குட்டுவன் வந்து தங்கிச் சென்றமை யால், 'செங்கோட்டூர்' எனப் பெயர் பெற்ற ஊர் உள்ளதாக இச் சான்று மூலம் தெரிகிறது.

மேலும், நீலமலை கூடலூர் அருகில் 'சேரன்பாடி', 'பேரம்பாடி' எனச் சேர மன்னரோடு சேரநாட்டோடு தொடர் புடைய ஊர்ப் பெயர்களும் அமைந்துள்ளன.

திருவனந்தபுரம் பத்மனாப சுவாமி திருக்கோயிலின் மூலக் கோயில் 'அம்பாடி' என்பது.

இவ்வாறு, சேர மன்னர் தங்கியிருந்த இடங்கள் மட்டு மல்ல. வேறு தொடர்புடைய இடங்களும் உள்ளன.

கோட்டயம் அருகில், 'குட்டநாடு' என்னும் இடம் உள் ளது. குட்டுவன் நாடு குட்ட நாடு ஆனது.

பண்டிட் கறுப்பன் பிறந்த குலத்தோடு 'சேராநல்லூர்' என்னும் பெயர் குறிப்பிடப்படுவதைச் சுட்டலாம்.

பழனிமலை அருகில், ''கோதைமங்கலம்'' என்னும் நிவந்தமாக வழங்கப்பட்ட ஊர் உள்ளது.

சேர மன்னர் மரபினராகிய பெருமாக் கோதையார் தொடர்புடைய இடம் 'மகோதைப் பட்டினம்' துறைமுகம் ஆகும்.

சேரமாக்கோதை பெயரால் கோதை ஆறு ஓடுகிறது.

சேரமான் செல்வக் கடுங்கோ ஆழி ஆதன் பெயரால் ''ஆழிக்கோடு'' (ஆங்கிலத்தில் அலிக்கோடு - Alicode - ஆகி விட்டது.) என்னும் மலை சேரநாட்டில் உள்ளது.

ஆழிக் கோட்டில் தோன்றி கல்லும் மலையும் கடந்து வரும் ஆறு 'ஆழி ஆறு' என்பது. இது ஆங்கிலத்தில் 'அலியார்' - Aliyar - ஆகிவிட்ட கொடுமை.

இவ்வாறு சேர மன்னர்கள் வேறு இடங்களில் சென்று தங்கியதால் பெயர்ப் பெற்ற இடங்களும் மலை, ஆறு இவற்றின் பெயர்களும் உள்ளன என்பதற்காகவே இச்சான்றுகள் சுட்டப் பெற்றன.

எனவே, சேரநாட்டு உட்பிரிவான 'பொறை நாட்டை' ஆண்ட பொறை மன்னருள் ஒருவன் வந்து தங்கி இருந்த இடமே 'பூம்பொறை' என்பது ஏதுக்களாலும், எடுத்த மொழியாலும் உறுதியாகிறது.

'பொறை' என இங்குக் குறிப்பிடுவதற்குக் காரணம் இருப்பினும், 'பூ' என்னும் ஓரெழுத்து ஒரு மொழி அடையாக வரக் காரணம் என்ன?

திரு, அழகு என்பவை மட்டும் காரணங்கள் ஆகமாட்டா.

பூ- இங்கு மலரைக் குறிப்பதற்குச் சிறப்புக் காரணம் உண்டு.

ஒருசமயத்தில் 'பூம் பொறை'யைச் சுற்றிலும் மணம் மிகுந்த சிறப்பு மிக்க சண்பக மரங்கள் அடர்ந்து செறிந்து நின்றன;

''பெருந்தண் சண்பகம் செரீஇ''ச் செவ்வேள் ஆகிய சேயோன் சாட்சியளிப்பதாக நக்கீரர் கூறுகின்றார். இதனை இவ்விடத்து நினைவு கூர்தல் தகும்.

''மதிய நிலா''க் காலங்களில் (முழு நிலவு) சண்பக மலர் மலர்ந்து அம்மலைச் சாரலை மணம் கமழச் செய்யும். ''குறத்தி மாட்டிய வறற் கடைக் கொள்ளி ஆரம் ஆதலின் அம்புகை அயலது சாரல் வேங்கை பூஞ்சினை தவழும்'' சாரல் பகுதி.

சண்பக மலருக்கு வேறு ஒரு தனிப் பண்பு உண்டு. அம் மலரை நமது மூக்கின் அருகில்வைத்து மோந்து பார்த்தால், மூக்கிலிருந்து குருதிகசியும் என்கின்றனர்.

ஆகவே, இம்மலரை வண்டுகள் மொய்க்கமாட்டா. இதன் காரணமாக இப்பழங்குடி மக்கள் இச்சண்பக மலரை 'வண்டுணா மலர்' எனச் சொல்கின்றனர். தூய பழந்தமிழ்த்தொடர். வண்டுகள் மொய்க்காத மலர்.

''சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்'' (திருமுருகாற்றுப் படை) என்பதும்,

அதனெதிரான, ''சுரும்பு உண விரிந்த காந்தள் மலர்'' - (அகநானூறு) என்பதும் ஆகிய சங்க இலக்கியத் தொடர்கள் நமது நினைவுக்கு வருகின்றன.

''வண்டுணா மலர்'' என்னும் தூய பழந்தமிழ்த் தொடர் அப்பழங்குடி மக்கள் வாயில் வருகிறது.

''பழங்குடி மக்கள் நாவிலும் சரஸ்வதி குடிகொண்டிருக் கிறாள்''[37]

*(1959 ஆம் ஆண்டு எனது கள ஆய்வின் போதே ஆங்கே சண்பக மரங்கள் இல்லை, அழித்து, பணப் பயிரிடத் தொடங்கி விட்டனர்.)*

பொறை, கோதை, ஆதன், செங்குட்டுவன் ஆகிய சேர மன்னர்களின் பெயர்களால் இடப்பெயர்கள் முதலியன அமைந் துள்ளன.

எனினும், 'பொறை' மன்னன் பூம்பொறைக்கு வந்து தங்கினான் என்பதற்கு, உறுதியான வேறு சான்றுகள் எவை யேனும் உளவா என்னும் அடுத்த வினா எழுவதும் இயல்பே.

அதற்கு விடை காண்போம்.

1. ''பழனிமலைத் தொடருக்குச் சற்றுத் தொலைவில், சென்னிமலை அருகில் உள்ளது கொடுமணல் என்னும் இடம்.

இவ்விடம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வர லாற்றுப் புகழ்பெற்ற இடம்.

சேரர் வரலாற்றைக் குறிப்பிடும் சங்க நூல் பதிற்றுப் பத்தில், கொடுமணல் பற்றிய சான்று உள்ளது.

''கொடு மணல் பகுதிக்கும் உரோமானியருக்கும் தொடர்பு இருந்தது.

இத்தொடர்பைக் கொடுமணல் அகழ்வு ஆய்வில் கிடைத்த உரோமானிய நாணயங்கள், சிதைந்த பாண்டப் பகுதிகள் ஆகி யவை உறுதி செய்கின்றன.

கொடுமெணலை ஒட்டி நொய்யல் ஆறு ஓடுகிறது.

தேக்கு, சந்தனம், மிளகு, ஏலம், இலவங்கம் முதலிய மலைபடுபொருள்களை வாங்குவதற்கு உரோமானி[illegible] றற்குக் கடற்கரைக்கு வந்தனர்.

அங்஖னமாயின் மலைபடு பொருள்களை வாங்குவதற்குச் சேரநாட்டுக்கும் பழனி மலைத் தொடருக்கும் தொடர்பு இருந் திருத்தல் வேண்டும்.[38]

இச்சான்றின் மூலம் சேரநாட்டுக்கும் பழனிமலைத் தொட ருக்கும் தொடர்பு இருந்தது தெரிய வருகிறது.

மேலும், ''மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில், பழனியிலிருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளடங்கிய ஒரு மலையடிச் சிற்றூர் ''பொருந்தாள்'' என்பது.

இப்பெயர், ''பெருவரைத்தாள்'' (பெரிய மலையடி வாரம்) என்று இருந்து, 'பெருந்தாள்' எனச் சுருங்கி, 'பொருந்தாள்' என மாறி இருத்தல் வேண்டும் (பெட்டி-பொட்டி ஆனது போல).

இவ்வூரில் அண்மையில் நடந்த அகழ்வாய்வில் வைரம், அணிகலக் கற்கள், சுட்ட மண்பானைகள், நான்கு கால் சாடிகள் முதலிய வணிகப் பொருள்கள் கிடைத்துள்ளன.

இவ்வூர், மதுரையிலிருந்து சேர நாட்டுக்குச் செல்லும் முக்கிய வாணிகப் பெருவழியோடு நெருங்கிய தொடர்பு கொண் டுள்ளது. எனவே, தரைவழிப் பெருவணிகர் கூட்டம் (வாணிகச் சாத்து) மதுரையில் இருந்து சேரநாட்டுக்கும், சேரநாட்டிலிருந்து மதுரைக்கும் சென்று வந்திருக்க வேண்டும். இச்செய்தி கி.மு. முதல் நூற்றாண்டுக்கும் கி.பி.முதல் நூற்றாண்டுக்கும் இடைப் பட்ட காலச்செய்தி.

இவ்வகையில், பழனிக்கு மிக அருகில் சேரர் வந்து போவது தெரிகிறது.''[39]

எனவே, வாணிகத் தொடர்பு மூலம் சேர நாட்டினரும், பழனி மலைத் தொடர் மக்களும் தொடர்பு கொண்டிருத்தல் வேண் டும் என உறுதியாக நம்பலாம்.

2. அடுத்து, பழனிமலைத் தொடருக்குச் சற்று அருகில், நாமக்கல் பக்கம் அமைந்துள்ள கொல்லிமலைப் பகுதியை வல்வில் ஓரி என்னும் குறுநில மன்னன் ஆண்டு வந்தான்.

அப்போது, சேரநாட்டுக் காரி மன்னன் கொல்லி மலைமீது படையெடுத்து வந்துள்ளான். இச்சான்றிலிருந்து பழனிமலைப் பக்கம் சேர மன்னன் ஒருவன் வந்துள்ளான் என்பது தெரிய வருகிறது.

3. ''பழனிமலைத் தொடரின் மிக அருகில் அமைந்துள்ள கரூர் மாவட்டம், புகழூர் மலையில் குகைக் கல்வெட்டுக்க்ள் செதுக்கப்பட்டுள்ளன.

## கல்வெட்டுத் தொடர்

**''தா அமண்ணன் யாற்றூர் செங்காயபன்**
**கோ அதன் செல்இரும்பொறை மகன்''**

இக்கல்வெட்டுக்கள், சங்க கால இரும்பொறை மன்னர் களுடையவை. கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக் காலத்தவை.''[40]

இக்கல்வெட்டுச் சான்றின் மூலம், சேர மரபினரின் கிளை மரபினரான பொறையர் கரூருக்கு வந்துள்ளனர் என்பதும், பழனி மலைக்கு மிக அருகில் வந்துள்ளனர் என்பதும் மெய்ப்பிக்கப் படுகிறது.

4. இன்னும் நெருங்கிப் பார்த்தால், பழனி முருகன் திருக் கோயில் கருவறையில், பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக் களுடன் சேரமன்னர்களின் கல்வெட்டுக்களும் உள்ளன.

5. பழனி மலைக் கோயிலில் சேர மன்னர் கல்வெட்டுக்கள் உள்ளமையால்,

அதே பழனி மலைத் தொடரில், பூம்பொறைக் கோயிலி லும், சேர மன்னர்களின் கல்வெட்டுக்கள் இருக்கக் கூடும்.

6. பழனி மலை அருகில், 'கோதை மங்கலம்' என்னும் நிவந்தமாக வழங்கிய ஊர் உள்ளது.

இதனால், பழனித் தலத்துக்கும், சேரமன்னர் மரபினான கோதை மன்னன் வந்துள்ளமை தெரிகிறது.

அது போன்று, சேரமன்னன் மரபினான பொறையனும், பழனி மலைத் தொடரில் அமைந்துள்ள பூம் பொறை எனப் பின்னர் வழங்கப் பெறும் பகுதிக்குத் தன் பயணக் குழுவினருடன் வந்து தங்கியுள்ளான்.

இப்போது தொகுத்துப் பார்த்தால்,

1. உரோமானியரின் வாணிகத் தொடர்பால், சேர நாட்டுக் கும் பழனி மலைத் தொடருக்கும் இருந்த தொடர்பு தெரிய வரு கிறது.

2. கொல்லி மலைக்குச் சேரமன்னன் வந்துள்ளான்.

3. புகழியூர்க் குகைக் கல்வெட்டுக்கள், சங்க காலப் பொறையர் கல்வெட்டுக்கள்.

4. பழனி முருகன் கோயிலில் சேரமன்னர் கல்வெட்டுக் களும் உள்ளன.

5. இவ்வாறு சிறிது சிறிதாக நெருங்கிவருவதால், பூம் பொறைக்கும், பொறை மன்னன் தன் சுற்றமுடன் மலைவளம் காண வந்து தங்கியுள்ளான்.

அவ்வாறு தங்கியிருந்ததன் நினைவாகக் கோயில் எடுப் பித்திருத்தல் வேண்டும் எனக் 'கருதல் அளவை' யால் நம்பலாம்.

அடுத்த வினா, பூம்பொறையில் தங்கியிருந்த மன்னன் கோயில் எழுப்பியது ஏன் என்பது.

''கோட்டம் பலத்துத் துஞ்சிய சேரமான்'' என (அகம்:168) வருவதால், மலைமேல் அம்பலம் - கோயில் - ஏற்கெனவே அமைக் கப்படும் மரபு இருந்தமை உறுதியாகிறது.

''அயிரை மலைமேல் இருக்கும் தெய்வத்தைப் பரவி னான்'' (பதிற்றுப்பத்து-பதிகம்:3.) எனக் கூறுவதால்,

மலைமேல் தெய்வம் இருப்பதும், அத்தெய்வத்தை மன்னன் வணங்குவதும் உறுதியாகின்றது.

இம்மன நிலையில் பார்க்கும்போது, தான் வந்து தங்கிய தன் நினைவாக, கோயில் இல்லாத இடத்தில் கோயில் எடுப்பித் தான் எனவும் நம்பலாம்.

மலைமேல் கோயில் அமைப்பதால், திணைச்சிறப்போடு கூடிய சுற்றுச் சூழியல், மலை வளம் இரண்டும் பேணப்படு கின்றன.

எவ்வாறு? மலைக் கானகத்து வாழும் அம்மக்கள் மலையை விட்டுச்சமவெளிக்குக் குடிபெயர்ந்து வரமாட்டார்கள். அவர்கள் மலைகளில் தங்கி மலைவளம் பேணிவருவதற்குக் கோயில்கள் ஒரு காரணியாக அமைந்து உதவின.

இவ்வளத்தைப் பாதுகாப்பதன் மூலம் புவியின் தட்ப வெப்ப நிலையைச் சமச்சீராக வைத்திருப்பதற்கும் கோயில்கள் மறைமுகமாக உதவின.

''சில சிவத்தலங்களில் திருச்சுற்றில் வரிசையாகச் சிவ லிங்கம் பல நல்லிருப்புச் செய்யப்பட்டிருப்பதைக் காண்கிறோம். நட்பு நாட்டு அரசன் ஒருவன் ஒரு தலத்துக்கு வழிபாட்டுக்காக வரும்போது, வந்ததன் நினைவாகச் சிவலிங்கம் திருச்சுற்றில் நல்லிருப்புச் செய்வான்.''[41]

இந்நிகழ்வு போன்று, பூம்பொறைக்கு வந்த பீடும் பெய ரும் பொதுளிய இப்பொறையனும், தான் வந்து தங்கியதன் நினை வாகத் திருக்கோயில் இல்லாத அவ்விடத்தில் எடுப்பித்தான்.

ஆயினும், கோயில் அமைந்த 'பொறை'யன் இன்னான் எனச் சுட்டு மாறில்லை.

''பூனையாத்துத் தம்புரான்'' இக்கோயிலைக் கட்டியதாகச் சொல்லுகின்றார்கள். இது வாய்மொழிச் செய்தி. இவன், ''பூவானி யாற்றுத் தம்பிரான் ஆகிய சேரன் பொறையருள் ஒருவனாக இருக்கலாம்.

எனினும், ''கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்'' என் னும் அகப்பாடல் அடி(பா-168)யில், சேரமான் ஒருவன் கோட்டு அம்பலத்துக்கு (மலைக் கோயிலுக்கு) வந்த செய்தி தெரிய வருகிறது. இது பொது.

இங்கு ஒரு சிந்தனை:

''கோச் சேரமான் யானைக்கட்சேஎய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை'' என்ற வழி,

**அரசன் என்பதோர் சாதியும்,**
**தேரமான் என்பதோர் குடியும்,**
**வேழ நோக்கினை உடையான்**
**என்பதோர் வடிவும்,**
**சேய் என்பதோர் இயற்பெயரும்**
**மாந்தரஞ் சேரல் இரும்பொறை**
**என்பதோர் சிறப்புப் பெயரும்......**

எனப் பரிமேலழகர் (குறள்: மெய்:5) விளக்கவுரை தருகிறார்.

இவ்வுரையில், ''யானைக்கண்'' என்பதற்கு ''வேழ நோக் கினை உடையான்'' எனக் குறிக்கின்றார்.

யானை தொலைவில் உணரும் கூர்த்த நோக்கினை உடை யது. அது போன்று இம்மன்னனும் பிறரது அகம் நோக்கி உற்றது உணரும் பெற்றிமையான். பகைவரைக் கூர்ந்து நோக்கி, எதிராக காக்கும் அறிவும், பாதுகாப்புணர்வும் உடையான் என்பதும் குறிப் பால் உணர முடிகிறது.

வேழத்தைக் குறிப்பிடுவதால், சேரநாட்டு 'உம்பல் (யானை) காடு' தொடர்பும் இயைபுடையதாகிறது.

'சேய்' இயற்பெயர் எனச் சுட்டுகின்றார். சேய்-குறிஞ்சிக் கடவுள் முருகனையும் குறிக்கிறது. ''பொலம்பூண் சேஅய்'' எனத் திருமுருகாற்றுப்படை முருகப் பெருமானைக் குறிப்பிடுகிறது.

சேய் என்னும் இயற்பெயரும் இரும்பொறை என்னும் சிறப்புப் பெயரும் உடைய கோச்சேரமான் யானைக் கட் சேய்மாந் தரஞ் சேரல் இரும்பொறை, பூம்பொறைக்கு வந்துள்ளான் எனவும், தன் இயற் பெயருக்குக் காரணமான முருகனுக்குக் கோயில் எடுப்பித்தான் எனவும் ஊகிக்க முடிகிறது.

ஊகம் சரியானது எனில், பூம்பொறைக்கு வந்து முருகனுக்குக் கோயில் எடுப்பித்தவன், கோச் சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை மன்னனே ஆவான் என்னும் முடிவுக்கு வரலாம்.

பூம்பொறையில், குறிஞ்சிக் கிழவனின் கோயில் கற்றளி தான். பழனித் திருக்கோயில் போன்றே இக்கோயில் அமைப்பும் உள்ளது. பழனி போன்றே சேர நாட்டை நோக்கிய திருவாயில்.

'' சேயோன்'' என்பதற்கு ஏற்ப, ''குழந்தை வேலப்பன்'' என்பது பூம்பொறையில் குடிகொண்டிருக்கும் முருகப்பெருமானின் திருப்பெயர்.

சுருளி மலைக் கோயிலிலும் 'வேலப்பன்' தான்.

பழனிமுருகன், தண்டாயுதபாணி ஆனது பிற்காலத்தில்.

பழனியில், பழைய கோயிலான ஆவினன் குடி கோயிலில் குடிகோண்டுள்ள மூலவனும் குழந்தை வேலப்பன்தான்.

'சேய்' குழந்தையாகக் கொண்டு, குழந்தையுடன், மலை வாழ் மக்களைக் காக்கும் கருவியாகவும், அவர்களுக்கு உணவு ஈட்டித் தரும் கருவியாகவும் உதவும் 'வேல்' சேர்த்து 'குழந்தை

வேல்' எனவும், கேரளத்து அச்சனை நினைவூட்டும் வகையில் 'அப்பனாகவும்' ஆக்கி, 'குழந்தை வேலப்பன்' என்றனர்.

இயற்கை வழிபாட்டு முறைக்கும், அம்மக்களின் சமுதாய வாழ்வை எதிரொலிக்கும் முறைக்கும் இப்பெயர் பொருத்தமாக அமைகிறது.

''சேய்'' என்பது இயற்பெயர் என்கின்றார் பரிமேலழகர். சேய் அடியாகத் தோன்றியது சேயோன்.

''சேயன் என்பது, செய்யுள் ஓசை கருதிச் சேயோன்'' என ஆயிற்று.''[42]

முதலில் கடவுளுக்கு உருவம் கற்பித்துக் கொடுத்தனர். அடுத்த நிலையில், ஒவ்வொரு கடவுளர்க்கும் வண்ணம் சேர்த்திட விழைந்தனர்.

திணைக்கு ஏற்றவாறு கடவுளரை நிலைப்படுத்தி, ஆங்குள்ள தட்ப வெட்பச் சூழலுக்கு ஏற்ற வண்ணம், வண்ணம் கற்பித்தனர்.

செம்மை நிறம் பொருந்தி முருகன் சேயோன், செவ்வேள் ஆனான்.

''பவளத் தன்ன மேனி,'' ''குன்றி ஏய்க்கும் உடுக்கை'', ''கோபத்தன்ன தோயாப் பூந்துகில்'' எனச் செம்மை நிறமேற்றிச் செவ்வேளைப் போற்றுவர்.

''வெப்பமாக வைத்திருக்கும் நிறம் சிவப்பு'' என வண்ணப் படும்பாய்வர் பகருவர்.

குறிஞ்சியின் குளிருக்கு இக்கருத்து இதமாக இருக்கிறது.

குறிஞ்சி நிலத்துக்கு உரிமைப்படுத்திய பண் நட்டபாடை. நட்டபாடைப் பண்ணின் நிறம் செந்நிறம் எனப் பண்ணிசை வித்தகர் கூறுவர்.

நட்டபாடைப் பண்ணின் இக்காலத்திய இராகப் பெயர் நாட்டை.

''செம்மை நிறம் மனவலிமை, தன்னம்பிக்கையின் நிறம்'' என ஹோமியோபதி மருத்துவம் கூறுகிறது.

செவ்வேள், தன்னை வழிபடுவோர்க்கு மனவலிமையை யும், தன்னம்பிக்கையும் தருவான்.

"Deep red is the Divine love - rosy in the psychic love" - Sri Aurobindo's interpretation.

திருமால் நீல வண்ணன். கொற்றவை கரிய வண்ணத்தள்.

நிறங்களுக்கு ஏற்ப எண்ணங்களும் மாறுபடுகின்றன என்பதும் வண்ண ஆய்வாளர் கருத்து.

மனித மூளையை ஊடுருவும் ஆற்றலைக் கொண்ட கதிர் 'நியூட்ரினோ' என்பது. இக்கதிர்களை வண்ணங்கள் வெளிப் படுத்துகின்றன.

மனிதனின் தலைக்குப் பின்னால், வட்ட வடிவில் வண் ணங்கள் அமைந்துள்ளன எனவும் கூறுவர்.

மனிதகுல அறிவு நாகரிக மேம்பாட்டில் மற்றையோர் முதல்படிநிலையில் இருந்தபோது, நாம் மூன்றாம் நிலைக்கு மேல் உயர்ந்துள்ளோம் என்பதை நம் முன்னோர் கருத்துக்கள் புலப் படுத்துகின்றன.

## அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்ப் பாடலில் பூம்பொறை

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அருணகிரிநாத சுவாமிகள். அவர் பழனித் தலத்துக்கு வந்து மலை கிழவோனைப் பாடியுள்ளார்.

அவ்வழிபாட்டின் பின்னர், இவ் அடியவரும் பொறை மன்னன் வந்த மலைத் தடத்தின் வழியே அடியவர் திருக்கூட்டத்துடன் பூம்பொறைக்கு வந்துள்ளார். பூம்பொறை குழந்தை வேலப்பனைப் போற்றிப் பாடியுள்ளார்.

முன்னதாக, திருச்செங்கோட்டு தலத்துக்கு வந்த அருண கிரிநாதர், ''நாகாசல வேலவா'' என முருகனைப் போற்றினார்.

அப்படியே, பழனித்திருப்பதிக்கு வந்து, ''பசு பதி சிவாக்கியம் உணர்வோனே! பழனிமலை வீற்றருளும் வேலா'' எனப் பழனியப்பனைப் பாடினார்.

இன்னும், ''நாதலிந்து'' எனத் தொடங்கும் பழனித் திருப்புகழில், ''ஆதியந்த உலாவாசு பாடிய சேரர் கொங்கு வைகாவூர் நன்னாடதனில் ஆவினன் குடி'' எனவும் பழனியின் பழம் பெயராகிய ஆவினன்குடியைக் குறிப்பிடுகின்றார்.

சேர நாட்டுக் கொங்கு மண்டலத்து, வைகாவூர் நன்னாட்டில் அடங்கிய திரு ஆவினன்குடி என அருணகிரியார் காலத்தில், சேர நாட்டு ஆளுகையின் கீழ்க் கொங்கு மண்டலம் - கொங்கு மண்டலத்தில் ஆவினன்குடி - இருந்ததைக் குறிப்பிடுகின்றார்.

எனவே, சேரநாட்டுக்கும், பழனிமலைத் தொடருக்கும் இடையே இருந்த பழைய வரலாற்றுத் தொடர்பையும் குறிப்பிடுகின்றார். வைகாவூர்க் கோட்டத்துள் அடங்கிய திரு ஆவினன்குடி என வும் கூறுகின்றார்.

அதன்பின், அன்பர் குழாத்துடன் பூம்பொறைக்கு வருகின்றார். மலைமேவு முருகன் திருக்கோயில் உள்ளதை அறிந்தே வருகின்றார்.

இம்மலையின் கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பில் திளைத்து, பூம்பொறையில், ''மாந்தளிர்'' எனத் துவங்கும் திருப்புகழ்ப் பாடலில்,

''பூந்தளிர்கள் வீசு வேங்கைகள் பலாசு, பூங்கதலி கோட திகழ்சோலை, பூந்தடம் உலாவும் கோம்பைகள் குலாவும் பூம் பொறையில் மேவு பெருமாளே!'' எனப் பூம்பொறை வேலப் பனைப் பாடுகின்றார் (பூம்பொறைத் திருப்புகழ்). சேர மன்னன் 'பொறை''யன் பூம்பொறைக்கு வந்த வரலாற்று உண்மை மெய்ப் பிக்கப்படுகிறது.

இவ்வுண்மையை அருணகிரிநாதரின் வாய்மொழியாலும் அறிகின்றோம்.

இவர், பூம்பாறை எனச் சொல்லவில்லை. 'பூம்பொறை' என்றே சொல்லுகின்றார்.

அருணகிரியாரின் திருப்புகழில் காணப்பெறும் குறிப் பொன்று இங்குச் சுட்டுதல் பொருந்தும்.

இவர் பாடல்களில், இவர் காலத்திய மன்னனான பிரபுட தேவ மன்னனை ஆங்காங்கே குறிப்பிடுகின்றார்.

அவ்வாறே பழனியம்பதிக்கு வந்தவர், ''சேரர் ஆட்சிக்குட் பட்ட கொங்கு மண்டலத்து வைகாவூர் நாட்டைச் சார்ந்த ஆவினன் குடி'' என்னும் வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிடுகின்றார்.

''பூம்பொறைக்கு'' வந்தவர், அவ்விடத்துக்கு வந்தவன் சேரமன்னன் பொறையன்தான் என்பதை உறுதிப்படுத்தும் விதத் தில், அச்செய்தியை வரலாற்றுச் செய்தியாகப், ''போகிற போக் கில்'' தம் பாடலில் குறிப்பிட்டுச் சொல்லுகின்றார்.

ஏனெனில், வரலாற்றைக் கூறுவது அவருடைய நோக்க மன்று. தாம் முன்னர்க் கேட்டறிந்த வரலாற்று நிகழ்வுகளைக் கூற வேண்டிய பொருத்தமான இடங்களில் இணைத்துக் கூறுவது இவர் இயல்பு. எனவே, கூறுகின்றார்.

பலாசு - புரச மரம். புரச மரங்கள் அடர்ந்த கானல் புரசைப் பாக்கம், கடற்கரைக் கானல்.

எனவே, பூம்பொறை என்பதுதான் மொழி மரபும், வர லாற்றுணர்வும் இணைந்த உண்மைப் பெயர். சங்ககால வரலாற் றுப் பெயர்.

## கோடைக்கானலா?

''கொடைக்கானல்'' எனப் பேச்சு வழக்கில் வழங்கப் பெறும் நகரியத்தின் சரியான பெயர் ''கோடைக்கானல்'' என்ப தாகும்.

கோடைக்கானல் என்பது சரியா என்பதும் சிந்திக்க வேண் டிய ஒன்று. சிந்திக்கும்போது, கோடைக்கானல் சங்க கால வரலாற் றோடு இணைந்த அரும்பெயராகத் திகழ்கிறது என்பது வியப்பை யும், மகிழ்ச்சியையும் தருகிறது.

பல வரலாற்று உண்மைகள் இம்மலையில் புதையுண்டு கிடக்கின்றன.

## 1. கானல்கள் பல

''கானல்கள் இருவகையாக உள்ளன. ''கந்திப் பொதும்பர் எழுகார் அலைக்கும் சீர் அலைவாய்'' (குமரகுருபரர் - கந்தர் கலி வெண்பா) என்பதால், மரங்கள் செறிந்த கடற்கரைக் கானல்கள் உண்டு என்பது தெரிய வருகிறது. ''கானல் வரியும்'' சிலம்பு கூறு கிறது.

கறங்கு காற்றும் கதிரவன் ஒளியும் புகாத இருள் அடர்ந்த மரங்கள் செறிந்த தண்ணரும் கானல்கள், மலையகத்துத் கானல் கள், சோலைக்காடுகள்.

பழனி மலைத் தொடரில், 'கானல்'கள் பல உள்ளன.

கோடைக்கானல், வட்டக்கானல், அருங்கானல், செங் கரைக் கானல், கானல்காடு ஆகிய கானல்கள் இம்மலைத் தொட ரில் பொருந்தியுள்ளன.

மூணாறு அருகே சின்னக்கானல், மேற்கு மலைத் தொடரில் மங்கல தேவிக் கோட்டம் அருகில் மூன்று கானல்கள் உள்ளன.

எனவே, இம்மலைத் தொடரில் பல கானல்கள் உள்ளன என்பது தெளிவு.

## 2. கோதைக்கானல்

கோடைக்கானல் என்பது, 'கோதைக் கானல்' என்பதன் திரிந்த பெயரே ஆகும்.

எப்படி?

உதியன் பேரூர், உதியன் சேரி, மன்னவனூர், பூம்பொறை, சேரன்கோடு, சேரா நல்லூர், செங்கோட்டூர், சேரன் மாதேவி என இடப்பெயர்களும், கோதை ஆறு, ஆழி ஆறு, உதியன்குளம், சேரன் குளம் என நீருடைப் பெயர்களும் சேரமன்னர்களின் பெயர்களோடு இணைந்து, அம்மன்னர் பெயரால் விளங்கி வருகின்றன என்பது தெளிவு.

இவற்றைக் காணும்போது, தற்காலத்தில் ''கோடைக் கானல்'' எனத் திரிந்து வழங்கும் பெயர், ''கோதைக்கானல்''எனப் பண்டு வழங்கியிருத்தல் வேண்டும் எனத் தெரிகிறது. அதைப் பற்றி ஆராயலாம்.

பழனி மலை அருகில், 'கோதை மங்கலம்' என்னும் ஊர் அமைந்திருப்பதை முன்னர்ப் பார்த்தோம்.

பழனி மலைக்கு வந்த கோதை மன்னன் சேரன், பழனி மலைத் தொடரில் அமைந்துள்ள 'கானலுக்கு'', அம்மலையின் பழைய தடங்களின் வழியாகச் சுற்றத்துடன் வந்து தங்கியுள்ளான்.

இன்னும் விரிவாக ஆராய்ந்தால், சேரமரபினருள் ஒரு மரபினர் ஆவியர். இவ் ஆவியர் குடியில் பிறந்தவன் பதுமன். இவன் பொதினி எனப்படும் பழனி மலைப் பகுதியை ஆண்டு வந்தான்.

இவன் பெண் மக்களுள் ஒருத்தியை நெடுஞ்சேரலாதனும், மற்றொருத்தியைச் செல்வக்கடுங்கோ ஆழி ஆதனும் மணந்து கொண்டனர்.

இத்திருமணத் தொடர்பால், பழனிமலைப் பகுதிக்குச் சேரமன்னர் வருவது தங்குவது போவது உறுதியாகிறது.

அப்படி வரும் சேரர்கள் மலைக்காட்டுத் தடத்து வழியே இப்போதைய கோடைக்கானல் மலை உச்சிக்கு வந்திருப்பதை உறுதியாகக் கூறலாம்.

மலைவளம் காணல், மலை மக்களைக் கண்டு குறை யறிந்து களைதல் ஆகியவற்றுக்காகச் சேரமன்னன் கானகம் செல்வான். அப்போது மெய்க்காப்பாளர்கள், படைவீரர்கள், புலவர் பெருமக்கள், அமைச்சர்கள், கானகத்தில் வழிகாட்டிடு பவர் ஆகியோரும் உடன் செல்வார்கள்.

இப்படிச் செல்லுவதற்குச் சான்று உண்டா?

''பல்யானைச் செல்கெழு குட்டுவன், நெடும் பாரதாய னார் முன்னே செல்ல, ஆற்றல் மிக்க மன வலிமையோடு காட்டுக் குச் சென்றான்'' எனப் பதிற்றுப்பத்து மூன்றாம் பதிகம் கூறுவதை வைத்துப் பார்க்கும் போது மன்னர்கள் காடுகளுக்கும், தொடர் புடைய மலைகளுக்கும் சென்று வருவது உறுதியாகின்றது.

அம்முறையில், 'கோதை' மரபினருள் ஒருவன் கோடைக் கானலுக்கு வந்து தங்கியிருக்கக் கூடும் என உறுதியாக நம்பலாம்.

''கோதை'' மன்னன் தன் சுற்றத்துடன் வந்து தங்கி உகந்த இடமாக அக்கானல் பகுதி இருந்திருத்தல் வேண்டும்.

''புல்லின் அணுவளவு கூறுகூட இல்லாத இடத்தில் புல் தோன்றாது'' என்பது நியாயவாதம்.

தங்கியிருப்பதற்குச் சிறிதளவாவது தகுதி இருந்தால்தான் அவ்விடத்தில் தங்க இயலும்.

ஆகவே, ''கோதை'' மன்னன் வந்து தங்கி மகிழ்ந்த இட மாதலின், ''கோதைக்கானல்'' ஆயிற்று. இதுவே, வரலாற்றுக்குப் பொருந்தி வருவது.

கி.பி.1826 ஆம் ஆண்டில்தான், அமெரிக்கன் மிஷனரியைச் சார்ந்த லெப்டினன்ட் வார்டு (Lt. Ward) என்னும் பிரிட்டிஷ் சர்வேயர், சமவெளியிலிருந்து குதிரைச் சவாரி செய்து, கோடைக் கானல் மலை உச்சியைச் சென்றடைந்தார்.

அவர் அடைந்த உச்சிப்பகுதியே, 'கோதை மன்னன்' தன் பரிவாரத்துடன் தங்கியிருந்த இடம். அப்பகுதியே இன்றைய கோடைக்கானல் நகரியம்.

இவருக்குப் பிறகே அமெரிக்கர்களும் ஆங்கிலேயர்களும் வசிப்பதற்கு அவ்விடத்தைத் தேர்ந்தெடுத்தனர். குறிப்பாகக் கோடைக்காலத்தில் மிகுதியும் அவர்கள் அங்குப் போய்த் தங்கினர். மெல்ல மெல்ல நகரியமாகவும் வளர்ந்தது.

ஐரோப்பிய நாடுகளுக்கு நிகரான குளிர் அவ்விடத்தில் அமைந்திருந்தமையால், கோடைக்காலத்தில் ஐரோப்பியர் அங்குப் போய்த் தங்குவதற்கு ஏற்ற இடமாக அமைந்துவிட்டது.

ஐரோப்பியர்களுடன் நெருங்கிய இடமாகக் கோடைக் கானல் ஆனது. தமிழ்மொழி மரபு அறியாத அவர்கள், ஆங்கிலத் தில் Kodaikanal என்று எழுதியதைத் தமிழில் மொழிபெயர்க்கும் போது, 'கோடைக்கானல்' என ஆகிவிட்டது.

கோடையில் போய்த் தங்குவது என்னும் ஒரு காரணமும் சேர்ந்தமையால், கோடைக்கானல் என்று சொல்லுவதற்குப் பொருந்தாத ஒரு காரணமும் சேர்ந்தது.

கோடை என்ற சொல்லும், அது குறிக்கும் பொருளும் அப்போது ஆங்குச் சென்ற ஆங்கிலேயர் அறியார். அவர்களுக்கு விளக்கிச் சொல்வார் எவரும் ஆங்கு இலர். அப்போது ஆங்கிருந்த பழங்குடி மக்கள், தொன்று தொட்டு வழங்கி வரும் கோதைக் கானல் என்னும் பெயரையே ஆங்கிலேயர்களுக்குச் சொல்லியிருத்

தல் வேண்டும். அது கேட்ட ஆங்கிலேயர்கள், கோடைக்கானல் என்று பேசியும் எழுதியும் வர, அதுவே, ஆவணமாகிவிட்டது.

பிற கானல்களின் ஒட்டுச் சொற்கள் கானல்களோடு இயைந்து பொருளைப் புலப்படுத்துகின்றன. ஆனால், கோடை என்பது, பார்த்த மாத்திரத்தில் பொருள் பொருத்துவது போல் தோன்றினும், பொருந்தாமை அறியலாம்.

கல்——→அடி——→மலையடி. மலையடிப் பகுதி. பொருள் பொருத்தமான தூய தமிழ்ப்பெயர், திணைச் சிறப்போடு கூடிய பெயர். இதனை, ஆங்கிலத்தில் எழுதி மொழி பெயர்க்கும்போது, கல்லடி காலடி என்றாயிற்று. ஆதி சங்கரர் தோன்றியது பொருத்த மாக ஆக்கப்பட்டது.

இதே போன்றுதான், கோதைக்கானல் கோடைக்கானல் ஆனதும்.

தமிழ் மொழி மரபு அறியாதார் ஆங்கிலத்தில் எழுதியிருப் பதைப் படிக்கும் போது, பிழைபட உணரும் மயக்க நிலை ஏற்படு கிறது.

'மாக் கோதை'யை, Makkottai என எழுத, சிலர் மாக் கொட்டை, மக்கொட்டை, மாக்கோட்டை என்றெல்லாம் வாசித் தனர்.

உதகையில் கோதை நாடும், கோடநாடு, கொடநாடு என்றெல்லாம் தெரிந்தவாறு திரிந்துவிட்டது.

## 3. சேரர் வரலாற்றுக்கும் புதிய ஒளி

கோடைக்கானல் அன்று; கோதைக்கானல் என்பதே சரி என்பதற்கும் சேர மன்னர் வரலாற்றுக்கும் அண்மையில் புதிய ஒளி கிடைத்துள்ளது.

சங்க காலத்திய சேரமன்னன் - மாக்கோதை - சேர மாச் கோதை பற்றிய தடயம் ஒன்று அண்மையில் கண்டறிந்துள்ளனர்.

இச்சான்று சேரர் வரலாற்றுக்கு - தமிழக வரலாற்றுக்கு - புதிய ஒளியைத் தந்துள்ளது.

வெள்ளி முத்திரைச் சின்னமாகிய அத்தடயத்தில், சங்க காலத்திய சேரமன்னன் மாக்கோதையின் பெயர் தமிழ்-பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

"A beautiful silver seal from the Tamil Sangam Age, probably about 2000 years old, has come to light, weighing less than 2 grams and with a diameter of about 1.8 cm, it was originally meant to affix a royal grant.

On the obverse side it has a mirror image of the Chera King of the Sangam Age, called Makkottai (மாக்கோதை - சேரமாக்கோதை) facing left, and the legent Makkottai in Tamil Brahmi script placed inside a dotted circle.

It shows the king with a helmet in a feature comparable to coins of Tiherious Julious Alexander of first century AD." [43]

எனவே, கோடைக்கானல் என இப்போது வழங்கும் பகுதிக்கு, சேரமாக்கோதை மன்னன் வந்து தங்கியிருக்கக் கூடும் என்பதற்கு இது ஒரு மேலதிகச் சான்றாகிறது.

இவன் தங்கியதன் நினைவாகவே, கானலுடன் கோதை சேர்த்து, கோதைக்கானல் என வழங்கலாயிற்று. எனவே, கோதைக் கானல் என்பதே வரலாறு சார்ந்த பெயராகும்.

## சுள்ளியாறு

சேரநாட்டில் பாயும் ஆறுகளுள் ஒன்று 'பேரியாறு' என்பது. ''வண்டன்'' என்னும் குறுநில மன்னன் ஒருவன் பெயரால் அமைந்த யாறு ''வண்டன் பேரியாறு''.

இவ்வரலாற்றுண்மை புரியாமையால் வண்டன் பேரியாறு, ''வண்டிப் பெரியார்'' ஆயிற்று என்பார் பேராசிரியர் ஔவை துரைசாமிப்பிள்ளை.

என்ன விந்தை! 'வண்டிக்கும்' அம்மலைப் பகுதிக்கும் ஆற்றுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

இப்பேரியாற்றின் கிளையாறு ''சுள்ளியாறு''.

இச்சுள்ளியாறு போன்று, கீழ்ப்பழனிமலைத் தொடரில் 4500 அடி உயரத்தில், பண்ணைக்காடு ஊருக்கு வடக்கே குறுக்கிடும் மலைமேல் ஒரு சுள்ளியாறு பாய்கிறது. காட்டாறுதான். பேச்சு வழக்கில் சுள்ளையாறு என்கின்றனர். அதற்கு ஏற்றாற் போல், அவ்வாற்றின் கரையில் சுள்ளை⟶சுடலை⟶ சுடுகாடும் அமைந்துள்ளது.

கேரளத்துச் சபரி மலையில், பம்பையாறு பாய்வதைப் போன்று, மேல் பழனி மலையிலும் ''பாம்பாறு'' என்னும் பெயரில் ஆறும், ஆற்றில் சிறு அருவியும் உள்ளன. 'பம்பை' ஆற்றின் சிறு அருவியும் உள்ளன. 'பம்பை' ஆற்றின் பெயர் பாம்பாறு என மாறிவிட்டது. ''சூரல் பம்பிய சிறுகான்யாறு'' நினைவுக்கு வருகிறது.

## தாண்டிக்குடி

கீழ்ப் பழனிமலைத் தொடரில், கீழேயிருந்து கோடைக் கானல் செல்லும் முதன்மைச் சாலையில் (Main Road) 4500 அடி உயரத்தில் பண்ணைக்காடு என்னும் சிற்றூர் சற்று உள்ளடங்கியுள்ளது. இவ்வூருக்கு வடதிசையில் 6 கிமீ தொலைவில் தாண்டிக் குடி என்னும் சிற்றூர் உள்ளது.

ஐயம்பாளையம் என்னும் மலையடிவார ஊர், சமவெளியில் கிழக்குத் திசையில் உள்ளது. இவ்வூர் வழியாகவும் தாண்டிக் குடி செல்லலாம். ஒற்றைப் பேருந்துச் சாலை வசதி உள்ளது.

இச்சாலை அமைப்பதற்கு முன், பண்ணைக் காடு வழியாக, மலையடுக்கைத் தாண்டிவந்துதான் மக்கள் இங்கே குடியமர்ந்தனர்.

மலையடுக்கைத் தாண்டி வந்து குடியமர்ந்தமையால், ''தாண்டிக்குடி'' என்னும் பெயர் வந்தது.

''திருமகள் இருக்கை செவ்வனம் கழிந்து'' எனச் சிலப்பதி காரம் கூறுகிறது.

'கழிந்து' என்பதற்குத் தாண்டி எனப்பொருள் கொள்ளு கின்றார் பேராசிரியர் ஜி. நாச்சிமுத்து.

எனவே, சேரன் சிலம்பில் கூறுவது, இப்பழனிமலைத் தொடர் ஊருக்கும் பொருந்த அமைகிறது.

தாண்டிக்குடியில், சென்ற நூற்றாண்டில் கட்டப்பட்ட முருகன் கோயில் அமைந்துள்ளது. பழனியைப் போன்றே மேற்கு நோக்கிய கோயில். இங்கே இருந்து முருகன் பழனிக்குத் தாண்டிச் சென்றமையால், தாண்டிக்குடி என்னும் பெயர் இவ்வூருக்கு வந்ததாகச் சொல்லுகிறார்கள். இது நம்பிக்கையின் அடிப்படை யாகும்.

கோயில் அருகே மலைச்சாரலில் பாறையில், வேரின் இலைப் பகுதி மட்டும் வெளியே தெரிகிறது. நீர் கசிந்து கொண்டி ருக்கிறது.

## குறவர்

பழனி மலைத் தொடர்வாழ் பழங்குடியினருள் குறவரும் ஓரினத்தார் ஆவார்.

பூங்குறவர், குன்றக் குறவர் என்னும் பிரிவினராக உள்ள னர். கணியன் பூங்குன்றனார் என்னும் நல்லிடைப் புலமை நல்லார் நம் நினைவுக்கு வருகின்றார்.

பழைய திணையொழுக்கம் சார்ந்த குன்றக்குறவர் எஞ்சிய வருள் இவர்கள் போலும்.

## தேவராடி

குறவர் இனத்தார் தம் பூசாரியைத் ''தேவராடி'' என்கின்ற னர். சிலர் ''தேரடி'' என்கின்றனர். இது மருவிய மொழி.

'மதிய நிலா' நாளான முழுநிலவு நாளன்று குறவர் இனத்தார் எல்லாரும் இரவு நேரத்தில், வெட்ட வெளியில் ஒன்றாக அமர்ந்து சாமி கும்பிடுவார்கள். அப்போது அந்தப் பூசாரிக்கு அருள் வந்து அருள்வாக்கு வழங்குவார்.

அவர்கள் 'சாமி' எனச் சுட்டிக் காட்டியது, சாய்ந்து முறிந்த பின் எஞ்சியிருக்கும் அடிப்பகுதி போன்றதொரு மரப்பகுதி. இம் மரப் பகுதி தானாகச் சாய்ந்த மரத்தின் அடிமரப் பகுதி.

அந்த அடி மரப் பகுதியை 'வெங்க'' என்று சொல்லுகின்றனர். வேங்கை மரத்தின் அடிப்பகுதியாக இருக்கும். அதனைத் தெய்வமாகப் போற்றி வழிபடுகின்றனர்.

காட்டுப் பூக்களைக் கொத்தாகவும், காட்டுக் கொடியில் இணைத்தும் அந்த அடி மரப்பகுதியில் சுற்றியிருப்பார்கள்.

அந்த மரப்பகுதி 'கந்தழி'யை நினைவுபடுத்தியது.

வேங்கை மரத்தின் அடியில் நின்று நினைத்தால், நினைக்கின்ற செயல்கள் யாவும் நிறைவேறும் எனவும், இம்மரத்தைக் கடவுளாகக் கருதி வழிபட்டார்கள் எனவும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

''பழங்கடன் உற்ற முழங்குவாய்ச் சாலினி'' - சாலினி -தேவராட்டி - சிலம்பு கூறுவது நினைக்கத்தக்கது.

## கையெடுப்பு

இக்குறவர் இனத்தார் தமது தலைக்குமேல் இரண்டு கரங்களையும் குவித்து வணங்குகின்றனர். இவ்வாறு வணங்குவதைக் ''கையெடுப்பு'' என்கின்றனர். அவ்வாறு வணங்கிக் காட்டினர்.

'கையெடுப்பு' என்பது ''கையெடுத்து ஓச்சி'' எனச் சேரன் இளவல் சிலம்பில் கூறுவது போன்று உள்ளது.

## மன்றில்

இம்மலைத் தொடர் பழங்குடி இன மக்களுள் ''குன்னுவர்''களும் ஒரு பிரிவினர்.

''உதகை, குன்னூர் என்னும் இடத்திலிருந்து வந்தவர்கள் நாங்கள்'' என இவர்கள் சொல்லுகின்றனர். அதனால், 'குன்னுவர்' ஆனார்கள் போலும். குன்னூர்⟶குன்றூர்.

வாய்மை தவறாதவர்கள் குன்னுவர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுபவர்கள்.

அவ்வாறு காப்பாற்றுவதாக, ''மண்டில்'' வைத்துச்சத்தியம் செய்து கொடுப்போம்'' என்கின்றனர்.

மண்டில்⟶மன்றில்⟶மன்றம்.

மன்றம் என்னும் ஊர்ப் பொதுமன்றத்தை மண்டில் நினைவுபடுத்துகிறது.

''இடுமுள்வேலி எயினர் கூட்டுண்ணும் நடுவூர் மன்றத்து அடிபெயர்த் தாடி'' என்பது சிலப்பதிகாரம்.

இக்குன்னுவர்களையும் தொன்மையையும், மொழி வழக்கையும் இவர்கள் பேச்சில் அறியலாம்.

இவர்கள் பேச்சிலும், வாழ்வியல் முறைகளிலும் சேரநாட்டின் தாக்கத்தைக் காண முடிகிறது.

முற்காலத்தில் ஊர் நடுவே, ஊர் பொதுமன்றம் அமைந்திருக்கும். ஆலமரம், மகிழமரம், புன்னைமரம் இம்மரங்களுள் ஒன்றும் மன்றத்தில் நிற்கும். மன்றத்தில் மக்கள் தங்களின் வழக்குகளைத் தீர்க்கும்போது, இம்மரங்களுள் ஒன்று சாட்சியாக அமையும்.

இம்மரங்களுள் ஒன்றைச் சாட்சியாக வைத்து மன்றத்தில் தீர்ப்பு வழங்குவார்கள்.

''தொன்றுறை கடவுள் சேர்ந்த பராஅரை மன்றப் பெண்ணை...'' பாடல் (நற்றிணை, பா. 303) அடியால் மன்றத்தில் சாட்சியாகப் பனைமரம் நின்றமையும், அம்மரத்தில் தெய்வம் உறைந்தமையும் தெரியவருகின்றன.

இங்கே - இம்மன்றத்தில் - உண்மைக்குப் புறம்பாகப் பேசினால், இந்த மன்றத்து மரமே அதைக் கேட்டுத் துயரப்படு மாம்.

''மன்றத்துப் புன்னை போல மரம்படு துயர மெய்தி'' என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

''வன்னி மரமும் மடைப் பள்ளியும் சான்றாக முன்னிறுத் திக் காட்டிய மொய் குழலாள்'' (சிலப்பதிகாரம்) - இங்கே வன்னி மரம் சாட்சியாக வருகிறது.

திருவொற்றியூர்த் திருக்கோயிலில், மகிழமரத்தடியில் சுந்தரர் சங்கிலியாருக்குச் சத்தியம் செய்து கொடுத்தார்.

இச்சான்றுகள் இங்கே குறிப்பிடத் தக்கவை.

ஊர்ப்பொது மன்றத்தில் அமைந்துள்ள பழம் பெரும் ஆல மரத்தைத் ''தொன் மூதாலம்'' எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடு கின்றன.

இம்மரங்களில் தெய்வம் உறைவதாகப் பழந்தமிழ் மக்கள் நம்பினர்.

மரத்தைத் தெய்வமாகப் போற்றி வழிபட்ட பழந்தமிழரின் இயற்கை வழிபாட்டு எச்சமாக இவ்வழிபாடு அமைந்துள்ளதை இன்றும் காணலாம்.

கானகமாகிய பல்கலைக் கழகத்தில் பயிற்சி பெற்ற இம் மக்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்வு வாழ்கிறார்கள்.

பொதுவாக, மக்களின் நம்பிக்கைகள் மரங்களோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. பஞ்சாப் மாநிலத்தில்''போர்ட்ரி'' எனப்படும் மரத்தை வீட்டில் வளர்ப்பதைத் தவிர்க்கிறார்கள். காரணம், குடும்பத்துக்குள் கலகம் அம்மரவளர்ப்பால் ஏற்படும் என நம்புகின்றனர்.[44]

("The popular beliefs connected with trees have also been documented. For instance, in Punjab people avoid planting Bor tree (Ziziphus maritima) near houses because it is believed that it cause quaral in the family.")

வடக்கே பஞ்சாப் மாநிலத்தில் குறிப்பிட்ட அம்மரம் குடும்பத்திற்குள் பூசலை உருவாக்கும் என நம்பினர்.

தமிழகத்தில் தொன்மூதாலம் முதலிய மரங்கள் குடும்பச் சிக்கலைத் தீர்த்து அமைதியை ஏற்படுத்தின. இதன் மூலம் சமுதாய அமைதியும், ஒழுக்கமும் பேணப்பட்டன.

தென்னிந்தியாவில் புனிதத் தலங்கள், கிராமங்கள் தோறும் தெய்வமாகி நிற்கும் இறந்தோரின் சமாதிகள், நீருடைத் தெய்வங்கள், தெய்வத் தன்மை பெற்ற புனித மரங்கள் ஆகியவை வாழ்வின் தாழ்வுகளை நீக்கி நாளும் நலம் பயக்கும் என நம்பினர்.[45]

("There are few places in the world where landscape and divinity are more closely linked than in South India.

In the sacred topography of the deep south, every village is believed to be host to a numberless pantheon 50 local spirits and godlings, tree sprites and water nymphs who are said to guard and regulate the ebb and flow of daily life.")

இவற்றையெல்லாம் பார்க்கும் போதும், ''நின் காடே கடவுள் மேன'' எனச் சேர நாட்டைச் சங்க இலக்கியம் கூறுவதிலிருந்தும் (பதிற்றுப்பத்து), பண்டைச் சமூக மக்களின் மனநிலை, சமூக அமைப்பு, நம்பிக்கைகள் ஆகியவையும் புலனாகின்றன.

பழந்தமிழரின் இயற்கை மரங்கள் முதன்மை இடம் பெற்றிருந்தும், இந்தியாவிலும் உலகின் பல பகுதிகளிலும் இவ் இயற்கை வழிபாட்டுமுறை, நம்பிக்கைகள் பரவி இருந்தன என்பதும் தெரிய வருகின்றன.

## புலையர்கள்

கீழ்ப்பழனிமலைப் பகுதியில் புலையர்கள் மிகுதியும் வசித்தனர். இப்போது மிகச்சிலரே வாழ்கின்றனர்.

மேல் பழனி மலைப் பகுதியிலும் குறைந்த எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

படிக்கக் கூடிய புலையர் இனப்பிள்ளைகளுக்கு அரசு உண்டுறை விடுதி அமைத்துக் கொடுத்து அவர்கள் படிப்பதற்கு உதவி செய்கிறது.

புலையர் இனத்தார் சமவெளிப்பகுதியிலிருந்து குடியேறியவர்களாக இருக்கலாம் என்னும் கருத்தும் உண்டு. ஏனெனில் புலையர் இனத்தார் சமவெளிப் பகுதியிலும் வாழ்கிறார்கள்.

## குடியிருப்பு

இம்மலையின் பிற பழங்குடியினரைப் போலவே இலை, தழை, காட்டுமரக்குச்சி, போதைப்புல், அஞ்சு முகப்புல் கொண்டு தங்கள் குடிசைகளை அமைத்துள்ளனர். குளிருக்கு அடக்கமாக, கதகதப்பாக உள்ளது. வாசல் சிறியதாக உள்ளது. மூங்கில் படல்களைக் கொண்டு வாசலை அடைக்கின்றனர்.

இவர்கள் தங்கள் குடில்களில் விளக்கு ஏற்றுவதில்லை. மலைத்தோட்ட முதலாளிகளின் அடிமைகள் என்பதற்காக விளக்கு ஏற்றக்கூடாது என்னும் கண்டிப்பு இருப்பதாகத் தெரிகிறது. அவ்வுரிமை அவர்களுக்கு மறுக்கப்படுகிறது.

இது கேரளத்து ''மார்ச்சீலை'' வழக்கத்தை ஒத்திருக்கிறது.

புலையர்கள் காட்டு மூலிகைகளின் மருத்துவ குணத்தை நன்கு அறிந்தவர்கள். கீழ்ப் பழனிமலைப் புலையர்கள் ''மந்திர தந்திரங்களில்'' வல்லவர்கள்.

இவ் ஆற்றலால் மழையைக்கூட வரவழைத்து விடுவார்களாம்.

மலைவாழ் மக்கள் அனைவருமே மழை வேண்டி வழிபடுவார்கள்.

மலையோடு தொடர்புடைய சிலப்பதிகாரத்தில், மழைக்குக் காரணமான ஞாயிற்றையும், கூடவே மாமழையையும் போற்றியிருப்பது இங்கு நினைக்கத்தகும்.

கீழ்ப் பழனி மலைப் புலையர்களின் வழிபடு முதன்மைக் கடவுள் கரகநாச்சி என்னும் தெய்வம். இத்தெய்வத்துக்குப் புலையர் இனத்தவர் மட்டுமே பூசாரியாவார்.

இத்தெய்வக்கோயில் என்பது தனித்திருக்கும் தாவளம் குடில்.

கேரளத் திருவனந்தபுரம் பத்மனாபசுவாமி கோயிலில், புலையர் இனத்தவர் கொண்டுவரும் திருவிளக்கே, கருவறையில் முதன் முதல் ஏற்றப்படும் ஒளிவிளக்காகும் என்பது குறிப்பிடத்தக்கது.

நாகம்மா என்னும் பெயரை இவர்கள் மிகுதியும் இட்டுள்ளனர். கேரளத்துப் பாம்புக் காவும், பாம்பு வழிபாடும் இவ்விடத்து ஒப்புநோக்கத்தக்கவை. ஏனெனில் நாகம்மா என்ற பெயர் மிகுதியும் இவர்கள் இட்டுக்கொள்வது இவ்வழிபாட்டுக்குப் பொருத்தமாக அமைகிறது.

மேல் பழனிமலைப் புலையர்களுக்கு வழிபடு முதன்மைக் கடவுள் குறிஞ்சிக் கடவுள் முருகனே.

எங்ஙனமேனும் மலைவாழ் மக்கள் அனைவரின் பொது வான வழிபாடு தெய்வம் செவ்வேளே ஆவான்.

## வில் விருந்து

புலையர்கள் எட்டு நாட்களுக்கு ஆடல் பாடல் விழா நடத்துகின்றனர். இவ்விழாவை 'வில் விருந்து' என்கின்றனர்.

இந்த வில் விருந்து, கேரளத்தில் 'ஓணவில்' செய்து நடத்தும் ஓணவிழாவைத் தொடர்புபடுத்துகிறது.

## மதிய நிலா ஆட்டம்

புலையர்கள் முழு நிலவு நாளை 'மதிய நிலா' என்கின்ற னர். இந்நாளில், இரவில் வட்டமாகப் பெண்கள் கூடி நின்று, இடுப்பில் கைவைத்து ஆடுவார்கள்.

இந்த ஆட்டத்தைக் "குன்னாட்டம்" என்று சொல்லுகின்ற னர். குன்னு⟶குன்று. எனவே, குன்றாட்டம். கேரளத்தில் மாரிக் குன்னு⟶மாரிக்குன்று. பொன் குன்னம்⟶ பொற்குன்றம்.

இம்மலைப் புலையர்கள் பாடுகின்ற பாடல் இசைக்கும், எழுப்புகின்ற மேள ஓசைக்கும் ஏற்றவாறு 'குன்னாட்டம்' அமை கிறது.

"நல்ல புலையா நீ. நடதாளம் ஊதுடா!" எனப் பாடி ஆடு கின்றனர்.

தாளம் என்று இராகத்தைக் குறிப்பிடுகின்றனர். நட⟶ நடை⟶ Rhythm. ஒழுங்கமைவுடன் கூடிய இராகத்தைக் கொண்ட பாடல்.

குறிஞ்சி நிலத்துக்குரியதுபடி, பறை முதலிய தோற்கருவி களை முழக்குகின்றனர்.

## வீழ் குழல்

புலையர்கள் தாங்கள் ஆடும் குன்னாட்டத்தின்போது, புல்லாங்குழல் போன்று ஒலி எழுப்பும் இசைக் கருவியை இசைக் கின்றனர்.

இந்த இசைக் கருவியின் பெயரைக் கேட்டவுடன் நமக்கு வியப்பு ஏற்படுகிறது.

''வீழி குழல்'' என்கின்றனர். வீழி - a straggling shrub. நாணல் புல்லில் செய்த சீவாளி போன்றிருக்கிறது. நாதசுர சீவாளி போன்று இருப்பதை, மிகச்சிறிய வடிவில் காணப்படும் நாகசுரம் போன்ற 'வீழிகுழல்' இசைக்கருவியில் பொருத்தி இசைக்கின்ற னர். 'ஷெனாய்' போன்ற இசைக்கருவி ஒலி போன்றும், வேங் குழல் ஒலி போன்றும் மாறி மாறி இவ் இசைக்கருவி ஒலி எழுப்பு கிறது.

இந்தக் கருவியில் சுரம் எழுப்பும் துளைகள் ஐந்து மட் டுமே அமைத்துள்ளனர். ஏழு துளைகள் பயிற்சி பெற்றவர்கள் இசைக்கின்றனர். இப்போதும் ஒரு சிலரே இசைப்பதற்கு உள்ள னர்.

எனினும், இலக்கிய வளம் பொதிந்த இசைக் கருவிப் பெயர் ஒன்று, அப்பழங்குடியினரின் நாவிலிருந்து வருகிறது.

சங்க நூல் பரிபாடலில் வேய்ங்குழல் பற்றிச் சொல்லப்படு கிறது. ஐந்து துளைகளை உடைய ''கண்ணார்குழல்'' ஆகிய கணுக்களை உடைய மூங்கில் குழல் சொல்லப்படுகிறது.

ஐந்து துளைகளை உடைய வேய்ங்குழலே முதலில் இருந்தது. இக்குழலை இசைத்தால், 'மோகனராகத்துக்குரிய சுரம்' எழும். இச்செய்தியை இசை இலக்கண வல்லார் கூறுகின்றனர்.

ஏழு துளைகள் பிற்காலத்தில் ஏற்பட்டன.

நீளம் மிகுந்த குழலில் சுருதி குறைவாக (கீழ்ஸ்தாயி) எழும். நீளம் குறைந்த குழலில் மிகுந்த சுருதி (உச்ச ஸ்தாயி) எழும்.

குமரி மாவட்டம் பேச்சிப்பாறை மலைக்காடுகளில் தான் சிறந்த வேய்ங்குழல் செய்வதற்கு ஏற்ற உயர்தர மூங்கில் கிடைக்கிறது. இம்மூங்கிலின் சிறப்பை World Bamboo எனக் குறிப்பிட்டுக் கூறுகின்றனர்.

கேரளத்தில் 'அடிமலை' (அடிமாலி) என்னும் இடத்திலும் இவ்வகை மூங்கில் கிடைக்கிறது.

இச்செய்தியை வேய்ங்குழல் செய்வதில் வல்லார் கூறுகின்றனர்.

இம்மலை மக்கள் 'வீழிகுழல்' எனச் சொல்லும் போதே, ''மாசில் மிழலையீர்!'', ''வீழிமிழலையீர்!'' என்னும் திருஞான சம்பந்தரின் தேவாரப் பதிகத் தொடர்களே நமது நினைவுக்கு வருகின்றன.

மிழலை ⟶ மழலை, 'வீழிகுழல்' போன்ற, மழலைக் குரல் இனிமை உடையவர் திருவீழி மிழலையில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்.

மூன்றரை வயது வரையிலும் குழந்தைகள் பேச்சு மழலை மொழியில் இருக்கும். சம்பந்தப் பெருமான் மூன்று வயதில் வீழிமிழலைக் குரலில் பாடினார் போலும்!

எனவே, தாம் 'ஆளுடைப் பிள்ளை'யாதலின் சிவபெருமானையும், 'வீழிமிலையீர்!'' எனக் காதலால் விளித்துப் பாடினார் என எண்ணுவதற்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.

'மிழலையீர்' என 'வீழி' இன்றி, சம்பந்தத்தைவிட வயது மிக்க 'வன்றொண்டர்' சுந்தரர் பாடியதும் இங்கு ஒப்பிடத்தக்கது.

வீழி குழல் போன்ற நாதத்தை உடையவன் வீழிநாதன்-சிவன்.

தன் வீழியை மலராக்கி அக்கண்மலரால் சிவனை அருச்சித்தான் மால் எனக்கூறும் மரபும் உண்டு.

அப்பனின் வீழி குழலுக்கு இணையாக, திருக்குற்றாலத் தலத்து மேவிய அம்மை பெயர் குழல்வாய்மொழி அம்மை.

திருக்குற்றாலப் பதிகத்திலும் திணைச் சிறப்பினை இணைத்தே பாடுபடுகின்றார் சம்பந்தப் பெருமான்.

சுற்றுச் சூழல் திணைக் கோட்பாடுகளுக்குப் பொருந்தும் விதத்தில், திருக்கோயில்களில் தூய தமிழ்ப் பெயர்களை அமைத்த னர். கால மாற்றத்தால் வடமொழிப் பெயர்கள் நுழைந்து விட்டன!

**''கனைத்த மேதி காணாது**
**ஆயன் கைம்மேல் குழலூத**
**அனைத்தும் சென்று திரளும்**
**அண்ணா மலையாரே''**

(சம்பந்தர்-திருவண்ணாமலைப் பதிகம்)

ஆயன் குழலூதும் ஒலி வேறுபாட்டைக் கேட்டு, ஆங் காங்கே மேய்ந்து கொண்டிருந்த எருமைகள் மாலையில் திரண்டு அவன் அருகில் வருகின்றன.

வேறுபட்ட குழல் ஒலி கேட்டுத் திரும்பி வருகின்றன என்பதால், மேயச் செல்வதற்கு வேறு விதமாகக் குழல் ஒலி எழுப்புவார் போலும்!

இதற்கு ஒப்பாக, மதுராபுரியில் வாழ்ந்த கண்ணபிரானின் வேய்ங்குழல் ஒலி, ஆநிரை மேயச் செய்வதற்கு ஒருவிதமாகவும், திரும்பிவர வேறு ஒருவிதமாகவும் ஒலிக்கப்படும் எனப் பாக வதம் கூறுகிறது.

ஆனாய நாயனார் குழலூதும் சிறப்பைப் பெரிய புராணம் தமிழ் இசை மரபுக்கு ஏற்ற பாங்கில் விரித்துக் கூறுகிறது.

வேய்ங்குழல் தோன்றிய காலப்பழைமையைக் காட்ட கண்ணன் கையில் குழலை அமைத்தனர்.

இங்கேயும் திணைச் ிறப்புக்கு ஏற்றவாறு கடவுளர் கரங்களில் இசைக் கருவிகளை அமைத்தனர்.

இப்புலையர் இனத்தார் முழக்கிய குறிஞ்சி நிலத்துக் கிணை என்னும் தோற்கருவிதான் சிலமாற்றங்களுடன் இன்று, கேரளத்தில் செண்டை வாத்தியமாக உருமாறி விட்டது என இசை மரபு வல்லார் கூறுகின்றனர்.

பழனிமலைத் தொடரில் புலையர் ஆடுகின்ற இவ் ஆட்டம், ''கொண்டாட்டப்பாட்டு'' என்னும் கல்வெட்டுத் தொடருக்குப் பொருந்தவும்,

''உண்டாட்டு'' (Feasting and Dancing) எனத் தொல்காப்பியர் கூறும் புறத்துறைக்குப் பொருந்தவும் வருகிறது.

இம்மதிய நிலா ஆட்டத்தோடு, கேரளத்தில் ஆடப்படும் ''கூடியாட்டம்'' என்னும் ஆட்ட விழாவை இங்கு ஒப்பிடலாம்.

வழக்கமான மரபுசார் நெய்விளக்கொளியில் ஆன்மீகம் தொடர்பான கலாச்சார நிகழ்ச்சிகளைக் '' கூடியாட்டம்'' என்னும் பெயரில் கேரளாவில் நிகழ்த்துகின்றனர். இது இங்குக் குறிப்பிடத் தக்கது.[46]

("The light shed by them and the traditional oil lamp provide ethereal ambience quite conducive to performances like 'Koodiyattam'. The absence of a sound system the usual spoilsport in cultural performance.")

''குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே'' என நக்கீரர், குன்று தோறும் ஆடி அருள் வழங்கும் முருகப் பெருமானைக் குறிப்பிடுகின்றார். திணைக் கடவுள் சேயோன் மலையில் ஆடுகின்றான்.

## மன்னான்

பழனி மலைத் தொடரில் பல இடங்களில், 'மன்னான்' இனத்தவர் வாழ்கின்றனர். கோடைக்கானல் மலைப்பகுதிகளிலும் வாழ்கின்றனர்.

மன்னான்களின் தலைவருக்குக் ''காணிக்காரர்'' என்பது பெயர்.

மன்னான்களில், ஆண்கள் வேட்டியைத்தார்ப்பாய்ச்சிக் கட்டியுள்ளனர். பெண்கள் இடுப்பில் ஒரு முண்டு உடுத்தி, மேலே ரவிக்கை அணிந்துள்ளனர். மலையாளப் பெண்களைப் போன்று உடை உடுத்தியுள்ளனர்.

வீட்டு விலக்கு சமயத்திலும் மகப்பேறெய்தி அத்தீட்டு நீங்குகிற திங்கள் வரையிலும் தனியாக ஒரு குடிலில் பெண்கள் தங்குகின்றனர். அந்த வீட்டுக்கு 'முழுக்கு வீடு' என்பது பெயர்.

வாலாமை நாள் நீங்கிய பின்னர், 'பட்டு நீரில்' (புதுநீர்) முழுகிய பின், தாங்கள் எப்போதும் குடியிருக்கும் குடிலுக்கு வந்துவிடுவர்.

இவ்விடத்துச் சங்க இலக்கியம் கூறும் ''கலம் தொடா மகளிர்'' நம் நினைவுக்கு வரும்.

மன்னான்கள் மலையாளம் கலந்த தமிழில் பேசுகின்றனர். ''வனம் சூதிச்சு''க் (சோதிச்சிட்டு-சோதித்து) கொடுப்பது ஆண்களின் வேலை.

வேற்று ஆள்கள் வனத்துக்குள் வந்து வனத்தை அழித்து விடாதபடி இம்மக்கள் நாள்தோறும் காடுகளைச் சோதித்துக் கொள்வார்கள்.

தைத்திங்களில் மங்கா [illegible] ) [illegible]குடும் பிடுவார்கள். வன தேவதைகளுக்குப பொங்கலிட்டுப் படைத்து வணங்குவார்கள்.

## கார்த்திகைத் திங்கள்

பழங்குடி இனத்தவரான மன்னான்களுக்குக் கார்த்திகைத் திங்கள்தான் ஆண்டு நிறைவுத் திங்கள் ஆகும்.

இப்போதைய நிலையில் இவர்களைப் பார்க்கும் போது, கார்த்திகைத் திங்களை ஆண்டு நிறைவுத் திங்களாகக் கொள்ளும், ஆண்டுக் காலக் கணக்கீட்டு முறை இவர்களுக்கு எப்படித் தெரியும் என்பது வியப்பாக இருக்கிறது.

அதைப் பற்றிச் சிந்திக்கலாம்.

1. கேரளத்தில், கார்த்திகை முதல் நாள், சபரிமலை ஐயப்பனுக்கு நேர்ந்து, மாலையணிந்து சென்று வழிபட்டு வரும் வழக்கம் இன்று உள்ளது.

இம்மரபு, ஏனைய இடங்களிலும் சபரிமலை செல்லுவோரால் கடைப்பிடிக்கப்படுகிறது.

2. கார்த்திகைத் திருநாள் திருவோணத் திருநாள், ஆதி தைப்பெருவிழா முதலியன கொண்டாடப் பெற்றமையைப் பதிற்றுப்பத்து நூலுள் காண்கிறோம். ஏனைய சங்க நூல்களிலும் இக்குறிப்பைக் காணலாம்.

3. அக்காலச் சேர மன்னர்களின் பெயர்களோடு, பிறந்த நட்சத்திரப் பெயர்களை இணைத்துச் சொல்லும் பிற்கால மரபு இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

4. இவ்வழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டது. இது இன்று வரை இந்த அரச மரபில் தொடர்ந்து வருகிறது.

5. அ. 'மலை மன்னான்' இனத்தார், மலைவாழ் மக்கள். இவர்களின் வழிபடு முதன்மைக் கடவுள் முருகன்.

ஆ. குன்றக் கடவுள் முருகப் பெருமான்.

இ. முருகனுக்குரிமைப்படுத்தப்பட்டது கார்த்திகை நட்சத்திரம்.

இத்தொடர்பு பற்றிக் கார்த்திகைத் திங்களை மன்னான்கள் ஆண்டு நிறைவுத் திங்களாகக் கொண்டார்களா?

6. எனினும், இவர்கள், இம்மரபை வேறு எங்கோ ஓரிடத்திலிருந்து, தொடர்பு காரணமாகப் பெற்றிருத்தல் வேண்டும்.

7. அப்படிக் கொள்ளுவதற்கு அடிப்படையாக அமைந்த காரணம் எது என்பது ஆராய வேண்டிய ஒன்று.

ஆயினும், நமது கவனத்துக்கு வருவது ஒன்று உண்டு, அது:

கொல்லம் ஆண்டு கேரளத்தில் நடைமுறைக்கு வருவதற்கு முன்னால், கார்த்திகைத் திங்களை ஆண்டின் இறுதித் திங்களாகவும், மார்கழித் திங்களை ஆண்டின் தொடக்கமாகவும் கொண்ட ஆண்டுக் காலக் கணக்கீட்டு முறை சேரநாட்டில் இருந்திருத்தல் வேண்டும்.

அத்தொடர்பால்தான், சேரநாட்டோடு தொடர்புடைய மலைமன்னான்களும் இந்தக் காலக் கணக்கீட்டு முறையை வழக்கில் கொண்டிருக்கின்றனர்.

ஆயினும், சேர நாட்டில், கார்த்திகைத் திங்களை ஆண்டின் இறுதித் திங்களாகக் கொள்ளக் காரணம் என்ன?

இது பற்றிய மேலும் ஒரு சிந்தனை:

1. மேற்கு மலைத் தொடர் வெவ்வேறு மாவட்டங்களிலும், வெவ்வேறு இடங்களிலும் நீண்டு தொடர்ந்து வரும்போது, இடத்துக்கு ஏற்றவாறு பெயர்களைப் பெற்று, குமரி மாவட்டம் முடியவருகிறது.

2. நெல்லை - குமரி மாவட்ட எல்லையை இணைக்கும் இடத்தில் இம்மலைத் தொடரில், ''ஆரல்வாய்மொழிக் கண வாய்'' அமைந்துள்ளது.

'ஆரல்வாய் மொழி' என்பது எப்படி வந்தது? என்பது சிந் திக்க வேண்டிய ஒன்று.

''ஆரைக்கீரை'' என்னும் ஒருவகைக்கீரை, அக்கணவாய்ப் பகுதியில் படர்ந்துள்ளது. 'ஆரை' என்பதுதான் 'ஆரல்' என்றாகி, ஆரல்வாய் மொழிக் கணவாய் எனப்பெயர் வந்ததாக, அவ்விடத் தில் வாழ்பவர்கள் சொல்லுகிறார்கள் (ஆரல்-ஆரை). இவ்வாறு காரணம் கூறுவது பொருந்து மாறில்லை.

3. பிறகு, எது சரியான பெயராக இருந்திருக்கும்?

கார்த்திகை விண்மீனின் பழந்தமிழ்ப் பெயர் 'ஆரல்' என்பது.

ஆரல் என்ற விண்மீனின் (நட்சத்திரம்) பெயரே, இம் மலைக் கணவாய்க்குப் பெயராக அமைந்தது.

4. ஆரல் என்னும் விண்மீன் பெயர் அமைந்து வரக் காரணம் என்ன என்னும் வினா எழும்.

5. இவ்வினாவுக்கு விடை:

சேர மன்னன் பாலை பாடிய பெருங்கடுங்கோ, தனக்கு உரிமையான சேரநாட்டு மலை உச்சியில், கார்த்திகைத் திங்களில், கார்த்திகை நட்சத்திரத்தில் (ஆரல் விண்மீன்) பேரொளிச் சுடர் கொளுத்தப்படுவதை அகநானூறு சங்கப் பாடலில் சொல்லுகின் றான்.

(கார்த்திகைத் திங்களின் பழந்தமிழ்ப் பெயர் ''நளி'' என் பது. இச்சொல்லுக்கு இருள், குளிர்ச்சி என்னும் பொருளும் உண்டு.)

6. இவ்வரசன் சேரநாட்டு மன்னன் நல்லிசைப் புலவன். எனவே, தனது நாட்டில் திருக்கார்த்திகைப் பெருவிழாக் கொண்டா டப்படுவதையும்,

தனது நாட்டு முடி மலையில், கார்த்திகைப் பேரொளி கொளுத்தப்படுவதையும் சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லு கின்றான்; செந்தீயாய்ப் பூத்துக் குலுங்கும் கோங்க மலர்க் கொத்துக் களோடு ஒப்பிட்டுச் சொல்லுகின்றான் (நற்றிணை).

இவ்விடத்து, நமது சிந்தனைக்குரிய ஒன்று:

7. தனது நாட்டில், தனக்குப் பன்னெடுங் காலத்துக்கு முன்பே, கார்த்திகைப் பெருந்திருவிழாத் தொடர்ச்சியாகக் கொண் டாடப்படுவதைத்தான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லுகின்றானே யன்றி, 'என்னால் கார்த்திகைப் பெருவிழா முதன் முதலாகத் தொடங்கப்படுகிறது' என அம்மன்னன் சொல்லவில்லை.

ஆகவே, இம்மன்னனுக்கு முன்பே தொன்றுதொட்டே, சேரநாட்டில் கார்த்திகைத் திருவிழாக் கொண்டாடப்பட்டு வர வேண்டும் என்பது தெளிவு.

இவ்வாறு தொல் பழங்காலம் முதலே கொண்டாடப் பட்டு வரும் கார்த்திகைத் திருவிழா தொடக்க காலத்தில் 'ஆரல் விழா' என்றே வழங்கி இருத்தல் வேண்டும்.

அவ் ஆரல் விழா கால, கலாச்சார, பண்பாட்டு மாற்றங் களால் கார்த்திகை விழாவாகப் பின்னர்ப் பெயர் மாறியது.

இந்தப் பெயர் மாற்றம் இத்துடன் நிற்கவில்லை. தற் போது, கார்த்திகைச் சோதி எனவும், தைத்திங்கள் மகர சோதி என வும் மாற்றம் பெறலாயிற்று.

8. 'ஆரல் விழா' என்னும் திருவிழாப் பெயர் வழக்கில் உள்ள சமயத்தில் தான், 'ஆரல் வாய்பொழில் என வழங்கப்பட் டது.

எப்போது முதல்வழங்கப் பெற்றது என்பதற்கு இப் போதைக்குக் காலம் கணிக்க இயலவில்லை.

9. ஒரு பெருந்திருவிழா என்றால், அந்த நாட்டு மக்கள் எல்லாரும் கலந்து பயன் பெறல் வேண்டும். அதற்காகத்தான் விழாவே, பொதுத் திருவிழாவாக, பெருந்திருவிழாகக் கொண் டாடப்படுகிறது.

10. இப்போதைய ஆரல்வாய் மொழிப் பகுதியெல்லாம் முன்பு சேரநாட்டின் பகுதியாகவும் இருந்தன. காடுகளும், பொழில்களும் அடர்ந்திருந்தன.

11. சேரநாட்டுக்குச் (கேரளத்துக்கு) செல்லும் கணவாய் இரண்டு. ஒன்று பாலக்காட்டுக் கணவாய். மற்றொன்று ஆரல்வாய் மொழிக் கணவாய்.

ஆரல் வாய்மொழிக் கணவாய் வழியாகச் சேரநாட்டு மேலைக் கடற்கரை வரை முன்பு போக்குவரத்து இருந்து வந்துள் ளது.

அந்தப் பழைய வழித்தடம் இப்போதும் உள்ளது.

12. இக்கணவாய் வழியாக இங்குள்ள மக்கள் தங்கள் நாட்டு (சேரநாட்டு) ஆரல் பெருவிழாவைக் கண்டு மகிழ்ந்து பயன் பெறுவதற்குச் சென்று வந்துள்ளனர்.

13. ஒரு பெருவழிக்கு ஏதாவது ஒன்றின் அடிப்படையில் சிறப்புப் பெயர் அமையும்.

சான்றாக வலியசாலை - பெரிய சாலை பாறைச் சாலை - மலையடிவாரத்திற்குச் சேரும் சாலை; அசும்புச் சாலை - மழை பெய்து, வழுக்குப் பாறைகள் நிறைந்த சாலை, ஆறாட்டுச் சாலை - ஆற்றில் தீர்த்தம் ஆடுவதற்குக் கொண்டு சேர்க்கும் சாலை.

இவை சிறப்புக் கருதியும், சென்றடையும் இடச் சிறப்புக் கருதியும் பெயர் அமையப் பெற்ற பெருவழிகள்.

'அதியமான் பெருவழி' எனவும் கல்வெட்டில் காணப்படு கிறது.

இவை போன்று, 'ஆரல் திருவிழாச்' சிறப்புக்கருதி, அத்திருவிழாவைக் காண்பதற்கு மக்கள் வந்து செல்ல வாய்ப்பாக, இக்கணவாய்ப் பகுதி வாயிலாக அமைந்தமையால், இப்பெரு விழாவின் பழைமையும், பெருமையும், சிறப்பும் கருதி 'ஆரல் வாய்பொழில்' என்னும் காரணச் சிறப்புப் பெயர் இடப்பெற்றது.

'ஆரல்' என்னும் கார்த்திகை நட்சத்திரத்தின் பழந்தமிழ்ப் பெயரே முதலில் வழங்கி இருத்தல் வேண்டும்.

தொடக்கத்தில் வழங்கி, பிறகு, 'கார்த்திகை'ப் பெயராக அமைந்து, கார்த்திகைப் பெருவிழா ஆனது.

*14.* வாய் என்பது (நுழை) வாயில், வழி, பாதை ஆகிய பொருளைத் தருவது.

*15.* 'பொழில்' என்பது அடர்ந்த சோலையைக் குறிக்கும் பொதுச் சொல்.

பொழில் என்பதே, காலப் போக்கில் சிந்தனை இல்லா மலும், பொருள் புரியாமலும், எல்லாரும் அறிந்த 'மொழி' என மருவி வழங்கப்படுகிறது.

மொழிக்கும், இக்கணவாய்க்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

இக்கணவாய்ப் பகுதி, அடர்ந்த சோலைகளை உடைய 'பொழில்' ஆகும்.

திருச்செந்தூர் அருகில் 'காயாமொழி' என்னும் ஊர் உள்ளது. இவ்வூர்ப் பெயரில் வருகின்ற 'காயா' என்னும் பெயர், காயா மலரைக் குறிக்கும்.

காயா மலர்க் கண்ணன். காயாம்பூ வண்ணன். காயா மலரின் நீல நிறம் போன்று கண்ணன் நீல வண்ணத்தன்.

எனவே, காயாமலர் நிறைந்த காயாம் பொழில் என்பதே உண்மையான பெயர். காயா மொழி அன்று. 'பொழில்' என்பது பேச்சு வழக்கில் 'மொழி' எனத் திரிந்து விட்டது.

அதுபோல, இங்கும், 'ஆரல்வாய் பொழில்' என்பதே பொருத்தமான பெயர், உண்மைப் பெயர்.

ஆரல் வாய் பொழிலின் மருவி வழங்கும் வழக்கில் சொல்லப்படும் பெயர்களான ஆறாம்புளி, ஆறாம்போலி என்ப வற்றில், பொழில் ஒலிப்பு சற்றே புலனாகிறது. ஆறா மொழி எனவும் சோம்பலில் சொல்லுகிறார்கள்.

இனி, ''ஆரல்'' என்பது மீன் இனங்களுள் ஒன்று. அம் மீனின் வாய் போன்று, இக்கணவாய் பெயர் அமைந்துள்ளது. ஆகவே, ஆரல்வாய் மொழி என்னும் பெயர் அமைந்தது எனச் சிலர் கூறுகின்றனர்.

இப்படிச் சொல்வதைச் சற்றுச் சிந்திக்கலாம்.

''ஆரல்'' என்னும் கார்த்திகை விண்மீன் பழந்தமிழ்ப் பெயரையே, பழங்காலத்திலிருந்து இந்தக் கணவாய்க்கு இட்டு வழங்கினர்.

கால மாற்றத்திலும், 'விண்' என்பதன் பொருள் எல்லா ராலும் புரியாத நிலையிலும்,

'விண்மீன்' என்பதிலிருந்து, 'விண்'ணை விட்டு விட்ட னர்.

மீன் என்பதை மட்டுமே நினைவில் வைத்துக் கொண்ட னர். ஆரல் விண்மீன், ஆரல் மீன் ஆகிவிட்டது. மீனை, உணவாகப் பயன்படும் மீன் என மயங்கிப் பொருள் கொண்டனர்.

அதற்கு ஏற்ப வாய் என்பதற்கு, அம்மீனின் வாய் எனவும் பொருள் கொண்டனர்.

மொழி என்பது பற்றி எதுவும் சொல்வதில்லை.

ஆரல் (மீன்) வாய் என்னும் தொடரை இப்போதும் சொல்லி வருவதிலிருந்து, தொடக்க காலத்தில், ஆரல் என்பது விண்மீனையே குறித்து அமைந்தது என்பது உறுதியாகிறது.

''விண்மீன்'' என இருந்தது, விண் நீங்கி, மீன் மட்டும் வழக்கில் நிலைத்து விட்டது. விண்மீன் எனவே இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் மீனுக்கும், இக்கணவாய்க்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

எனவே, இச்சான்றுகளிலிருந்து திருக்கார்த்திகைத் திருநாளுக்குச் சிரப்பான இடம் சேர நாட்டில் கொடுத்ததன் சிறப்பு தெளிவாகப் புலனாகிறது.

அடுத்து, ''ஆரல்வாய்பொழில்'' பெயருக்கும், கார்த்திகைத் திங்களை ஆண்டின் இறுதித் திங்களாக மலை மக்கள் மன்னான்கள் கொண்டாடுவதற்கும் என்ன தொடர்பு என்னும் ஐயம் எழுவது இயல்பே.

1. சேரநாட்டில் கொண்டாடப் பெறும் மிகப்பெரிய, பழைமையான திருவிழா ஆரல் பெருந்திருவிழா (கார்த்திகைத் திருவிழா).

2. சேர மன்னனே பெருமிதத்துடன் தனது பாடலில் சுட்டிக் குறிப்பிட்டு மகிழும் திருவிழா.

3. நாட்டு மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்னும் பெருவிழைவுடன் நடத்தப்படும் பொதுப் பெருந்திருவிழா.

கேரளத்தில் இன்றும் ஓணம் பண்டிகை, சாதி மத இன வேறுபாடின்றி மக்கள் அனைவரும் இணைந்து கொண்டாடும் பொது விழாவாக அமைந்தமை, ஆரல் திருவிழாவின் தாக்கமே.

4. அந்த விழா நடைபெறும் மாதத்தின் நட்சத்திரப் பெயராலேயே, 'அரசப் பெருவழி' (ராஜபாதை) அமைவதற்கு அடிப்படையாக அமைந்தவிழா.

5. குறிஞ்சிக் கடவுள் முருகனுக்கும், கார்த்திகை நட்சத்திரத்துக்கும் உள்ள தொடர்பும் பொருத்தமாக அமைந்துள்ளது.

இக்காரணங்களால், கேரளத்துடன் தொடர்புடைய 'மன்னான்'களுக்கு இக்காலக் கணக்கீட்டு முறை தொடர்பு ஏற்பட்டிருக்கலாம்.

சேர நாட்டின் பகுதிகளிலிருந்து, பழனி மலைத் தொடருக்குக் குடிபெயர்ந்து வந்த மன்னான்கள், சேர நாட்டுக் காலக் கணக்கீட்டு முறையைத் தாங்களும் பின்பற்றினர். கார்த்திகைத் திங்களை ஆண்டின் இறுதித் திங்களாகக் கொண்டனர்.

மற்றொரு தொடர் சிந்தனை.

''மன்னான்'' மலை மக்கள் கார்த்திகைத் திங்களை ஆண்டுநிறைவுத் திங்களாகக் கொண்டனர் என்றால், தொடர்ந்து வரும் மார்கழித் திங்கள் ஓர் ஆண்டின் தொடக்கத் திங்களாகக் கொள்ளப்படும் அல்லவா.

ஆனால், இது பற்றி மன்னர்களுக்கு எதுவும் தெரியவில்லை.

ஆடித் திங்களில் இராமாயணப் போரும், மார்கழித் திங்களில் பாரதப்போரும் நிகழ்ந்தனவாகச் சொல்லும் மரபு உண்டு.

இம்மரபைப் பின்பற்றியே கேரளத்திலும், கேரளத் தொடர்புப் பகுதியிலும் 'இராமாயண வாசிப்பும்' இராமாயணத் தொடர்பு நிகழ்வுகளும் ஆடித் திங்களில் நடைபெறுகின்றன.

1. மார்கழித் திங்களில், பாரதப்போர் முடிந்தது. பாரதப் போர் நிகழுங்கால் 'சேரமன்னன் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன் 'பெருஞ்சோறு' வழங்கினான்.

2. மன்னனாக ஆட்சி செய்த கண்ணன், மார்கழித் திங்களில் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டான்.

3. 'மாதங்களில் நான் மார்கழி' எனக் கண்ணனே சொல்லுகின்றான். (பகவத்கீதையில் - ஆய்வு தனி)

மார்கழித் திங்களில் கண்ணன் கடவுளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பெருமை ஒன்று,

சேரர் மரபில், முதலில் தெரிய வரும் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாத மன்னனுக்கு, அவன் மார்கழித் திங்களில் பாரதப் போரில் பெருஞ்சோறு வழங்கியமையால், பெருமை வந்து சேர்ந்தது மற்றொன்று.

ஆக, இவ்விரண்டின் அடிப்படையில், மார்கழித் திங்களை ஆண்டின் முதல் திங்களாகக் கொண்டு ஆண்டுக் காலக் கணக்கீட்டு முறை கணக்கிட்டிருக்கலாம் என நினைக்கத் தோன்றியது.

மேலும், மார்கழியில் செந்நெல், வெண்ணெல், வெதிரி நெல், கிழங்கு வகைகள், ஓரித்தேன் விளைந்து அறுவடை தொடங்குகிறது. இம்மகிழ்வாலும் மார்கழித் திங்களை ஆண்டின் தொடக்கமாகக் கொண்டனர்.

கேரளத்தில் இன்று கண்ணன் வழிபாடு - கிருஷ்ணன் வழிபாடு மிகுதியும் உள்ளது.

தொடக்க காலத்திலிருந்து சிவ வழிபாடே சேர நாட்டில் இருந்து வந்துள்ளது.

கண்ணபிரான் வழிபாடு சேரநாட்டுக்குள் வந்தமைக்கு வரலாற்றுச் சான்று உண்டு. அது தனியே எழுத வேண்டிய ஒன்று.

''முன்னமே துயின்றருளிய'' எனத் தொடங்கும் பாவில், கண்ணபிரான் தனது இல்லம் நாடி வந்ததை விதுரன் கூறும் போது, 'நீ முன்னம் துயின்ற பாற்கடலா? அரவணையா? பச்சை ஆல் இலையா? எனது இல்லம்' எனக் கேட்டதாக வில்லிபுத்தூரார் கூறுகிறார்.

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி மூலக் கோயில் ஆயர் குலக் கண்ணனை ஆலமரத்தடியில் முதன் முதல் வைத்தமையை, 'பச்சை ஆல் இலையா' என அவர் வினவுவது நினைவுபடுத்துகிறது.

கண்ணன் ''ஆலிலைக் கண்ணன்'' ஆனான்.

கேரளத்தில், சில இனத்தாரின் திருமணத்தாலி, ''ஆலிலையில் கண்ணன்'' என்பது, கண்ணன் ஆலிலைத் தொடர்பு பற்றியே.

இதனால், தொன்மூதாலம், சேரரின் தொன்மை அடையாளம் தெரிய வரும்.

சுற்றுக் கட்டுகள் கற்களால் கட்டப்பட்டிருந்தும், நாகர் கோயில் நாகராஜா கோயில் கருவறை மேற்கூரை ஓலையால் வேயப்பட்டுள்ளது. திருவனந்தபுரம் மூலக் கோயில் அம்பாடியும் அவ்வண்ணமே.

இவையெல்லாம் சங்ககாலத் ''தொன் மூதாலத்தையும்'', ''படம்செய் பந்தர்க்'' கோயிலையும் நினைவூட்டி, சேரநாட்டின் தொன்மைக்கு மேலும் அரண் சேர்க்கின்றன.

இப்போதைய திருவனந்தபுரம் மன்னர் பரம்பரையினர் வரை, தங்களைப் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் வழிவந்த

வர்கள் எனப் பெருமையுடன் குறிப்பிடுகின்றனர். சேர மன்னர் மரபினர் எனக் கூறிக் கொள்வதில் பெருமை அடைகின்றனர்.

மார்கழித் திங்கள் கடுங்குளிர் காலம். குறிஞ்சி நிலத்துக்குரிய பெரும் பொழுது கூதிர். சிறு பொழுது யாமம்.

இப்பொழுதில் கடுங்குளிர் மிகுதியும் வாட்டும். இயற்கையின் ஒழுங்கு தவறாத அமைப்பு, தட்ப வெப்ப நிலை, மலையின் இயற்கைத் தன்மை என இவற்றை நுணுக்கமாக உற்று நோக்கி, கூதிர், யாமம் என வகுத்துக் கூறியுள்ளார் தொல்காப்பியர்.

சுற்றுச் சூழியல், நெடிய கால நிலை, குறுகிய பருவ நிலை மாற்றங்கள், சுற்றுச் சூழலுக்கேற்ப உயிரியின் தக அமைவு ஆகியவற்றை இத்திணைப் பிரிப்பு, புவியியல், நிலவியல், புவி அமைப்பியல் அணுகுமுறையில் விளக்கிக் காட்டுகிறது நிலமும் பொழுதும் என வகுத்தமை.

எனவே, குறிஞ்சித் திணைக்கு மார்கழித் திங்கள் ஆண்டுத் தொடக்கம் எனக் கூறுவது திணைச் சிறப்புக்கும் பொருந்த அமைகிறது.

மார்கழித் திங்களில் திருவாதிரைப் பெருவிழா சேரநாடு உள்ளிட்ட தமிழகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

சேர நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது என்பதற்குச் சான்றாகக் கோயில் பெயர்களை 'அம்பலங்கள்' என்று பொதுப் பெயரால் அழைக்கின்றனர்.

''சமராத்திரி நாள்களை அடிப்படையாகக் கொண்டும், சில கோள்களின் இயக்கத்தை வைத்தும் வேதகால ஆண்டுக் கணக்கிட்டு முறை அமைக்கப்பட்டுள்ளது. 'வேதாங்க ஜோதிடம்' என்பது, கடக லக்கினத்தைக் கணக்கிட்டு, அதுவும் சமராத்திரி நாள்களை முன்னிறுத்திக் கணக்கிடப்பட்டிருக்கிறது....

....யஜுர் வேதமும், அதர்வண வேதமும், கார்த்திகை நட்சத்திர அடிப்படையில் இந்தச் சமராத்திரி நாளைக் கணக்கிடு கின்றன.

இச்செய்தியைக் கூறுபவர் டேவிட் பிராலி என்பவர்.

வேதமும், வேதக் கருத்துக்களும், வேள்வி செய்தல் முதலி யனவும் சங்க காலத்திலேயே தமிழகத்தில் காலூன்றி விட்டன.

இருக்கு வேதம் தவிர, பிறவேதங்கள் காலத்தால் பிந்தியவை.

சமராத்திரி நாள்கள்-கார்த்திகை நட்சத்திரம் வேதாங்க சோதிடம் இவற்றின் தாக்கம் சேர நாட்டில் ஏற்பட்டு, கார்த்திகைத் திங்களை ஆண்டு இறுதித் திங்களாக ஏற்றுக் கொண்டார்களோ? என்பதும் தனியே விரிவாக ஆராய வேண்டிய ஒன்று.

சேரநாட்டு மலை உச்சியில் ஏற்றப்பட்ட கார்த்திகைப் பேரொளிச் சுடர், காலமாற்றத்தால் தை மாத மகர சோதியாக உருமாறிவிட்டது.

மகர விளக்கு வேறு, மகர ஜோதி வேறு.

அமெரிக்க வடமேற்கு கரோலினா மாநிலத்திலுள்ள பிரவுன் மவுண்டன் மலை உச்சியில், பல நூற்றாண்டுகளாக மாய ஒளி ஒன்று தோன்றி, சில விநாடிகள் நீடித்து மறைகிறது. சில சமயம் மரங்களுக்கிடையில் பல வண்ணங்களில் அது தோன்றும் போது, மிகுந்த ஒளியுடன் தெரிகிறது. இந்த ஒளி எங்கிருந்து வருகிறது. என்ன காரணம்? இதன் தன்மை என்ன? என்பதை, அறிவியல் முன்னேறிய இக்காலத்திலும் ஒருவராலும் விளக்க முடியவில்லை.[47]

(Brown mountain in Western North Carolina in the U.S. is famous for the mysterious lights seen on it at night. The lights, reported for centuries, are balls of illumiuation that flore up, last from a few seconds to a minute or so and vanish. Sometimes they more in a group through

the trees on the mountain they are usually red or white but blue, green, yellow and orange lights are also seen. There are times when the lights are extra ordinarily bright, even when seen from a long distance. Occasionally, a light may swell to the size of the full moon. They've never been known to cause a fire. What causes the lights? Nobody knows for sure, through many studies have been carried out and many theories have been carried out and many theories have been advanced to explain their occurrence.")

இவ்வியப்புச் செய்தியும் 'மகர சோதி' பற்றிச் சொல்லப் படுகின்ற செய்தியுடன் ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கது.

''அழல் சேர் குட்டத்து'' என்பதில், கார்த்திகை நட்சத்திரம் சிலப்பதிகாரத்தில் சுட்டப்படுகின்றது.

''தொல் கார்த்திகை நாள்'' எனக் கார்த்திகைப் பெருவிழா வின் பழைமையைச் சுட்டுகின்றார் திருஞானசம்பந்தர்.

''கார்த்திகை மாதம் எல்லார் வீட்டுத் திண்ணைகளிலும் வரிசையாக விளக்கேற்றி வைக்கிறார்களே ஏன் தெரியுமா?. கார்த்திகை மாசம் அடைமழைக் காலம். மேகம் சூழ்ந்து இருண்டு காணப்படும். விடிய விடிய மழைபெய்யும். அந்தக் காலத்தில் மின்சார விளக்குக் கிடையாது. தெருவில் போவோர் வருவோர் நடப்பதற்குச் சிரமப்படுவார்கள். அவர்கள் சிரமம் இல்லாமல் நடந்து செல்வதற்கு உபகாரமாகக் கார்த்திகை மாதத்தில் வீட்டுத் திண்ணைகளில் வரிசையாக விளக்கேற்றி வைக்கும் பழக்கம் ஏற்பட்டது.''[48]

இவ்விளக்கம் பொருத்தமாக உள்ளது.

## குன்னுவர்

பழனிமலை வாழ் பழங்குடி இனத்தவருள் குன்னுவர் ஓர் இனத்தார்.

குன்னுவருக்கு மன்னாடிகள் என்னும் பெயரும் உண்டு.

மன்னாடிகளுக்குத் தலைவர் ஒருவர் இருப்பார். இவர் இடும் கட்டளைப்படியே பிற மன்னாடிகள் நடந்து கொள்வார்கள்.

மன்னாடித் தலைவரை அப்பச்சி என அழைப்பர்.

சபரிமலை சன்னிதானம் செல்லும் வழியில் அப்பச்சி மேடு என்னும் பகுதி உள்ளதை அறிவோம்.

மன்னான்களின் குடிசைகளும் பிற மலைவாழ் பழங்குடியினரின் குடில்களைப் போன்றே உள்ளன.

புலையர் இனத்தாரைப் போன்றே இவர்களும் களியாட்டம் ஆடுவார்கள்.

இந்த ஆட்டத்தைக் கலியாண பாணி என்கின்றனர்.

இது, சிலப்பதிகாரத்தில் வருகின்ற 'தேவ பாணி'யை நினைவு படுத்துகிறது.

இவர்களும் கும்மிப்பாடல் பாடுகின்றனர். பூம்பொறை குழந்தை வேலப்பன் திருக்கோயிலில் மன்னாடிகள் பத்து நாள் திருவிழா நடத்துவார்கள்.

முளைப் பாலிகைகள் முளைக்க வைத்து, கோயிலின் முன் வட்டம் இழைத்து, முளைப் பாலிகைகளை வட்டமாக வைப்பார்கள். அவற்றைச் சுற்றி வட்டமாக நின்று கொண்டு, கும்மியடித்துப் பூம்பொறை வேலனைப் போற்றுகின்றனர்.

புலையர்களைப் போன்றே இவர்களும் இந்த ஆட்டத்தைக் குன்னாட்டம் என்கின்றனர்.

கல்யாண பாணியில் ஆண்களும் பெண்களும் கலந்து நின்று ஆடுவார்கள். குன்னாட்டத்தில் ஆடவர்கள் மட்டுமே ஆடுகின்றனர். இரு கைகளையும் மடக்கி, விலாப்புறத்தில் அடித்துக் கொண்டு ஆடுகின்றனர். இது சாக்கைக் கூத்தைப் போன்று உள்ளது.

குன்னுவப் பெண்கள், முளைப்பாலிகைகளைச் சுற்றி, முருகன் கோயிலின் முன்னால் கும்மிப்பாடல் பாடி கும்மியடிக்கின்றனர். இது சிலப்பதிகாரத்தில் வருகின்ற 'வாரக்கும்மி' போலத் தோன்றுகிறது.

குன்னுவர்கள், 'வேலன்கந்தர்வ மணப்பாட்டு' என்னும் பாடலைப் பாடுகின்றனர். 'கந்தர்வ வனப்பாட்டு' என்று இதைச் சொல்ல வேண்டும். வள்ளியை முருகப்பெருமான் ''காந்தர்வ மணம்'' புணர்ந்த கதைப் பாடல்.

இவர்களின் பாடல்கள் எல்லாமே வாய்மொழிப் பாடல்கள் தாம்.

இவர்கள் பாடும் கும்மிப்பாடலில், பூம்பொறை நாதன் என்றே சொல்லுகின்றார்கள். 'பூம்பொறை நாதனே', 'பூம்பொறை நாதரே' என்றெல்லாம் சொல்லிப் பாடுகின்றனர்.

தாண்டிக்குடி ஊரை, தாண்டியான் சீமை எனவும், தாத்தா உறவு முறையினரைத் தாத்தன் எனவும், கார்மேகத்தைக் காரு எனவும் கூறுகின்றனர். மேகத்தை விட்டுவிட்டு, கார் என்பதுடன் உகரச் சாரியை சேர்த்துக் காரு என்கின்றனர்.

காயாம் பூ வண்ணன், கரியமால் எனத் தூய தமிழில் கூறு கின்றனர்.

பழனி மலையின் ஜீவகிரி ஆவினன்குடி என இவர்கள் கூறுவது, பழனிப்பதியின் பழைய பெயர் ஆவினன் குடி என நக்கீரர் கூறுவதை அடியொற்றி அமைகிறது (ஜீவகிரி - உயிர் போன்று முதலில் அமைந்த மலை).

இவர்கள் 'சுய'மாகப் பாடும் பாடல்களில் தண் தமிழ், 'மலையாள வாடை' வீசும் சொற்கள், சிவனடியார்களைப் பற்றிய செய்திகள், அலங்காரச் சொற்கள் ஆகியவை ஆற்றொழுக்காய், 'சந்த நயத்துடன்' கும்மியாட்டத்துக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன.

சான்றுகள் சில:

1. ''சக்கரை முக்கரை மோதகத் தேங்காயைச்
'சன்னிதி முன்னாலே தான்படைத்து....
அற்புதமான பூம்பாறை ஆனந்தக்கும்மி நாடி வாங்க!

2. பூஞ்சோலைக் குள்ளே பூம்பொறை வேலவர்
பூவாலே மண்டபம் சோடனையாம்

3. முத்தாலே முத்தலே செண்புக மாம்- நல்ல
மோகினி முத்தாலே செண்புகமாம்.

4. குங்குலியச் சோலையில் இருக்கும் வேலவர்க்குக்
குனிந்து கும்மி தண்தமிழ் பாட....

5. புள்ளை யறுத்துக் கறிசமைத்து- நல்ல
பூச்சக்கரக் காவடி உண்டு பண்ணி
அறுத்த புள்ளை எடுத்துப் பேசுது
ஆண்டவன் சன்னிதி முன்னாலே.... !

மலைக்குன்னுவர் பெண்களின் இந்தக் கும்மிப் பாடலில் நோக்கத்தக்கவை:

## மோதகம்

கொழுக்கட்டை போன்றதொரு தின்பண்டம் (மலையாள வழக்கு)

## பூம்பாறை : பூம்பொறை

பூம்பாறை, பூம்பொறை என இருவழக்கும் பயின்று வந்துள்ளது.

இங்கே ஒரு செய்தி நுட்பமாகக் கவனிக்கத்தக்கது.

ஊரைப்பாடும் போது, 'அற்புதமான பூம் பாறை' எனப் பாடுகிறார்கள்.

கோயிலுள் உறையும் வேலனோடு சேர்த்துப் பாடும் போடு, 'பூம்பொறை வேலவர்' எனப்பாடுகிறார்கள்.

ஊரைப்பாடும்போது, 'பாறை' எனச் சொல்லுகின்றனர். ''அற்புதமான'' என்னும் அடைமொழியினை முதலில் சொல்லி, ஊர்ப்பெயரை பிறகு சொல்கின்றார்கள்.

வேலனோடு சேர்த்துப்பாடும்போது, ''பூம்பொறை வேலவர்' எனச் சேர மன்னன் பொறையனை நினைவூட்டும் விதத்திலும், அவனால் அக்கோயில் கட்டப்பட்டது என்பதை உறுதிப் படுத்தியும் பூம்பொறையை முதலில் சொல்லி அக்கோயிலுள் குடி கொண்டுள்ள வேலனைப் பிறகு சொல்கிறார்கள்.

''பூம்பொறை நாதன் படிக்கட்டே சேருதோம்'' என வேறு இடத்திலும் பூம்பொறையை முதலில் சொல்லி நாதனாகிய முரு கனைப் பின்னர்க் கூறுகின்றனர்.

தலத்துக்கு (ஊருக்கு) ஒரு பெயரும், தலத்தில் கட்டப்பட் டுள்ள திருக்கோயிலுக்கு வேறு ஒரு பெயரும் உண்டென்பதை அறிவோம்.

கருவூர் - ஊரின் பெயர். கோயில் பெயர் - பசுபதீச்சுரம். தஞ்சாவூர் - இராசராசேச்சுரம்.

ஆனால், இதைத் தெரிந்து கொண்டுதான் இவர்கள் பாடி னார்கள் எனச் சொல்வதற்கில்லை. இவர்கள் இசையோடு பாடும் போது இயல்பாக வந்து அமைந்துள்ளது.

இருவகை வழக்கும் இப்படிச் சிந்திக்கத் தூண்டுகிறது.

ஆயினும், ஊர்ப்பெயர் பூம்பொறை தான்.

கும்மிப்பாடல் சந்த நயத்துக்குத் தகுந்தபடி 'அற்புதமான பூம்பொறை' எனவும்,

" பூஞ்சோலைக்குள்ளே பூம்பொறை வேலவர்' எனவும் அமைந்த கும்மிப்பாடலடிகளின் இசை ஒலி நுட்பம் நன்கு பொருந்தியுள்ளது.

## சோடனை

சோடித்தல் - அலங்கரித்தல், மலையாள ஆட்சியில் இருந் தமையால், நெல்லை, குமரி மாவட்டங்களிலும் 'சோடித்தல்' -வழக்கம் உண்டு. 'சோடித்தல்' சொல்வழக்கு உண்டு.

## செண்புகம்

*செண்பக மரம், மலர்.*

*வேலர், வேலவர்.*

## தண்தமிழ்

*தமிழ் நாட்டவரே அயர்ந்துவிட்ட தண்டமிழ்ச் சொல்.*

## *சிறுத்தொண்டர்*

*'பு(பி)ள்ளை அறுத்துக் கறி சமைத்து'- பிள்ளைக்கறி சமைத்துச் சிவனடியாராகி வந்தவர்க்குப் படைத்த சிறுத்தொண்ட நாயனாரின் செயலைக் குறிக்கிறது.*

*''அறுத்த புள்ளை எடுத்துப் பேசுவது''- என்று பாடுவ தால், மாண்ட சீராளன் மீண்டு வந்த வியப்புச் செய்தி சொல்லப் படுகிறது.*

*'எடுத்து'- உயிருடன் எழுந்து.*

*'அறுத்து, மாண்ட பிள்ளை உயிர் பெற்று மீண்டு வந்து' என்பதால், 'நரபலியோ' என்னும் ஐயம் அகலுகிறது.*

*'அவளுக்குப் பிள்ளை பிறந்துள்ளது' என்பதை இப்பழங் குடியினர், ''அவள் பிள்ளை எடுத்துள்ளாள்' எனச் சொல்லுகின்ற னர்.*

இவர்களுக்குக் கும்மிப்பாடல், மோதகம் (மலையாள வழக்கு), தண்தமிழ்ச் சொற்றொடர், சிறுத்தொண்டர் வரலாறு இவையெல்லாம் எப்படித் தெரிய வந்தது.

இவர்களிடையே சேரநாட்டுத்தாக்கம் ஏற்பட்ட காரணத் தாலும், சேர நாட்டிலும் வழங்கி வந்த இச்செய்திகளை வழிவழி யாகக் கேட்டுவந்த கேள்வி ஞானத்தாலும் தெரிந்திருந்தனர்.

இதற்குச் சான்றாக,

மலையாளத்தில் சிறுத்தொண்டரை, 'சிறுத்துண்டன்' என்கின்றனர்.

கேரளத் திரிசிவப் பேரூர் வட்டாரத்தில் திருநாவுக்கரசு சுவாமிகளை, 'முட்பொறுக்கிச்சாமி' எனக் கூறும் வழக்கம் உள்ளது. அப்பர் பெருமான் ஆற்றிய உழவாரப் பணியைப் போற்றி இவ்வாறு கூறுகின்றனர்.

''அம்மையே!'' எனச் சிவபெருமானால் அழைக்கும் பேறு பெற்றவர் காரைக்கால் அம்மையார் எனத் திருத்தொண்டர் புராணம் கூறும்.

கேரளத்தில் வழங்கப் பெறும் நாட்டுப்புறக் கதை ஒன்றில், 'காரயக்காலம்ம' என்னும் பெயர் காணப்படுகிறது எனப் பேரா சிரியர் கி. நாச்சிமுத்து கூறுகிறார்.

இங்குச் சுட்டப்பெறும் பெயர் காரைக்கால் அம்மை யாரான புனிதவதியாரைக் குறிக்கும்.

கன்னடப் பகுதிகளிலும் அறுபத்து மூன்று நாயன்மார் களைப் பற்றிக் கூறும் கன்னட நூல்கள் உள்ளன.

கேரளத்துக் கல்லடியில் தோன்றிய ஆதிசங்கரர், திருஞான சம்பந்தரைத் ' திராவிடச் சிசு' எனக் குறிப்பிடுகின்றார்.

தேய்ந்த செருப்பணிந்த காலால் சிவனின் திருமுகத்தைத் தீண்டியது, 'கூர்ச்சம்' (தருப்பைப் புல் சிறிய கட்டு) போலப் புனித மாயிற்று எனக் கண்ணப்ப நாயனாரையும் ஆதிசங்கரர் குறிப்பிடு கின்றார்.

எனவே, தமிழக உட்பகுதிகளில் வாழ்ந்த அருளாளர் களை, பழனிமலைவாழ் பழங்குடியினர் கேரளத்தொடர்பால் குறிப்பிடுவதைப் போன்றே, ஆதி சங்கரரும் குறிப்பிடுகின்றார்.

குன்னுவப் பெண் ஒருத்தி பாடும் தாலாட்டுப் பாடலில், ''மந்தி நடை குருடு மகாதேவனைப் பணிந்து, என்னும் பதினாறு இருக்கும் வரம் பெத்த கண்ணோ'' என்று வரிகள் பாடப்பட்டுள் ளது.

இவ்வடிகளில், சிவபெருமான் அருளால், என்றும் பதி னாறு வயதினனாய் வாழும் வரம் பெற்ற மார்க்கண்டேயன் குறிக் கப்பெறுகின்றான்.

''நல்லவன் புள்ளைக்கு நங்கைக்கு இசைஞ்சாப் போல்'' என்ற அவர்களின் வாய்மொழிப் பாடலில் நங்கை என்னும் சொல் பயின்று வந்துள்ளது.

கன்னிராசியை, 'நங்கை' எனவும் சொல்லுகின்றனர். எப்படித் தெரிந்து சொல்லுகிறார்கள் என்பது தெரியவில்லை. நங்கை-சொல் கேரளத்திலும் பயின்று வருகிறது.

இம்மக்களின் தாவளம் குடில் வாசலில் காட்டு மலர்களை மாலையாகத் தொகுத்துத் தொங்கவிடுள்ளனர். சாமி கும்பிடும் காலங்களில் இவ்வாறு அலங்காரம் செய்வார்கள்.

இந்த மாலையை 'நுணர் மாலை' எனச் சொல்லுகின்றனர். நுணாமர மலர் மாலையாக இருக்கலாம் அல்லது துணர் (பூங் கொத்து) என்னும் சொல்லை நுணர் எனவும் பேச்சு வழக்கில் மாற்றியும் சொல்லாம் (பவானி தல விருட்சம் நுணாமரம்-நணா மரம்).

'' மந்தையே கல்லோட ஒனக்கென்ன மாராட்டம்?''- இக்கும்மிப் பாடலடியில், 'மந்தைக்கல்' குறிப்பிடப்படுகிறது.

புறநானூற்றில் 'ஆதீண்டுக் குற்றி' எனச் சொல்லப்படுவது, நாளடைவில் 'மந்தைக்கல்' ஆனது.

மந்தையில் கூடியிருக்கும் ஆநிரைகளுக்குத் தினவு ஏற்படும்போது, இக்கல்லில் தேய்த்துத் தினவைத் தீர்த்துக் கொள்வதற்கு வசதியாக இக்குற்றுக்கல்லை நம் முன்னோர் மந்தை நடுவில் நட்டு , ஆவினத்துக்குப் பரிவு காட்டினர்.

மேல் பழனிமலையில் சிவலிங்க வழிபாடும், பழனி பகவதியம்மை பழிபாடும் கேரளத் தொடர்பால் ஏற்பட்டன.

இதனை, ''அஞ்சு நாட்டில் வாழும் தின்னாஞ்சி லிங்கமே'', ''ஆச்சி கண்ணாச்சி பகவதியம்மனே'' என்ற கும்மிப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

## மோகினி முத்தாலே செண்புகமாம்

''மோகினி'' என்னும் பெண் அணிந்துள்ள வெண்மையான முத்துப் போன்ற சண்பக மலர்மொட்டுக்கள்.

''மோகினி'' என்று இவர்கள் கூறுவது, மலையில் வசிக்கின்ற பெண்களுள் யாரையும் குறிக்கவில்லை. மோகினி என்னும் தீண்டி வருத்தும் அழகுடைய வனத்தெய்வத்தைக் குறிக்கும்.

வான் அரமகளிர் விண்ணிலிருந்து இம்மலைக்கு இரவு நேரத்தில் இறங்கி வந்து, அருவியில் நீராடி, விடிவதற்குள் விண்ணுலகம் சென்றுவிடுவர்.

அவ்வான் அரமகளிர் இம்மலை மக்களால் மோகினி என அழைக்கப்படுகின்றனர். இலக்கியச் சுவைக்காக நம்பிக்கையின் அடிப்படையில் சொல்லப்பட்டது.

இவ்வியப்புச் செய்தியை நினைவு கூரும் வகையில், மேல் பழனி மலையில் ''தேவதை அருவி'' [Fairy Falls] கோடைக்கானல் தூண்மலைக்குச் செல்லும்வழியில் உள்ளது.

வேங்கை மரத்தின் கீழ்விரிந்த கூந்தலுடன் நின்ற கண் ணகியை விண்ணிழி விமானம் வந்து, கானவர் வேடுவர் வியப்புற விண்ணுலகுக்கு அழைத்துச் சென்ற சிலப்பதிகாரச் செய்தி இவ் விடத்து நினைக்கத்தக்கது.

## நிறைவு

பழனி மலைத் தொடரில் பெருங்காடு, கானல், பள்ளம், பாறை, ஊர் முதலிய தூய பழந்தமிழ்ப் பெயர்களுடன் இணைந்து ஊர்களும், இடங்களும் காணப்படுவன போன்று, கேரளத்திலும் காணப்படுகின்றன.

கல், பாடி, கோடு, மலை, பறம்பு, புழை, துருத்தி, காடு, காவு, கா முதலிய சங்ககாலச் சொற்களும், பொன்முடி, பலிக்கல், வழிபாடு, மாரிக்குன்று, காட்டாளன், அடிமலை, கல்லடி, முண் டகக் கயம், சாலைக் கயம் முதலான தூய தமிழ்ச் சொற்றொடர் களும் காணப்படுகின்றன.

சங்க இலக்கியச் சொற்கள், பெயர்கள் மிகுதியும் இப் போது கேரளத்தில் முழுவடிவத்திலும், சிதைந்தும், மருவியும் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படுவதைக் கவனிக்கும்போது, குமரிக் கண்டம் அழிந்து பட்டநிலையில், எஞ்சிய மக்கள் இந்நிலப் பகுதி யில் ஒதுங்கிக்குடியேறி வாழ்ந்தனர் என உறுதியாக நம்பலாம்.

சேரநாடு செந்தமிழ் நாடே என்பதை விளக்க வேண்டிய தில்லை. அதேசமயம், சேரநாட்டின் காலம் வரையறுக்க முடியாத தொன்மையும் புலனாகின்றது.

இனி, பழனி மலைத் தொடர் மேல் பழனிமலையில், கூக்கால் கிராமத்துச் செப்புப்பட்டயத்தில், ''கரக்கரவு மொகள்''

என்னும் தொடர் வருகிறது. மலையாள ஒலிப்பில் மோள் - மொகள் - மகள் - வந்துள்ளது.

குன்னுவர்களின் கும்மிப்பாடலின் மலையாளச் சொற்களும் விரவி வருகின்றன.

''இன்னக்கி நினக்கு கோடிக் கலப்பா
சமைச்ச திரிகில்ல''

''அது புலியின்று தங்காளும் கோடிக்கலப்பா
புறப்பட்டோம்''

''இது யாரப்பா சோடிச்சா?''

போன்ற மலையாளச் சொற்கள் விரவி வருகின்றன.

அதேபோன்று, தூய பழந்தமிழ்ச்சொற்களும் அப்பாடல்களில் விரவி வருகின்றன.

''நீ கோட்டோரம்'' கோடு - மலை ஓரம் - சாரல், மலைச் சாரல். கோடு என்னும் பழந்தமிழ்ச்சொல், 'செஞ்செயி செறை ஓரம்' - செஞ்செய் - செம்மையான வயல், செய் என்னும் சொல் பாடலில், 'செயி' எனச் சாரியை பெறுகிறது.

செறை-சிறை-தடுப்பு வேலி.

''நம்ம மூன்று பொயிலோரம்'' - பொயில் - பொழில் - என்பதன் மருவிய மொழி.

''மெய்ப்பொருள் ஓங்கிய வில்பட்டி வேலவர்'' - மெய்ப் பொருள்.

''கானக் காட்டிலே இஞ்சி போட்டு''- கானக்காடு - கானல் காடு.

இவை, முதலான பழந்தமிழ்ச் சொற்கள் குன்னுவரின் கும்மிப் பாடலில் காணப்படுகின்றன.

ஆனால், இந்தப் பாடல்கள் எல்லாம் பிற்காலப் பாடல்கள். பழஞ்சொற்கள் கலந்துள்ளன. முந்நூறு ஆண்டுகளுக்கு உட்பட்ட இப்பாடல்களில் வருகின்ற சொல்லப்படுகின்ற சொல்லாட்சியைக் கொண்டு, செய்திகளைக் கொண்டு, இவற்றின் காலத்தை ஊகிக்க முடிகிறது.

குமரிக் கண்டக் கடலுள் பழந்தமிழக வரலாறு மறைந்து கிடப்பதைப்போல், இம்மேற்கு பழனி மலைத் தொடர்களிலும் பழந்தமிழக வரலாறு புதையுண்டு கிடக்கிறது.

இவ்விரண்டு இடங்களிலுமிருந்து வரலாற்று உண்மைகள் வெளிப்பட வேண்டும், பழந்தமிழக வரலாறு மேலும் விளக்கம் பெறும்; விளக்கம் பெற வேண்டும்.

''வரலாறு என்பது, ஒரு நாட்டின் கடந்த கால நிகழ்வுகளை, உள்ளதை உள்ளவாறே கூறும் கடப்பாடு உடையது. ஒரு நாட்டின் பெருமையும் புகழும் வரலாற்றின் மூலம் விளக்கம் பெறுகிறது'' என்பார் பேரறிஞர் அண்ணா.

பழனிமலைத் தொடர்வாழ் பழங்குடி இனத்தவரிடையே சேரநாட்டுத் தாக்கத்தைக் காட்டுவதற்கு அளவில் சிறிய இந்நூல் உதவக்கூடும்.

## சான்றெண் விளக்கம்


1. அப்பாத்துரை, கா., *தென்னாடு*

2. அவ்வை துரைசாமிப் பிள்ளை, *சேரமன்னர் வரலாறு*

3. மேலது, p VIII

4. மேலது, ப. 40

5. மேலது, ப. 57

6. மேலது

7. இராசகோபாலாச்சாரியார், முன்னுரை, *ஏட்டில் எழுதாக் கவிதைகள்,* தொகுப்பு, செ. அன்னகாமு

8. இராசு, செ., தினமலர், 18.07.2007

9. இராசேந்திரன், ம., தினமணி, ஜுன் 1, 2008

10. ஐராவதம் மகாதேவன், தினமணி, *இராசமாணிக்கனார் நினைவுக் கட்டுரை,* 11.08.2007

11. கனகசபைப் பிள்ளை, வி., *1800 ஆண்டுகளுக்கு முந்திய தமிழகம்.*

12. கிராமம் போவோமே, வானொலி நிகழ்ச்சி, பாலமார்த் தாண்டபுரம், நாகர்கோயில் வானொலி.

13. 'கூகுள்', இணையதளம்

14. சார்லஸ் டார்வின், இரா. மதிவாணன், *இலெமூரியா முதல் அரப்பா வரை*, ப. 249

15. சிவகுருநாத பிள்ளை, மா., கருத்து : *சிவவடிவங்கள்*, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

16. செட்டியார், ஏ.கே., *உலகம் சுற்றிய தமிழன்*, இலங்கைப் பயணம்.

17. செல்லம்மாள் பாரதி, *பாரதி நினைவுகள்.*

18. திருத்தொண்டர் புராணம், சேரமான் பெருமாள் நாயனார்.

19. துரை அரங்கனார், மொ.அ., உதியஞ் சேரலாதன் பாரத காலத்தவனா? கட்டுரை

20. தேவநேயப் பாவாணர், *பண்டைத் தமிழர் பண்பாடு*, ப. 86

21. தேவநேயப் பாவாணர், *திராவிடத்தாய்*, ப. 34

22. நசீம்தீன், பி., முனைவர், *கோவிலன் சரிதம்*, ப. 12

23. நாகா கண்ணன், துவாரகை உண்மையில் இருந்ததா? அமுதசுரபி, மார்ச் 2008.

24. நாச்சிமுத்து, கி., முனைவர், பேராசிரியர், கம்பனும் கேரளமும், கட்டுரை, கம்பன் மலர்.

25. மேலது

26. நாச்சிமுத்து, கி., முனைவர், *கேரள சமூக நீதிப் போராட்டங்கள்*

27. நாராயணன், எம்.ஜி.எஸ்., வரலாற்றுப் பேராசிரியர், தேசிய வரலாற்றுக் கருத்தரங்க முதன்மை உரை, நிர்மலா கல்லூரி, கோவை

28. *நீலகண்ட சாஸ்திரியார், கே.ஏ.,*

29. *மேலது*

30. *பிலோ இருதயநாத், மானிடவியலறிஞர், **ஆதிவாசிகள் மறைந்த வரலாறு**, ப. 44*

31. *மதிவாணன், இரா., இலெமூரியா முதல் அரப்பா வரை, ப. 208, மற்றும் இந்நூலாசிரியரின் **'சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் வழிபாட்டு வரலாறு'***

32. Hindu The, June 28, 2009

33. Hindu The, March, 30, 2002

34. Kothari S. Ashok., A Celebration of Indian Trees - The Hindu, 11.03.2008

35. Meenakshisundaram, T.P., Prof., Presidential Address, All India Oriental Conference, Annamalai University, Dec. 26, 27, 1955.

36. Meenakshisundaram, T.P., Prof., ***The Theory of Cankam Poetry***, The Tamil Culture, Vol. I, No. 1, Feb. 1952.

37. Mirror The., Feb. 1984

38. Pamla Rechman, Prof., South Asian Religious, Oberlin College, US., The Hindu, March, 1987

39. Reader's Digest, 1965

40. Romila Thaper, Prof.; Historian, Forgotten Themes, The Hindu, Sunday, Dec. 19, 2004.

41. Rudimentary Tamil, Brahmi Script, Unearth at Adichanallur, The Hindu, Feb. 17th, 2005

42. Sangam Age Seal or brockage? The Hindu, Tuesday, 28.08.2007

43. Sastriyar Subramania, P.S., Dr., Historical Tamil Reader

44. Sesha Iyengar, T.R., ***Dravidian Studies***, p. 195

45. Ibid, p. 22

46. Srinivasa Iyengar, P.T., ***History of Tamils***, p. 14

47. Tryist with Tradition, The Hindu, April, 9, 2006

48. William Dabymple, Master pieces in bronze,
The Hindu, Dec. 31, 2006.

## கருவி நூல்களின் ஆசிரியர்கள், நூல்கள், கட்டுரைகள், பிற

1. பேராசிரியர் எம்.ஜி.எஸ். நாராயணன், தேசிய வரலாற்று மைய முன்னாள் தலைவர், தேசிய வரலாற்றுக் கருத்தரங்க முதன்மை உரை, நிர்மலா கல்லூரி, கோவை, 2002.

2. பேராசிரியர் அவ்வை துரைசாமிப் பிள்ளை, *சேரமன்னர் வரலாறு*.

3. மேலது, P. VIII

4. மேலது ப. 40

5. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார், *சங்ககால மன்னர்கள் காலநிலை*, பி.வி. புருஷோத்தமன்

6. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை, *தென்னாடு*

7. இரா. மதிவாணன், *இலெமூரியா முதல் அரப்பா வரை*, ப. 208

8. ஞா. தேவநேயப்பாவாணர், பண்டைத் தமிழர் பண்பாடு, ப. 86

9. முனைவர் மொ.அ. துரை அரங்கனார், உதியஞ்சேரல் பாரத காலத்தவனா? கட்டுரை

10. மானிடவியலறிஞர் பிலோ இருதயநாத், *ஆதிவாசிகள் மறைந்த வரலாறு*, ப. 44

11. ஞா. தேவநேயப் பாவாணர், *திராவிடத்தாய்*, ப. 34

12. வி. கனகசபைப் பிள்ளை, *1800 ஆண்டுகளுக்கு முந்திய தமிழகம்*

13. சார்லஸ் டார்வின், இரா. மதிவாணன், *இலெமூரியா முதல் அரப்பா வரை*, நூல். ப. 249

14. Prof. Romila Thaper, Forgotten Themes, The Hindu, Sunday, Dec. 19, 2004.

15. Rudimentary Tamil, Brahmi Script, Unearth at Adichanallur, The Hindu, Feb. 17th, 2005.

16. முனைவர் ம. இராசேந்திரன், துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், தினமணி, ஜுன் 1, 2008.

17. பேராசிரியர் அவ்வை. துரைசாமிப் பிள்ளை, *சேர மன்னர் வரலாறு*, ப. 57

18. P.T. Srinivasa Iyangar, ***History of Tamils***, p. 14

19. T.R. Sesha Iyangar, ***Dravidian Studies***, p. 195

20. மேலது, ப. 22

21. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார்

22. ஏ.கே. செட்டியார், *உலகம் சுற்றிய தமிழன்*, இலங்கைப் பயணம்

23. பேராசிரியர் முனைவர் கி. நாச்சிமுத்து, கம்பனும் கேரளமும், கட்டுரை, கம்பன் மலர்.

24. Prof. T.P. Meenakshisundaram, Presidential Address, All India Oriental Conference, Annamalai University, Dec. 26, 27 - 1955.

25. பேராசிரியர் முனைவர் கி. நாச்சிமுத்து, கம்பனும் கேரளமும், கம்பன் மலர்.

26. Prof. Pamla Rechman, Associate Professor, South Asian Religious, Oberlin College, U.S., The Hindu, March, 28, 1997.

27. *துவாரகை உண்மையில் இருந்ததா? நாகா கண்ணன், அமுதசுரபி, மார்ச், 2008*

28. *கருத்து,* Reader's Digest, 1965

29. The Mirror, Feb. 1984.

30. *முனைவர் பி. நசீம்தீன், தமிழ்ப் பேராசிரியர், கேரளப் பல்கலைக்கழகம்,* ***கோவிலன் சரிதம்,*** *ப. 12*

31. *முனைவர் கி. நாச்சிமுத்து, கேரள சமூகநீதிப் போராட்டங் கள், கட்டுரை*

32. *திருத்தொண்டர் புராணம்,* ***சேரமான் பெருமாள் நாயனார் புராணம்***

33. Prof. T.P. Meenakshisundaram, ***The Theory of Cankam Poetry,*** The Tamil Culture, Vol. I, No. 1, Feb. 1952

34. *'கூகுள்' - இணைய தளம்*

35. *'கிராமம் போவோமே' நிகழ்ச்சி, பாலமார்த்தாண்டபுரம், அகில இந்திய வானொலி, நாகர்கோயில்*

36. *பேராசிரியர் அவ்வை துரைசாமிப்பிள்ளை,* ***சேரமன்னர் வரலாறு.***

37. *இராசகோபாலாச்சாரியார், முன்னுரை, ஏட்டில் எழுதாக் கவிதைகள் தொகுப்பு, செ. அன்னகாமு*

38. *கல்வெட்டாய்வாளர் செ. இராசு, தினமலர், 18.07.2007*

39. The Hindu, June, 28, 2009

40. *ஐராவதம் மகாவேதன், மா. இராசமாணிக்கனார் நினைவுக் கட்டுரை, தினமணி, 11.08.2007*

41. *மா. சிவகுருநாத பிள்ளை,* ***சிவவடிவங்கள்,*** *தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*

42. Dr. P.S. Subramania Sastriyar, Historical Tamil Reader.

43. Sangam Age seal or brockage? The Hindu, Tuesday, 28.08.2007

44. Ashok S. Kothari, A Celebration of Indian Trees, The Hindu, 11.03.2008.

45. William Dabymple, Master Pieces in Bronze, The Hindu, Dec. 31, 2006.

46. Tryist with Tradition, The Hindu, April, 9, 2006

47. The Hindu, March, 30, 2002

48. செல்லம்மாள் பாரதி, *பாரதி நினைவுகள்*

*மற்றும்*

நூலாசிரியரின் *சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் வழிபாட்டு வரலாறு*

குளிர் தூங்கும் கோடைக்கானல் - வீடியோ ஒளிப்பேழை.

